


இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524









29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca














உதயம் 1576 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 19, 2026


# அரச பயங்கரவாதத்தின் திட்டமிடலின்படி ஏற்படுத்தப்பட்ட புதைகுழிகளில் இலங்கையில் மிகப்பெரிய தளமாக மாறியுள்ள "செம்மணி"

## காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் மத்தியில் பரவலான அச்சமும் பாரிய சந்தேகமும் என்று சட்டத்தரணி நிரஞ்சன் விளக்கம்



இலங்கையில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகளில், மிக அதிக எண்ணிக்கையிலான மனித என்புத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடமாகச் செம்மணி மாறியுள்ளமை மக்கள் மத்தியில் பரவலான அச்சத்தையும் பாரிய சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்று இந்த வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து யூன் 17ம் திகதி வரை மொத்தமாக 380 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறித்து, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். (தொடர்ச்சி 7ம் பக்கம்)

# நாளை 20ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள BEHIND ME INTERNATIONAL FOUNDATION விருது விழாவில் கௌரவம் பெற இலங்கையிலிருந்து வந்துள்ள நான்கு வெற்றியாளர்கள்!



நாளை 20-06-2026 சனிக்கிழமையன்று ஸ்காபுறோவில் நடைபெறவுள்ள **BEHIND ME INTERNATIONAL FOUNDATION** நடத்தும் விருது விழாவில் கௌரவம் பெறவும் பயனுள்ள மருத்துவக் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் வருகை தந்துள்ள இலங்கையின் வடக்கு கிழக்கு பகுதிகளில் பணியாற்றும் மருத்துவப் பெருந்தகைகள் டாக்டர் அஹமட் இக்பால் மற்றும் டாக்டர் கவிதா இந்திரநாத் ஆகியோர் மற்றும் **BIG BOSS** மற்றும் "லியோ" திரைப்படப் புகழ் ஜனனி அவரோடு இலங்கையில் சமூக ஊடகத் தளத்தில் புகழ்பெற்ற பேர்லிஜா ஆகிய நால்வரும் இலங்கையிலிருந்து பயணித்து வியாழக்கிழமை 18ம் திகதி பியர்சன் விமான நிலையத்தில் வந்திறங்கினார்கள்.

அவர்களை வரவேற்ற **BEHIND ME INTERNATION FOUNDATION and BEHIND ME INTERNATIONAL MEDIA** குழுமத்தின் தலைவர் கனா செல்வா- அவரது பாரியார் திபி கனா மற்றும் விழாக்குழு உறுப்பினர்கள் அவர்களுடன் "கனடா உதவும் பொற்கரங்கள்" அமைப்பின் ஸ்தாபகர் விசு கணபதிப்பிள்ளை ஆகியோர் காணப்படுகின்றனர். மேலும் விபரங்களுக்கு: 647 302 1189-647 706 1189














ontarioliberal.ca/ssw | @ontarioliberalparty
ஸ்கார்பரோ மக்களே!
உங்கள் மாகாண அரசிடமிருந்து
நீங்கள் இன்னும் அதிகமாகப் பெறுவதற்குத்
தகுதியானவர்கள்.
டக் ஃபோர்டின் 8 ஆண்டு ஆட்சிக்குப் பின்னர்,
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
குடும்பங்கள் அதிகமாகச் செலுத்துகிறார்கள்,
நீண்ட காலம் காத்திருக்கிறார்கள்,
மேலும் எதிர்பார்ப்பதிலும் பார்க்க குறைவாகவே
பெறுகிறார்கள்.
அஹ்சானுல் ஹாஃபிஸ்
ஸ்கார்பரோ தென்மேற்குத் தொகுதியின்
உங்களுக்கான
வேட்பாளர்
*Authorized by the Scarborough Southwest Riding Association
LIBERAL
AHSANUL
HAFIZ
THE CANDIDATE
FOR YOU IN
SCARBOROUGH
SOUTHWEST


நீங்கள் விரும்பும் HONDA வாகனங்களை ரமணன் திரு என்னும்
விற்பனை முகவரோடு தமிழில் உரையாடி வாங்கலாம்
Honda CHECKERED FLAG
Spring into action with NEW LOWER RATES.
THE 2026 CIVIC SPORT TOURING HYBRID
1.99% APR + LEASE UP TO 24 MONTHS ON ALL 2026 CIVIC MODELS
QUALIFIED HONDA OWNERS GET A $500 LOYALTY BONUS!
Spring into action with NEW LOWER RATES.
$0 DOWN PAYMENT + NEW LOWER RATES
Spring forward in pure style.
THE 2026 ACCORD TOURING HYBRID
2.49% APR + LEASE UP TO 24 MONTHS ON ALL 2026 ACCORD MODELS
QUALIFIED HONDA OWNERS GET A $750 LOYALTY BONUS!
$0 DOWN PAYMENT + NEW LOWER RATES
THE 2026 CR-V LX 2WD
LEASE FROM $115 WEEKLY 4.39% APR FOR 60 MONTHS
$750 LOYALTY BONUS!
$0 DOWN PAYMENT + $1,000 HONDA BONUS
THE 2026 CR-V TRAILSPORT HYBRID
LEASE FROM $143 WEEKLY 4.39% APR FOR 60 MONTHS
$750 LOYALTY BONUS!
THE 2026 HR-V EX-L
3.49% APR UP TO 24 MONTHS ON ALL REMAINING 2026 HR-V MODELS
QUALIFIED HONDA OWNERS GET A $500 LOYALTY BONUS!
THE 2026 PILOT SPORT
LEASE FROM $177 WEEKLY 5.69% APR FOR 60 MONTHS
QUALIFIED HONDA OWNERS GET A $1,000 LOYALTY BONUS!
#1 CIVIC Canada's Best-selling Car
CANADIAN CAR OF THE YEAR AWARDS 2026
ONTARIO BUILT. CANADIAN DRIVEN.
AutoTraderAwards BEST OVERALL CAR
HONDA
Ontario Honda Dealers Official Partner
Rafih AUTO GROUP
Midtown Honda
HONDA
RAMANAN THIRU
SALES CONSULTANT
647 818 6645
RESERVE YOURS TODAY
MADE WITH DOMESTIC & IMPORTED PARTS.
† See dealer for full details.
° O.A.C. Terms and conditions apply.

We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: R.N.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

- EDITOR IN CHIEF: R. N. Logendralingam
- GRAPHIC: Pathma & Yalini
- TECHNICAL: Janani and Bala
- PRINTERS: KT Web Printing Ltd.
- DISTRIBUTION: Uthayan Team

Phone: 416 752 1524 · Cell: 416 732 1608

4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2

website: www.uthayannews.ca · email: Uthayannews@yahoo.com

# உதயன் கதிரோட்டம்

## தமிழர் புதைகுழிகள் "செம்மணி" மற்றும் "முள்ளிவாய்க்காலில்" மாத்திரமல்ல, எம் தமிழ் மண் எங்கும் தசைகள் கரைந்த எலும்புகளை மூடியபடி மௌனவிரதத்தில்...

இலங்கையின் தமிழர் நிலம் பல்வேறு சிறப்புக்கள் கொண்டதாக மன்னர்கள் ஆட்சிக் காலத்திலிருந்து சிறப்பாகப் பேசப்பட்டு வந்தது. தமிழ் மன்னர் ஆண்ட வன்னியையும் யாழ்ப்பாணத்தையும் நீர் வளம் கொண்டதாக விளங்கும் வண்ணம் குளங்களையும் கால்வாய்களையும் கட்சினார் எம் மன்னர்கள். தொழில்நுட்ப அறிவு மங்கிக் கிடந்த அந்த காலப்பகுதியில் நீர்ப்பாசன திட்டங்களை நிறுவி நெல்போன்ற பயிர்களை பயன்தரும் வகையில் விவசாயத்தை மேற்கொண்டார்கள். பின்னாளில் பிற நாட்டவர்களால் ஆளப்பட்ட எமது தமிழ் மண்ணில் கல்விக் கூடங்கள் நிறுவப்பட அங்கு கல்வி கற்ற எம்மவர்கள் உயர்கல்வியைப் பெறுவதற்காய் கப்பல் ஏறி கடல் கடந்து கல்விச் செல்வத்தையும் பொருட் செல்வத்தையும் தேடியபடி தாயகம் திரும்பினார்.

இவ்வாறான சிறப்புக்கள் பலவற்றைக் கொண்டு செல்வமும் சிவந்த மண்ணும் கொண்ட பிரதேசமாக விளங்கிய எமது தமிழர் தாயகம் சுதந்திரத்திற்குப் பின்னர் இனரீதியாக ஒடுக்கப்பட்டு வந்ததனால் எமது சொந்த மண்ணை எமக்கு சொந்தமாக்குவோம் என்ற நோக்குடன் முதலில் அகிம்சை வழிப் போராட்டமும் பின்னர் இளைஞர் அணியினர் ஆரம்பித்த ஆயுத வழி போராட்டம் போன்றவை தென்னிலங்கை இனவாதிகளின் மோசமான அணுகு முறைகள் அரச பயங்கரவாதம் என்ற ஆயுதத்தை அவர்களின் கைகளில் எடுக்கச் செய்தன. இதனால் எமது சீரான தமிழினம் சிதறிச் செல்ல நேரிட்டது. ஆயிரக்கணக்கில் எமது மக்களின் உயிர்களை அரச பயங்கரவாதம் ஏந்தி நின்ற ஆயுதங்களால் பறிக்கப்பட்டன.

சி றுவர்கள் மற்றும் கைக்குழந்தைகள் உட்பட 380 மனித உடல்களுக்குச் சொந்தமான எலும்புகள் மீட்கப்பட்டதை அடுத்து, போரினால். முதலில் கைதுகள் இடம்பெற்று சிறைக்குள் அடைக்கப்படுவதாகவும் விசாரிக்கப்படுவதாகவும் வெளியுலகிற்கு தெரிவிக்கப்பட்டாலும், அரச பயங்கரவாதம் கைது செய்த எமது உறவுகளில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டு தமிழர் மண் எங்கும் புதைக்கட்டார்கள் என்ற “முட்களாய் எம் இதயங்களைக் குத்தும் செய்திகள் சிறிது சிறிதாக வெளிவந்தவண்ணம் உள்ளன.

எம் தமிழர் பகுதிகளில் பல இடங்களில் அகழ்ந்து எடுக்கப்படும் எலும்புகளும் ஏனைய தடயங்களும் எம்மவர்களை வயது பார்க்காமல் பால் என்று பார்க்காமல் கொரூரமான முறையில் கொலை செய்து புதைத்தது அரச பயங்கரவாதமும், அவ்வப்போது தொடர்ச்சியாக ஆட்சி அதிகாரத்தை தங்கைள் கைகளில் எடுத்த ஆட்சியின் தலைவர்களும்தான் என்ற கொடிய தகவல்களையும் தடயங்களையும் எமக்கு தந்த வண்ணம் உள்ளன.

கடந்த சில வருடங்களாக என்பிபி அரசாங்கம் பதவியேற்ற பின்னர் சில இடங்களில் “புதைகுழிகள்“ இருப்பதாக சந்தேகிப்பட்ட இடங்களில் அரச நிதிச் செலவுகளோடு அகழாய்வு செய்யப்படும் பணிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. தமிழ் பேசும் சட்டத்தரணிகளும் நீதிபதிகளும் அதிர்ச்சிக்குள்ளாகும் வகையில் நூற்றுக்கணக்கான எலும்புக் கூடுகள் மற்றும் சிறுவர் சிறுமியர்களின் விளையாட்டுப் பொருட்கள். கற்கை உபகரணங்கள் என பலவும் அகழ்ந்தெடுக்கப்படும் எலும்புக் கூடுகளோடு சேர்ந்து வருகின்றன. எம் இதயங்களை நொருங்கவும் செய்கின்றன.

இந்த வரிசையில் செம்மணி புகைகுழி பாதிக்கப்பட்ட வட பகுதியில், ஒரு வருடத்திற்கு முன்பு தற்செயலாகக் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழியாக அடையாளம் காணப்பட்டு தற்பொழுது நாட்டின் மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக மாறியுள்ளது.

2025 மே 15 ஆம் திகதி முதல் 2026 ஜூன் 17 ஆம் திகதி வரை கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலான காலப்பகுதியில், மூன்று கட்டங்களின் அடிப்படையில், செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் 81 நாட்கள் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில், 380 மனித உடல்களுக்கு உரிய எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 362 மனித உடல்களுக்கு உரிய முழுமையான அல்லது பகுதியளவிலான எலும்புக்கூடுகள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. அத்தோடு அகழ்வுப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் குழுவின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த வேளையிலேயே, ஜூலை 17 ஆம் திகதியன்று மனிதப் புதைகுழியிலிருந்து மேலும் 14 பேருக்குச் சொந்தமான எலும்புகள் புதிதாக மீட்கப்பட்டுள்ளன.

இது இவ்வாறிக்கையில், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் பாராளுமன்றத்திலும் எம் தமிழர் மண்ணில் இருப்பதாகச் சந்தேகிக்கப்படும் புதை குழிகள் தொடர்பாக கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், முல்லைத்தீவு - வட்டுவாகால் விகாரைக்குக் கீழே அகழ்வுகளை மேற்கொண்டால், இந்தச் செம்மணியை விடவும் பல மடங்கு பெரியதொரு மனிதப் புதைகுழி அடையாளம் காணப்படும் என்றும் அவர் குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் மற்றும் வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய புதைகுழிகள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

”எங்களுடைய தமிழ் இனத்தின் மீதான திட்டமிட்ட அழிவுகளை இலங்கை அரசினுடைய ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தொடர்ச்சியாகச் செய்துகொண்டே வந்திருக்கின்றார்கள். ஏற்கனவே ஆட்சியில் இருந்தவர்கள் எமது இனத்தை வன்முறையாக அழித்தமைக்கான அசைக்க முடியாத சாட்சிகள், இயற்கையின் நீதியால் தற்போது ஒவ்வொன்றாக வெளியே வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

செம்மணியில் தற்போதைய அகழ்வுகளின் மூலம் வெளிவரும் உண்மைகள் உலகத்தையே உலுக்கியுள்ளன. தமிழர் தாயகப் பகுதிகளில் இன்னும் எத்தனையோ இடங்களில் இவ்வாறான மனிதப் புதைகுழிகள் இரகசியமாக மூடிமறைக்கப்பட்டுள்ளன. அவற்றை முறையாகத் தோண்டத் தொடங்கினால், இன்னும் பேரதிர்ச்சியைத் தரும் வகையிலான மனித என்புக் குவியல்கள் தொடர்ச்சியாகக் கிடைத்துக்கொண்டே இருக்கும்.

குறிப்பாக, முல்லைத்தீவு வட்டுவாகால் பகுதியில் அமைந்துள்ள விகாரைக்குக் கீழே அகழ்வுகளை மேற்கொண்டால், செம்மணியை விட மிகப்பெரியதொரு மனிதப் புதைகுழி வெளிச்சத்துக்கு வரும். இதற்காக அந்த விகாரையை உடைத்துத்தான் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்பதில்லை. தற்கால நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி, “ஸ்கேன்“ செய்வதன் மூலமே அங்கு நிலத்தடியில் எத்தனை ஆயிரக்கணக்கான என்புத் தொகுதிகள் புதைக்கப்பட்டுள்ளன என்பதைத் துல்லியமாக ஆராய்ந்து அறிய முடியும்.

இதேபோல், கேப்பாப்பிலவு போன்ற இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த மற்றும் இருக்கின்ற பல இடங்களில் பாரிய மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என அப்பகுதி மக்கள் இன்றும் பலத்த அச்சத்துடன் இருக்கின்றார்கள்.

அரச பயங்கரவாதத்தின் திட்டமிடலின்படி ஏற்படுத்தப்பட்ட புதைகுழிகளில் இலங்கையில் மிகப்பெரிய தளமாக மாறியுள்ள எம்மண்ணின் “செம்மணி“ எனவும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் மத்தியில் பரவலான அச்சமும் பாரிய சந்தேகமும் என்று செம்மணி புதைகுழி தொடர்பான விடயங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்காக செயற்பட்டு வரும் சட்டத்தரணி நிரஞ்சன் அவர்கள் தனது அறிக்கையொன்றின் மூலம் விளக்கமளித்துள்ளார்.

”இலங்கையில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகளில், மிக அதிக எண்ணிக்கையிலான மனித என்புத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடமாகச் செம்மணி மாறியுள்ளமை மக்கள் மத்தியில் பரவலான அச்சத்தையும் பாரிய சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்று இந்த வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து யூன் 17ம் திகதி வரை மொத்தமாக 380 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறித்து, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

”இலங்கையில் இதுவரை அதிக எண்ணிக்கையிலான மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்ட ஒட்டுமொத்தப் புதைகுழியாக மன்னார் “சதொச“ மனிதப் புதைகுழியே முதலிடத்தில் காணப்படுகின்றது.

அந்த அடிப்படையில் நோக்கினால், தற்போது அகழ்ந்து எடுக்கப்பட்டு வரும் என்புத் தொகுதிகளின் எண்ணிக்கையின் படி, செம்மணி மனிதப் புதைகுழியானது இலங்கையின் இரண்டாவது பெரிய அகழ்வுத் தளமாகவே தற்சமயம் காணப்படுகின்றது.

இவ்வாறான அரச பயங்கரவாதத்தின் கோர முகத்தைக் காட்டும் விடயங்கள் பல வருடங்களுக்குப் பின்னர் எமக்கு முன்னால் காட்டப்படுகின்றமை மிகவும் கொடுமையானது என்பதை நாம் உணர்கின்ற இந்த நேரத்தில் சர்ச்சைகளுக்கு“ உள்ளாகியுள்ள திருகோணமலை கடற்படை “கன்சைட்“ சித்திரவதை முகாமிற்கு நீதவான் எம். எஸ். எம். சம்சுதீன் நேரில் சென்று பார்லையிட்டார் என்ற செய்தியும் எமது மக்களுக்கு கிட்டியுள்ளது

திருகோணமலை கடற்படை முகாமில் அமைந்துள்ள “கன்சைட்“ எனப்படும் நிலத்தடி சிறைச்சாலையில், கடந்த காலத்தில் பலர் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளின் அடிப்படையில், திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதிபதி எம். எஸ். எம். சம்சுதீன் கடந்த புதன்கிழமை 17ம் குறித்த சிறைச்சாலைக்கு நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டார்.

இந்த விசாரணையின்போது, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தனது விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்றும், அதன் முன்னேற்றம் குறித்த அறிக்கையை மூன்று நாட்களுக்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டார். மேலும், விசாரணைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்த மேலதிக அறிக்கையில், சம்பந்தப்பட்ட இடத்தின் காணொளிப் பதிவுகளையும் புகைப்படங்களையும் இணைத்துச் சமர்ப்பிக்குமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

இவ்வாறான பல விடயங்களும் தொடர் நடவடிக்கைகளும் அரசாங்கம் சார்பாகவும் நீதித்துறை சார்பாகவும் மேற்கொள்ளப்பட்டாலும் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவுகள் எங்கேயோ ஒரு இடத்தில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள் என்ற நம்பிக்கையில் வருடங்கள் பலவாக காத்திருக்கும் அவர்களது உறவுகளுக்கு இப்போது இருந்த நம்பிக்கைகள் தளர்ந்து போகலாம். அவ்வாறாயின் அவர்களுக்கு இழைக்கப்பட்ட துரோகங்களுக்கும் தவறுகளுக்கும் இலங்கையின் எந்த ஜனாதிபதியோ அன்றி எந்த அமைச்சரோ அன்றி எமது மக்கள் வாக்களித்து பாராளுமன்றத்திற்கு அனுப்பிய தமிழ் மக்கள் பிரதிநிதிகளில் எவரோ பதில் சொல்லியே தீர வேண்டும் என்ற நியாயத்தை நாம் இவ்வாரக் கதிரோட்டத்தில் பதிவு செய்கின்றோம்!

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மயிலிட்டி மக்கள் துயர் களைய துணை நிற்போம் என மக்கள் போராட்டத்தில் ஈ.பி.டி.பி. கட்சி உறுதி!



வாழ்விடங்களை இழந்து கடந்த 36 வருடங்களாக இன்னல்பட்டு வருகின்ற மக்களின் துயர் களைய ஈ.பி.டி.பி. துணையாக நிற்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட செயலகம் முன்பாக 16ம் திகதி செவ்வாய்க்கிழமை அன்று நடைபெற்ற மயிலிட்டி காணிகளை விடுவிப்பதற்கான போட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து, குறித்த போராட்டத்தில் ஈ.பி.டி.பி. கலந்து கொண்டிருந்த நிலையில் கட்சியின் ஊடகச் செயலாளர் பன்னீர்செல்வம் ஸ்ரீகாந் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனை மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அங்கு அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில், "மக்களின் காணி மக்களுக்கே சொந்தம் என்பதே எமது நிலைப்பாடாக இருக்கின்றது.

அந்த வகையில் கடந்த காலங்களில் அதிகாரத்தில் இருந்து, 18,500 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை விடுவித்திருந்தோம். எஞ்சிய காணிகளையும் விடுவிப்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

உயர் பாதுகாப்பு வலயக் காணிகள் மாத்திரமன்றி, வனவள திணைக்களம், வனஜுவராசிகள் திணைக்களம், தொல்லியல் திணைக்களம் போன்றவற்றினால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளையும் மீட்பதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

துதிஸ்டவசமாக ஏற்பட்ட ஆட்சி மாற்றம் காரணமாக அவற்றை பூரணப்படுத்த முடியவில்லை. எனினும், எமது மக்களின் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும், எமது மக்களின் எதிர்பார்ப்புக்கள் தென்னிலங்கைக்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும் என்பதிலும் உறுதியாக இருக்கின்றோம். எனவே மக்களின் நியாயமான போராட்டங்களுக்கு எமது ஆதரவு தொடரும்" ஏன்று தெரிவித்தார்.

# தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் 12வது தேசிய மாநாடு நடைபெறவிருக்கும் நிலையில் இயக்கத்தின் புதிய தலைவர் தெரிவு செய்யப்பெறுவார் என்ற எதிர்பார்ப்பு!

## செல்வம் அடைக்கலநாதனுக்கு எதிராக கிளர்ந்து எழுந்துள்ள நூற்றுக்கணக்கான அங்கத்தவர்கள்



தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் 12வது தேசிய மாநாடு வவுனியாவில் நடைபெற்று இருக்கும் வேளையில் கட்சியின் புதிய தலைவர் தெரிவு இடம்பெறும் எனவும் செல்வம் அடைக்கலநாதனிடமிருந்து தலைவர் பதவி பறிக்கப்பட வேண்டும் எனவும் கட்சியின் நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் தீவிரமாக முடிவெடுத்துள்ளதாகவும் அறியப்பெறுகின்றது.

இந்த மாநாட்டை யொட் வெளியிடப்பெற்றுள்ள பிரகடன அறிக்கையில் பல புதிய விடயங்கள் புகுத்தப்பெற்றுள்ளன என்றும் எமது வவுனியாச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

ஈழத் தமிழ் மக்களின் தாயக பூமியான வடக்கு கிழக்கு பிரதேசத்தை உள்ளடக்கிய எமது சுயநிர்ணய உரிமையை அனுபவிக்க கூடிய மீளப் பெறப்பட முடியாத பூரண அதிகாரம் உடைய சமஸ்டி முறையிலான சுயாட்சி அலகொன்றை அரசியல் தீர்வாக பெற்றுக் கொள்வதற்காக தொடர்ந்து அரசியல் ரீதியாக சகல நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவும்.

எமது மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட யுத்த குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் மற்றும் இனப்படுகொலை ஆகியவற்றுக்கான சர்வதேச நீதிப் பொறிமுறையை பெற்றுக் கொள்ளும் வரை உள்நாட்டு மற்றும் சர்வதேச சக்திகளோடு ஒன்றிணைந்து செயல்படவும்.

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கான நீதிப் பொறிமுறையை பெற்றுக் கொள்வதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவும்.

எமது தாயக மண்ணில் அரச இயந்திரங்களினால் தொடர்ந்தும் திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்பட்ட மற்றும் ஆக்கிரமிக்கப்பட்டு வரும் காணிகளை மீட்கவும் மேலதிகமான அபகரிப்புகளை தடுக்கவும் தொடர்ந்து உரிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவும்.

நிரந்தரமான அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ளும் வரையில் ஏற்கனவே அரசியல் யாப்பில் உள்ள மாகாண சபை முறைமையை முற்று முழுதாக நடைமுறைப்படுத்தவும் மாகாண சபை தேர்தல்களை விரைந்து நடத்த தொடர்ந்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கவும்.

எமது மக்களின் நலிந்து போன பொருளாதாரத்தை மீளக் கட்டியமைக்கும் முகமாக, பலதரப்பட்ட முதலீடுகளின் ஊடாக எமது மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தக்கூடிய இனக்குடிப் பரம்பலை பேணக்கூடிய தற்சார்பு பொருளாதார கட்டமைப்பை உருவாக்குவதற்கான அனைத்து வேலை திட்டங்களையும் அர்ப்பணிப்புடன் செயல்படுத்தவும்.

எமது சமுதாயத்தின் உள்ள அனைத்து தரத்தினரதும் வாழ்க்கை தரத்தினையும் சமூக மேம்பாட்டையும் பாதுகாப்பையும் உறுதி செய்யும் வகையில் நமது அரசியல் நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கவும்.

அனைத்து வேலை திட்டங்களையும் நடைமுறைச் சாத்தியமான வகையில் முன்னெடுப்பதற்கு சர்வதேச நேச சக்திகளை ஒருங்கிணைக்கவும் உரிய வேலைத்திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்கவும்.

தமிழ் தேசிய பரப்பில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளையும் சமூக அமைப்புகளையும் எமது பிரதான பலமாக விளங்குகின்ற புலம்பெயர் உறவுகளையும் ஒருங்கிணைத்து தமிழ் மக்களை ஒரு தேசமாக கட்டி எழுப்பும் அனைத்து வேலை திட்டங்களையும் அயராத முன்னெடுக்கவும்.

இப் பிரகடனம் விதந்துரைக்கிறது.

இதே நேரம் வவுனியாவில் வெளியிடப்பெற்றுள்ள துண்டுப்பிரசுரம் ஒன்றில் முன்னாள் தலைவர் செல்வம் அடைக்கலடநாதனின் தனிப்பட்ட ஒழுக்கம் தொடர்பாக அவர் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலும் அவருக்கு எதிரான நடவடிக்கையை கட்சி இனிவரும் நாட்களில் எடுக்கவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பணமோசடி தடுப்புச் சட்ட வழக்கில் "ஊழல் ஜனாதிபதி" மகிந்தாவின் புதல்வன் யோஷிதவின் மனு மீதான விசாரணைகள் நிறைவு!

## ஜூலை 3 இல் இறுதித் தீர்ப்பு என மேல்முறையீட்டு நீதிமன்றம் அறிவிப்பு






பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ் தனக்கெதிராகச் சுமத்தப்பட்டுள்ள "சதித்திட்டம்" என்ற குற்றச்சாட்டைத் தள்ளுபடி செய்யக் கோரி, முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரான யோஷித ராஜபக்ஷ தாக்கல் செய்திருந்த மனு மீதான விசாரணைகளை மேல்முறையீட்டு நீதிமன்றம் 15ம் திகதி அன்றுடன் நிறைவு செய்துள்ளது.

அத்துடன், இந்த மனு தொடர்பான இறுதித் தீர்ப்பு அல்லது உத்தரவு எதிர்வரும் ஜூலை மாதம் 3ஆம் திகதி பிரகடனப்படுத்தப்படும் என்றும் நீதிமன்றம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

நீதியரசர்களான அமல் ரணராஜா மற்றும் கலாநிதி சுமுது பிரேமச்சந்திர ஆகியோரைக் கொண்ட இருவர் அடங்கிய மேல்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இன்று இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த பின்னர் தீர்ப்புக்கான திகதி குறிக்கப்பட்டது.

மனுதாரரான யோஷித ராஜபக்ஷ சார்பில் நீதிமன்றத்தில் முன்னிலையான பிரபல சட்டத்தரணி ஹபீல் பாரிஸ் தனது வாதங்களை முன்வைக்கையில், "சட்டமா அதிபரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கில், எனது கட்சிக்காரருக்கு எதிராகச் சுமத்தப்பட்டுள்ள சதித்திட்டக் குற்றச்சாட்டை தற்போதைய சட்ட விதிகளின் கீழ் எவ்விதத்திலும் தொடர முடியாது" என்று சுட்டிக்காட்டி, அதனை நிராகரிக்குமாறு கோரினார்.

மறுபுறம், இந்த வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களம் சார்பில் முன்னிலையான பிரதி சொலிசிட்டர் ஜெனரல் ஜனக பண்டார, அரச தரப்பு நியாயங்களையும் குற்றச்சாட்டுகளுக்கான சட்டபூர்வ ஆதாரங்களையும் நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார்.

இரு தரப்பினரினதும் விரிவான சமர்ப்பிப்புகளைப் பதிவு செய்துகொண்ட நீதியரசர்கள் குழாம், வழக்கின் விசாரணைகளை உத்தியோகபூர்வமாக நிறைவு செய்வதாக அறிவித்ததுடன், ஜூலை 3 அன்று இதற்கான கட்டளை பிறப்பிக்கப்படும் என்றும் தெரிவித்தது.




# யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரி மாணவி ரூபிகா அருந்தவம் அவர்களுக்கு சிறந்த புத்தாக்க செயல்பாட்டிற்கான விருது



(17-06-2026)

வருடாவருடம் தேசிய ரீதியில் சிறந்த புத்தாக்குனர் களையும் புத்தாக்க செயற்பாடுகளையும் ஊக்கப்படுத்தும் வகையில் விருது வழங்கும் விழா SLASSCOM நிறுவனத்தின் ஆதரவுடன் இடம்பெற்று வருகிறது.

இவ் வருடத்திற்கான விழா காலி முகத்திடல் ITC ரத்னதீப (ITC Ratnadipa) விருந்தினர் விடுதியில் செவ்வாய்க்கிழமை அன்று (16.05.2026) இடம்பெற்றது.

இதில் வட மாகாணத்திற்கான பாடசாலை ரீதியில் சிறந்த புத்தாக்கமாகவும் இவ்வருடத்திற்கான சிறந்த புத்தாக்குனராகவும் யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையை சேர்ந்த செல்வி ரூபிகா அருந்தவம் அவர்கள் தெரிவு செய்யப்பட்டு அவருக்கான விருதும் சான்றிதழும் குறித்த நிகழ்வில் வழங்கி வைக்கப்பட்டது.

இதே மாணவி கடந்த ஜூன் 05 ஆம் திகதி மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் தேசிய ரீதியில் நடாத்தப்பட்ட காலநிலை மாற்றத்திற்கான புதிய கண்டுபிடிப்பு போட்டியிலும் பங்குபற்றி சிறப்பு சான்றிதழ் பெற்ற ஒரு வளர்ந்து வரும் புத்தாக்குனரும் ஆவார்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வவுனியா மாவட்டத்தில் டித்வா புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு பிரதி அமைச்சர் தெரிவிப்பு!

(17-06-2026)

வவுனியா மாவட்டத்தில் டித்வா புயலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீட்டுத் திட்டத்தை வழங்க துரித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் நீர் வழங்கல் வடிகாலமைப்பு பிரதி அமைச்சர் ரி.வி.சரத் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிற்கு 16ம் திகதி செவ்வாய்க்கிழமை விஜயம் செய்த அவர் செட்டிகுளம் கப்பாச்சி கிராமத்திற்கு சென்று அங்குள்ள நிலமைகளை அவதானித்தார்.

இதன்போது டித்வா புயல் காரணமாக அக் கிராமத்தில் பாதிப்படைந்த வீடுகள் மற்றும் மீள்குடியேறிய நிலையில் முழுமை பெறாத நிலையில் உள்ள மக்களின் வீடுகள் என்பவற்றை பார்வையிட்டதுடன், மக்கள் சந்திப்பிலும் ஈடுபட்டார்.

இதன்போது கருத்து தெரிவித்த பிரதி அமைச்சர், டித்வா புயல் காரணமாக வவுனியாவில் பல பகுதிகள் பாதிப்படைந்துள்ளன.



பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீட்டுத் திட்டங்கள் துரிதகதியில் வழங்கப்படும். அத்துடன் மீள்குடியேறிய மக்களின் முழுமை பெறாத நிலையில் உள்ள வீடுகளையும் கட்டி முடிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அத்துடன், வீரபுரம் பகுதியில் 70 இற்கும் மேற்பட்ட உப குடும்பங்களுக்கும் காணிகள் வழங்கப்பட்ட போதும், அவர்களுக்கு வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக அப்பகுதி மக்கள் தமக்கான வீட்டுத் திட்டத்தை பெற்றுத் தருமாறு கோரியுள்ளனர். இதனை சாதகமாக பரிசீலித்து அவர்களுக்கு தீர்வினையும் விரைவில் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இதன்போது தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் மற்றும் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



# ஈஸ்டர் தாக்குதல் விசாரணை தீவிரமடைவதால் சிலர் பதற்றம்! கோட்டா கைது என்பதும் வதந்தியே!

### சாட்சியங்களின்படியே அடுத்தகட்ட டசட்ட நடவடிக்கை என்கின்றது அநுர அரசு

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படவுள்ளார் என்று சமூக ஊடகங்களில் வெளியாகும் செய்திகள் முற்றிலும் வதந்தியானவை என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார். எவரையும் கைது செய்யும் நடவடிக்கை, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் திரட்டும் முறையான சாட்சியங்களின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில், “முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கைது செய்யப்படவுள்ளார் என்று சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாவதுடன், தம்மைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி அவர் மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார் என்றும் அறியமுடிகின்றது. எனினும், உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குதல்களுடன் அவருக்கு இருக்கும் தொடர்புகள் குறித்த விவரங்கள் தற்போதைக்கு என்னிடம் இல்லை.

ஒரு குற்றவியல் விசாரணை முறையான திசையில் நகரும் போது, அந்த உண்மைகள் தங்களை நோக்கி வந்துவிடுமோ என்ற அச்சத்தின் காரணமாகவே சிலர் இவ்வாறு பதற்றமடைந்து நீதிமன்றத்தை நாடக்கூடும். தற்போதைய அரசு எவ்வித அரசியல் பழிவாங்கல்களையும் செய்யாது. குற்றப் புலனாய்வுத் திணைக்களம் திரட்டும் சாட்சியங்களின் அடிப்படையிலேயே அடுத்தகட்ட சட்ட நடவடிக்கைகள் அமையும்.” - என்றார்.

இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காலத்தில் காத்தான்குடி மற்றும் சாய்ந்தமருது போன்ற பகுதிகளுக்கு வெடிபொருள்களை ஏற்றிச் சென்ற லொறி ஓட்டுநர், தற்போது விசாரணைகள் தீவிரமடைந்துள்ள சூழ்நிலையில் தனக்கு உயிருக்கு ஆபத்து இருப்பதாகக் கூறியுள்ளமை மற்றும் தனக்கு உரிய சாட்சிப் பாதுகாப்பு வழங்கப்படவில்லை என முன்வைத்துள்ள குற்றச்சாட்டு குறித்தும் இதன்போது அமைச்சரிடம் கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர், முக்கிய சாட்சிகளைப் பாதுகாப்பதில் நாட்டின் பாதுகாப்புப் பிரிவினர் எப்போதும் தீவிர அவதானத்துடன் செயற்பட்டு வருகின்றனர் என்று தெரிவித்தார். மேற்படி நபரால் ஊடகங்கள் வாயிலாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் மற்றும் விவரங்கள் குறித்து, சம்பந்தப்பட்ட பாதுகாப்புத் துறை உயர் அதிகாரிகளின் கவனத்துக்குத் தான் உடனடியாகக் கொண்டு செல்லவுள்ளார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# "தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து ஒற்றையாட்சி அரசமைப்பை நிறைவேற்ற தமிழரசு கட்சியும் தீவிரம்"

## இது ஒரு பேராபத்து என்று கஜேந்திரகுமார் எம்.பி. பகிரங்க எச்சரிக்கை



- ந.லோகதயாளன்

புதிய அரசமைப்பு என்ற பெயரில் "ஏக்கிய ராஜ்ஜிய" (ஒற்றையாட்சி) அரசமைப்பைத் தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து நிறைவேற்றுவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தீவிரம் காட்டி வருகின்றது என்றும், அவ்வாறு அது நிறைவேற்றப் பட்டால் தமிழ் மக்கள் தங்களின் உரிமைகளை இழந்து அடிமையினமாக மாற்றப்படும் பேராபத்து ஏற்படும் என்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

பருத்தித்துறை நகரின் மூன்றாம் வட்டாரத்துக்குட்பட்ட கோரியடி பகுதியில் செவ்வாய்க்கிழமை மாலை நகரபிதா வின்சென் டீ போல் டக்ளஸ் போல் தலைமையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: "வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் குறிப்பிட்ட தொகை வாக்குகளைப் பெற்று, அதன் மூலம் தேசிய மக்கள் சக்திக்கு 8 நாடாளுமன்ற உறுப்பினர்கள் கிடைத்துள்ளனர். இதனைத் தமிழ் மக்கள் தமக்கு வழங்கிய ஆணையாகத் தேசிய மக்கள் சக்தி சர்வதேச ரீதியாகக் காட்டி வருகின்றது. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் காணப்படும் இந்த அரசு, புதிய அரசமைப்பு என்ற பெயரில் 2015-2019 காலப்பகுதியில் நல்லாட்சி அரசால் உருவாக்கப் பட்ட "ஏக்கிய ராஜ்ஜிய" அரசமைப்பை நிறைவேற்றத் தீவிரம் காட்டி வருகின்றது.

அதனை உருவாக்குவதில் நல்லாட்சி காலத்தில் துணைநின்ற சுமந்திரன், இப்போதும் அதற்கு ஆதரவு வழங்குவதில் தீவிரமாக உள்ளார். அந்த அரசமைப்புக்கு எதிராகத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவராவது வாக்களித்தால், அவர்களைக் கட்சியில் இருந்து நீக்குவதாகக் கட்சியின் செயலாளர் என்ற ரீதியில் சுமந்திரன் கடுமையாக எச்சரித்துள்ளார். அன்று கூட்டமைப்பாக இருந்தவர்கள் இன்று வீடு, சங்கு எனப் பிரிந்து நிற்கின்றனர்.

தேசிய மக்கள் சக்தி, தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி என வடக்கு, கிழக்கில் உள்ள 19 நாடாளுமன்ற உறுப்பினர்களில், எம்மைத் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) தவிர ஏனைய 18 பேரும் இந்த அரசமைப்புக்கு ஆதரவு வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அரசமைப்பை மாற்ற வேண்டுமானால் அதற்குச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அப்படி ஒரு வாக்கெடுப்பு நடந்தால், தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் அதற்கு எதிராக வாக்களிக்க வேண்டும். ஏனெனில், "ஏக்கிய ராஜ்ஜிய" அரசமைப்பின் மூலம் இந்த நாடு சிங்களவர்களுக்கானதாக முற்றிலுமாக மாற்றப்பட்டுவிடும். அதன் பின்னர் தமிழர்கள் அடிமை இனமாக மாறும் பேராபத்து ஏற்படும். ஆகவே, எமது உரிமைகளை ஒருபோதும் நாம் விட்டுக்கொடுக்க முடியாது." - என்றார்.

இந்த மக்கள் சந்திப்பின் போது, பருத்தித்துறை நகர சபையின் சமகால செயற்பாடுகள் தொடர்பான விளக்கங்கள் மக்களுக்கு வழங்கப்பட்டதோடு, பொதுமக்களின் முறைப்பாடுகள் மற்றும் அபிப்பிராயங்கள் கேட்டறியப்பட்டன.

கோரியடி வாழ் மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக, வட்டியின்றி இலகு தவணையில் மீளச் செலுத்தக்கூடியவாறு தலா ஒரு இலட்சம் ரூபா சுழற்சிமுறைக் கடன் திட்டத்தை முன்னெடுப்பதற்காக, நகர பிதா டக்ளஸ் போல் தனது சொந்த நிதியிலிருந்து ஐந்து இலட்சம் ரூபாவை வழங்கியுள்ளார். இதற்கான காசோலை அவராலேயே சங்கத் தலைவரிடம் கையளிக்கப்பட்டது.

அண்மையில் வடமராட்சி கடலில் மீன்பிடிக்கச் சென்ற போது மாயமாகிக் காணாமல்போன கோரியடி மீனவரான சு.சுஜிக்குமாரின் பிள்ளைகளின் கல்வி கற்கும் காலம் முழுவதுக்குமான கல்விச் செலவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பொறுப்பேற்றுள்ளது. அத்துடன், அந்தப் பிரதேசத்தில் கல்வி கற்கும் ஏனைய சிறுவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் இதன்போது வழங்கி வைக்கப்பட்டன.



# இலங்கை – பிரித்தானிய கடற்படைத் தொடர்பு விவகாரம்:

## மகிந்த ராஜபக்சவின் புதல்வன் யோஷித ராஜபக்ஷ முற்பகலில் கைதாகி பின்னர் பிற்பகலில் பிணை



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் புதல்வரனான யோஷித ராஜபக்ஷவைப் பிணையில் விடுதலை செய்யுமாறு கொழும்பு நீதிவான் நீதிமன்றம் 17ம் திகதி புதன்கிழமை அன்று பிற்பகல் உத்தரவிட்டுள்ளது. 17ம் திகதி அன்று முற்பகல் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தலா 5 மில்லியன் ரூபா பெறுமதியான மூன்று சரீரப் பிணைகளில் சந்தேகநபரை விடுதலை செய்ய உத்தரவிட்ட கொழும்பு மேலதிக நீதிவான் லஹிரு சில்வா, அவருக்கு வெளிநாட்டுப் பயணத்தடையும் விதித்து உத்தரவிட்டுள்ளார்.

இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் அதிகாரிகள் மற்றும் பிரதிவாதி தரப்புச் சட்டத்தரணிகளால் முன்வைக்கப்பட்ட சமர்ப்பணங்களை நீண்ட நேரம் பரிசீலித்த பின்னரே மேலதிக நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

இலங்கை கடற்படை மற்றும் பிரித்தானிய அரச கடற்படை அக்கடமி ஆகியவற்றுடனான யோஷித ராஜபக்ஷ வின் தொடர்பு மற்றும் செயற்பாடுகள் குறித்து தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் விசாரணை ஒன்றுக்காக, அவரிடம் வாக்குமூலம் பெறுவதற்கு இலஞ்ச, ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவினால் அழைப்பாணை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய, இன்று காலை ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகியிருந்த யோஷித ராஜபக்ஷவிடம் அதிகாரிகள் நீண்ட விசாரணை நடத்தினர். அதன் பின்னர், விசாரணைகளின் அடிப்படையில் அவர் முற்பகல் வேளை கைது செய்யப்பட்டு பிற்பகலில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட போதே இந்தப் பிணை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

# கல்முனை – பாண்டிருப்பு நாவலர் அறநெறி பாடசாலை மாணவர்களின் தேவைக்காக "உதவும் பொற்கரங்கள் கனடா" அமைப்பினால் இசைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன



கல்முனை - பாண்டிருப்பு நாவலர் அறநெறி பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன் மற்றும் கலைத்திறனை மேம்படுத்தும் நோக்கில், இசைக்கருவிகளை கொள்வனவு செய்வதற்கான நிதி உதவி, உதவும் பொற்கரங்கள் கனடா அமைப்பினால் வழங்கப்பட்டுள்ளது.

அறநெறிப்பாடசாலை அதிபர் திரு லக்குணம் விடுத்திருந்த வேண்டுகோளின் அடிப்படையில், குறித்த நிதி 14-06-2026 அன்று பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கி வைக்கப்பெற்றது.

நிகழ்வில், உதவும் பொற்கரங்கள் அமைப்பின் தாயக இணைப்பாளர் திரு என். சௌவியதாசன், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு கன. வரதராஜன் மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் திரு கா. சாந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டு நிதியை கையளித்தனர்.

உதவும் பொற்கரங்கள் அமைப்பின் பணிப்பாளர் கனடா வாழ் விசு கணபதிப்பிள்ளை அவர்களின் வழிகாட்டுதலின் கீழ், கல்வி மற்றும் மாணவர் மேம்பாட்டை முன்னிறுத்தி பல்வேறு பகுதிகளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் சமூகநலப் பணிகள் பாராட்டுக்குரியவையாக அமைந்துள்ளன என்பதும் கடந்த பல வருடங்களாக இவ்வாறான உதவிகளை அவர் மலையகம் மற்றும் வடக்கு மாகாணம் ஆகிய பகுதிகளில் உள்ள மாணவர்களுக்கும் வழங்கி வருகின்றார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# மன்னார் நகரில் "வெளிநாட்டு உயர்கல்வி வழிகாட்டல் மையம்" வைபவரீதியாக ஆரம்பிக்கப்பெற்றது!






வெளிநாடுகளில் உயர் கல்வியைத் தொடர விரும்பும் இளைஞர், யுவதிகளுக்கான வழிகாட்டல் மையமான இன்சிவ் குளோபல் பிரைவேட் நிறுவனம் மன்னாரில் 16-06-2026 அன்று செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் தொலைத்தொடர்பு நிலையத்திற்கு (Telecom) அருகாமையில் அமைக்கப் பட்டுள்ள இந்த நிறுவனம், வெளிநாட்டு உயர்கல்வி வாய்ப்புகளைப் பெறுவது, கல்வி பயிலும் போதே வேலைவாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ளுதல், தங்குமிட வசதிகள் மற்றும் நிரந்தர வதிவிட உரிமையைப் பெற்றுக் கொள்வதற்கான ஆலோசனைகளை வழங்குவதை முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது.

மட்டக்களப்பு, வவுனியா, யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் ஏற்கனவே வெற்றிகரமாகச் செயற்பட்டு வரும் இந்த நிறுவனம், தற்போது தனது சேவையை மன்னார் மாவட்டத்திலும் விரிவுபடுத்தியுள்ளது.

குறித்த நிகழ்வில் நிறுவனத்தின் இயக்குனர் மொலினி ஹரீந்திரன், மத குருமார்கள், பணியாளர்கள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர்.

வெளிநாடுகளில் கல்வி மற்றும் வேலைவாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு இந்த மையம் ஒரு சிறந்த வழிகாட்டியாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# மன்னார் மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கலை மன்றம் களுக்கிடையிலான மாவட்ட மட்டத்திலான குழுப் பாடல் (கிராமிய) போட்டிகள்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்







2026 ஆம் ஆண்டுக்கான வடக்கு மாகாண பண்பாட்டு அபிவிருத்தி செயற்றிட்டத்தின் ஓர் அங்கமாக வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் அனுசரணையில் பதிவு செய்யப்பட்ட கலை மன்றம் களுக்கிடையிலான மாவட்ட மட்டத்திலான குழுப் பாடல் (கிராமிய) போட்டிகள் 16ம் திகதி செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது.

இப்போட்டிகள் மன்னார் மாவட்ட சிரேஸ்ட கலாசார உத்தியோகத்தர் இ. நித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த இந்நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலாளர். ம. பிரதீப், அனர்த்த முகாமைத்துவ சேவைகள் உதவிப் பணிப்பாளர். க. திலீபன், மாவட்ட செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி. எம்.ரி.வி.பி றெவெல் ஆகியோரும் அருட்தந்தை, கலாசார உத்தியோகத்தர்கள், பயிற்றுவிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

போட்டி முடிவுகளில், (1) முதலாம் இடம் - புனித கார்மேல் அன்னை கலாமன்றம் (நானாட்டான்), (2) இரண்டாம் இடம் - புனித மரிய கொறற்றி கலைமன்றம் (மடு), (3) மூன்றாம் இடம் - கலையருவி கலைஞர் மன்றம் (மன்னார்), (4) நான்காம் இடம் - கலை கலாசார மன்றம் (மாந்தை மேற்கு), (5) ஐந்தாம் இடம் - புனித யோசெப் வாஸ் கலைமன்றம் (முசலி) ஆகிய இடங்களையும் பெற்றுக்கொண்டனர்.

# தமிழ் மண்ணில் "விஸ்வரூபம்" எடுக்கும் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம்:

இலங்கை செய்திகள் Sri Lanka News



## சர்வதேசமும் இலங்கை அரசாங்கமும் என்ன பதில் சொல்லப் போகின்றன என்று வினாவுகின்றார் என்றும் ரவிகரன் எம்.பி. அதிர்ச்சித் தகவல்.?

- ந.லோகதயாளன்

செம்மணி மனிதப் புதைகுழியில் பிஞ்சுக் குழந்தைகள், சிறுவர்கள், பெரியவர்கள் எனத் தமிழ் மக்கள் குடும்பம் குடும்பமாகக் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்டுள்ளனர். இது தற்சமயம் இலங்கையின் மிகப்பெரிய மனிதப் பேரவலத்தின் சாட்சியாக உருவெடுத்திருக்கும் நிலையில், இதற்குச் சர்வதேச நாடுகளும் இலங்கை அரசும் என்ன பதிலைக் கூறப்போகின்றன?" - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன், முல்லைத்தீவு - வட்டுவாகால் விகாரைக்குக் கீழே அகழ்வுகளை மேற்கொண்டால், இந்தச் செம்மணியை விடவும் பல மடங்கு பெரியதொரு மனிதப் புதைகுழி அடையாளம் காணப்படும் என்றும் அவர் குற்றச்சாட்டொன்றை முன்வைத்துள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் மற்றும் வடக்கு, கிழக்கில் உள்ள ஏனைய புதைகுழிகள் குறித்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: "எங்களுடைய தமிழ் இனத்தின் மீதான திட்டமிட்ட அழிவுகளை இலங்கை அரசினுடைய ஒவ்வொரு ஆட்சியாளர்களும் தொடர்ச்சியாகச் செய்துகொண்டே வந்திருக்கின்றார்கள். ஏற்கனவே ஆட்சியில் இருந்தவர்கள் எமது இனத்தை வன்முறையாக அழித்தமைக்கான அசைக்க முடியாத சாட்சிகள், இயற்கையின் நீதியால் தற்போது ஒவ்வொன்றாக வெளியே வெளிப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

செம்மணியில் தற்போதைய அகழ்வுகளின் மூலம் வெளிவரும் உண்மைகள் உலகத்தையே உலுக்கியுள்ளன. தமிழர் தாயகப் பகுதிகளில் இன்னும் எத்தனையோ இடங்களில் இவ்வாறான மனிதப் புதைகுழிகள் இரகசியமாக மூடிமறைக்கப்பட்டுள்ளன. அவற்றை முறையாகத் தோண்டத் தொடங்கினால், இன்னும் பேரதிர்ச்சியைத் தரும் வகையிலான மனித என்புக் குவியல்கள் தொடர்ச்சியாகக் கிடைத்துக்கொண்டே இருக்கும்.

குறிப்பாக, முல்லைத்தீவு வட்டுவாகால் பகுதியில் அமைந்துள்ள விகாரைக்குக் கீழே அகழ்வுகளை மேற்கொண்டால், செம்மணியை விட மிகப்பெரியதொரு மனிதப் புதைகுழி வெளிச்சத்துக்கு வரும். இதற்காக அந்த விகாரையை உடைத்துத்தான் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்க வேண்டும் என்பதில்லை. தற்கால நவீன தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி, "ஸ்கேன்" செய்வதன் மூலமே அங்கு நிலத்தடியில் எத்தனை ஆயிரக்கணக்கான என்புத் தொகுதிகள் புதைக்கப்பட்டுள்ளன என்பதைத் துல்லியமாக ஆராய்ந்து அறிய முடியும்.

இதேபோல், கேப்பாப்பிலவு போன்ற இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்த மற்றும் இருக்கின்ற பல இடங்களில் பாரிய மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என அப்பகுதி மக்கள் இன்றும் பலத்த அச்சத்துடன் இருக்கின்றார்கள்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பெரும்பாலான இடங்களில் அப்பாவிப் பொதுமக்கள் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டு, கூட்டங்கூட்டமாகப் புதைக்கப்பட்டிருக்கிறார்கள். சந்தேகத்துக்குரிய அந்த மனிதப் புதைகுழிகள் அனைத்தும் சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் முழுமையாகத் தோண்டப்பட்டு விசாரணைகள் நடத்தப்பட வேண்டும். இந்த விவகாரத்தில் சர்வதேச சமூகம் நேரடியாகத் தலையிட்டு, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்குப் பாரபட்சமற்ற நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என்பதே எங்களின் பிரதான எதிர்பார்ப்பாகும்." - என்றார்.

# அரச பயங்கரவாதத்தின் திட்டமிடலின்படி ஏற்படுத்தப்பட்ட புதைகுழிகளில் இலங்கையில் மிகப்பெரிய தளமாக மாறியுள்ள எம்மண்ணின் "செம்மணி"



## காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் மத்தியில் பரவலான அச்சமும் பாரிய சந்தேகமும் என்று சட்டத்தரணி நிரஞ்சன் விளக்கம்

இலங்கையில் அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழிகளில், மிக அதிக எண்ணிக்கையிலான மனித என்புத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்ட இடமாகச் செம்மணி மாறியுள்ளமை மக்கள் மத்தியில் பரவலான அச்சத்தையும் பாரிய சந்தேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது என்று இந்த வழக்கில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் சார்பில் முன்னிலையாகும் சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் தெரிவித்தார்.

செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து யூன் 17ம் திகதி வரை மொத்தமாக 380 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளமை குறித்து, ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான விளக்கமளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: "இலங்கையில் இதுவரை அதிக எண்ணிக்கையிலான மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்ட ஒட்டுமொத்தப் புதைகுழியாக மன்னார் "சதொச" மனிதப் புதைகுழியே முதலிடத்தில் காணப்படுகின்றது.

அந்த அடிப்படையில் நோக்கினால், தற்போது அகழ்ந்து எடுக்கப்பட்டு வரும் என்புத் தொகுதிகளின் எண்ணிக்கையின் படி, செம்மணி மனிதப் புதைகுழியானது இலங்கையின் இரண்டாவது பெரிய அகழ்வுத் தளமாகவே தற்சமயம் காணப்படுகின்றது.

ஆயின், திட்டமிட்டு மனித உடல்கள் புதைக்கப்பட்ட "அடையாளம் காணப்பட்ட மனிதப் புதைகுழி" என்ற சட்ட ரீதியான கோணத்தில் பார்த்தால், செம்மணி மனிதப் புதைகுழியே இலங்கையின் மிக அதிக எண்ணிக்கையான மனித என்புத் தொகுதிகள் கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய மனிதப் புதைகுழித் தளமாக இன்று உருவெடுத்துள்ளது.

குறுகிய காலப்பகுதிக்குள் இவ்வளவு அதிகமான எலும்புக்கூடுகள் இங்கு கண்டெடுக்கப்படுகின்றமை சாதாரணமான ஒன்றல்ல. இது இப்பிரதேச மக்கள் மத்தியிலும், குறிப்பாகத் தங்களது உறவுகளைத் தொலைத்துவிட்டுத் தவிக்கும் காணாமல் ஆக்கப்பட்டோரின் குடும்பங்கள் மத்தியிலும் மிகப்பாரிய சந்தேகங்களையும், அச்ச உணர்வையும் தோற்றுவித்துள்ளது.

எவ்வாறெனினும், இப்பகுதியின் ஒட்டுமொத்த அகழ்வுப் பணிகளும் நிறைவடைந்து, முறையான அறிவியல் மற்றும் சட்டபூர்வ விசாரணைகள் முழுமையாக முற்றுப்பெற்ற பின்னரேயே, இது சம்பந்தமான இறுதி முடிவுகளையும் உண்மைகளையும் எம்மால் துல்லியமாக அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும்." - என்றார்.

அமெரிக்காவில் உணவகம் ஒன்றில் வேலை வாய்ப்பு




Chef-Cook (சமையல் வல்லுனர் மற்றும் உதவியாளர்கள்)
அமெரிக்காவில் உள்ள உயர்தர உணவகம் ஒன்றிக்கும் அனுபவமுள்ள Chef-Cook (சமையல் வல்லுனர் மற்றும் உதவியாளர்கள்) ஆகியோர் தேவை.
விண்ணப்பதாரர்கள் கனடிய குடியுரிமை உள்ளவர்களாக இருக்க வேண்டும்.
அத்துடன் தமிழ்-மலையாளம் - ஹிந்தி - தெலுங்கு - ஆங்கிலம் பேசத்தெரிந்தவர்களாக இருந்தால் முன்னுரிமை அளிக்கப்படும். தென்னிந்திய மற்றும் மேற்கிந்திய உணவுகள் தயாரிப்பதில் அனுபவம் கொண்டிருக்க வேண்டும்.
WhatsApp Text Messages மூலம் தயவு செய்து விண்ணப்பங்களை அனுப்பவும்.
அதில் கீழ்க் கண்ட விபரங்களையும் இணைக்கவும்: விண்ணப்பதாரியின் வயது, திருமண நிலை, மற்றும் தொலைபேசி எண்.

விண்ண்ப்பம் அனுப்பவேண்டிய எண்: (937) 475-5992

# யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'மூத்தோர் ஒன்றுகூடல்'

## மூத்தவர்களும் ஜென்ஸிகளும்

- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -



கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் பலாலி வீதியில் அமைந்துள்ள ராஜேஸ்வரி மண்டபத்தில் ஒரு சந்திப்பு இடம்பெற்றது. மூத்தோர் ஒன்றுகூடல் என்று அழைக்கப்பட்ட அந்தச் சந்திப்பானது யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்ட "எங்கட புத்தகங்கள்" என்ற அமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்டது. கடந்த ஆண்டும் இதே மண்டபத்தில் முதலாவது ஒன்றுகூடல் இடம்பெற்றது. இது இரண்டாவது. இந்த இரண்டாவது ஒன்றுகூடலில் கிட்டத்தட்ட 50க்கும் குறையாதவர்கள் வந்திருந்தார்கள்.

"அனுபவத்தால் மூத்தவர்கள், அறிவால் மூத்தவர்கள், ஆற்றலால் மூத்தவர்கள்" என்று பல்வேறு வகையிலும் மூத்தவர்களை ஒன்றுகூட்டி, உணவருந்தி சமூகத்திற்குப் பயன்தரும் விடையங்களை உரையாடுவது இந்த சந்திப்புகளின் நோக்கமாகும். அழைப்பிதழில் இரண்டு கேள்விகள் கேட்கப்பட்டிருந்தன. இக் கேள்விகளின் மீது கலந்துரையாடல் இடம்பெறும் என்று கூறப்பட்டது. "நமது இளைஞர்களை ஒழுக்கமானவர்களாகவும் அறநெறி எண்ணம் கொண்டவர்களாகவும் நாம் வளர்கிறோமா?" என்பது முதலாவது கேள்வி. "அவர்களை சரியான பாதையில் வழிநடத்த நாம் எடுக்கவேண்டிய நடைமுறை நடவடிக்கைகள் எவை?" என்பது இரண்டாவது கேள்வி.

வந்திருந்த மூத்தோர் 6 பேர்களைக் கொண்ட குழுக்களாக மேசைகளில் ஒழுங்கமைக்கப்பட்டார்கள். நான் இருந்த மேசையில் மூன்று பெண்களும் மூன்று ஆண்களும் இருந்தார்கள். பால் அசமத்துவம் இல்லாத ஒரு குழு. அதில் மருத்துவர், கலாச்சார உத்தியோகத்தர், ஆவணச் செயற்பாட்டாளர், சமூகச் செயற்பாட்டாளர், இளம் இசையமைப்பாளர்... என்றிவ்வாறாக வெவ்வேறு துறைகளைச் சேர்ந்த ஆறு பேர் இருந்தோம். வயதால் இளைய ஒருவரும் எங்கள் குழுவில் இருந்தது தனிச்சிறப்பு.

உரையாடலின் போக்கில் பின்வரும் விடயங்களை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. இது பின்னர் குழுக்களைப் பிரதிநிதித்துவ படுத்தியவர்கள் உரையாற்றும் போதும் தொகுத்து அவதானிக்கப்பட்டது. முதலாவதாக சுட்டிக்காட்டப்பட்ட விடயம், இளையோர் மட்டுமல்ல மூத்தோரும் அதாவது இளையோருக்கு வழிகாட்ட வேண்டிய வயதில் உள்ளவர்களும், பொறுப்பில் உள்ளவர்களும் அதற்குவேண்டிய மூப்போடும் தகைமையோடும் முதிர்ச்சியோடும் இருக்கிறார்களா? என்று கேள்வி.

எமது குழுவில் அமர்ந்திருந்த பெரும்பான்மையானவர்கள் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டினார்கள். சமூகத்தில் இளையோர் மட்டுமல்ல முதியோர் குறிப்பாக நடுத்தர வயதுடையவர்களின் குடும்பங்கள் பலவற்றில் உறவுகள் சுமூகமாக இல்லை என்று. அதாவது கணவன் மனைவி இருவரும் இணைந்து முடிவெடுக்க முடியாதஅளவுக்கு குடும்பங்களுக்குள் முரண்பாடு அதிகரித்து வருகிறது என்று. பெற்றோர் பிள்ளைகளுக்கு வழிகாட்ட முடியாத அளவுக்கு பிரிந்தும் முரண்பட்டும் காணப்படுகிறார்கள் என்றும் கூறப்பட்டது. மிகக்குறிப்பாக பெற்றோர் பிள்ளைகளோடு செலவழிக்கும் நேரம் போதாது என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. கைபேசிப் பாவனை, கேபிள் தொலைக்காட்சி போன்றவைகள் காரணமாக பெற்றோர் குறைந்த அளவு நேரத்தைத்தான் பிள்ளைகளோடு செலவழிக்கிறார்கள் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் பாடசாலைகளில் பிள்ளைகள் போதிய அளவுக்கு செதுக்கப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப்பட்டது. பிள்ளைகளின் பெரும்பாலான நேரம் தனியார் கல்வி நிறுவனங்களில் கழிகிறது என்றும் கூறப்பட்டது. முன்னம் ஒரு காலம் "மொக்கு பிள்ளைகளுக்குத்தான் டியூஷன் தேவை. ஆனால் இப்பொழுது டியூஷன் எல்லாருக்கும் அத்தியாவசியமானதாக மாறிவிட்டது" என்று ஒரு மூத்த இலக்கியச் செயற்பாட்டாளராகிய ஜேசுராசா தெரிவித்தார். பிள்ளைகள் விளையாட்டுக்களில் ஈடுபடுவது குறைவு என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

வரலாற்றில் எல்லா மூத்த தலைமுறையும் இளைய தலைமுறை மீது முறைப்பாடுகளை கூறுவது வழமை. அதுபோல இளைய தலைமுறையும் மூத்த தலைமுறையால் தன்னை விளங்கிக்கொள்ள முடியவில்லை என்று முறைப்பாட்டை வைப்பதுண்டு. எனினும் தகவல் புரட்சிக்குப் பின் இரண்டு தலைமுறைகளுக்கும் இடையிலான இடைவெளியானது ஒரு விதத்தில் தொழில்நுட்ப இடைவெளியாகவும் வளர்ந்து விட்டது. தனது திறண் பேசியில் தனக்குத் தோன்றும் எல்லாப் பிரச்சினைகளையும் ஒரு தாத்தா தன் பேரப் பிள்ளையிடம்தான் கேட்டுத் தீர்த்துக் கொள்வார். தொழில்நுட்ப ரீதியாக தனக்குள்ள அந்த மேலாண்மையை பேரப்பிள்ளை ஏனைய விடயங்களிலும் பிரயோகிக்க முற்படலாம். இந்தத் தொழில்நுட்பப் பிளவு ஆனது ஏனைய பல விடயங்களிலும் தாத்தா சொல்வதை பிள்ளை கேட்காமல் போவதற்குக் காரணமாக அமைகிறதா? அதைவிட முக்கியமாக, பிள்ளை சொல்வதை தாத்தாக்களும் அப்பா அம்மாக்களும் கேட்கிறார்கள் என்பதைத்தான் தமிழ் நாட்டில் விஜய்க்கு கிடைத்த வெற்றி உணர்த்துகின்றதா?

எனவே மூத்த தலைமுறைக்கும் இளைய தலைமுறைக்கும் இடையிலான இடைவெளி எனப்படுவது தகவல் புரட்சிக்கு பின் புதிய பரிமாணத்தை அடைந்திருக்கிறது. பிளாட்டோ கூறியது போல "கதை சொல்லிகள் சமூகத்தை ஆளுகிறார்கள்". ஆனால் இன்றைக்கு தாத்தா, பாட்டி போன்றவர்கள் பேரப்பிள்ளைகளுக்கு கதை சொல்வது குறைவு. கதை சொல்லிகளின் இடத்தை யூரியூப்பர்கள் பிடித்து விட்டார்கள். அவர்கள் சொல்லும் கதைகள் இளைய தலைமுறையை எங்கே கொண்டுபோய்ச் சேர்க்கும்?

ராஜேஸ்வரி மண்டபத்தில் நடந்த சந்திப்பில் மதிய இடைவெளிக்குப் பின் உரையாற்றும் பொழுது இலக்கியச் செயற்பாட்டாளர் ஆகிய சத்தியதேவன் ஒரு முக்கிய விடயத்தைச் சுட்டிக்காட்டினார். இளைய தலைமுறை எப்படி இருக்க வேண்டும் என்பதனை ஒரு மூத்த தலைமுறை மட்டும் தீர்மானிப்பது சரியா? அதுதொடர்பாக இளைய தலைமுறை என்ன கருதுகிறது என்பதை நாங்கள் அவர்களிடம் கேட்க வேண்டாமா? அவர்கள் எங்களைப் பற்றி என்ன கருதுகிறார்கள் என்பதை நாங்கள் அறிய வேண்டாமா? என்று.

அது மிக முக்கியமான கேள்வி. முழுக்க முழுக்க மூத்த தலைமுறையின் நோக்கு நிலையில் இருந்து இளைய தலைமுறையைச் செதுக்க முடியாது. கலீல் ஜிப்ரான் கூறியது போல "எங்களுடைய குழந்தைகள் எங்களுடையவை அல்ல.எங்களுக்கு ஊடாக வந்தவைதான்". அவர்கள் தங்களுடைய வாழ்க்கையைத்தான் வாழப் போகிறார்கள். எனவே அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதையும் கேட்க வேண்டும். ஆனால் அன்றைய சந்திப்பில் அவ்வாறு இளைய தலைமுறையைச் சேர்ந்தவர்கள் அநேகமாக இருக்கவில்லை.

மேலும், ஒழுக்கம் அறம் என்பவையெல்லாம் மாறிலிகள் அல்ல. மாறக்கூடியவை. காலத்துக்குக் காலம் தொழில்நுட்ப வளர்ச்சியோடும் ஏனைய வளர்ச்சிகளோடும் மாறக்கூடியவை. ஒரு தலைமுறை தனது காலத்தின் ஒழுக்கங்களை அடுத்த தலைமுறைமீது திணிக்க முடியாது. எனவே எது ஒழுக்கம்? எது அறம்? என்பது தொடர்பாகவும் ஆழமாகப் பார்க்கப்பட வேண்டும்.

எங்களுடைய குழுவில் இளையவர் ஒருவர் இருந்தார். இளம் இசை மற்றும் திரைக் கலைஞரான பூவன் மதீசன். எமது குழுவைப் பிரதிநிதித்துவப்படுத்தி அவரைத்தான் பேச விட்டோம். அருமையாகப் பேசினார். அங்கிருந்தவர்களில் வயதால் இளையவராகிய அவர், குழு நிலைக் கலந்துரையாடலின்போது ஒரு முக்கியமான கேள்வியைக் கேட்டார். சமூக ஊடக வலைத்தளச் சூழலானது டொலர்களைச் சம்பாதிப்பதற்காக அனேகமாக பிரச்சனைகளின்மீதும் விவகாரங்களின்மீதும் விபரீதமான விடயங்களின்மீதும் கவனத்தை அதிகமாகக் குவிக்கின்றது. இதனால் பொசிட்டிவ் விடையங்களின் மீது கவனத்தைக் குவிப்பதை விடவும் நெகட்டிவ் விடயங்களின் மீதுதான் அதிக கவனம் குவிக்கப்படுகிறது. இதனால் ஒப்பீட்டளவில் நெகட்டிவானா புள்ளி விபரங்கள்தான் அதிகம் வைரல் ஆகின்றன. விபரீதமான, விவகாரமான விடயங்கள்தான் அதிகம் வைரல் ஆகின்றன. அதை வைத்துக்கொண்டு உலகம் கெட்டுப் போய் விட்டது என்று முடிவெடுக் கலாமா? என்று அவர் கேட்டார்.

அரசு அதிகாரியான எனது நண்பர் ஒருவர் கூறுவார், ஒரு மனநல மருத்துவரிடம் போனால் அவர் கூறுவார், சமூகத்தில் மனநலம் பாதிக்கப்பட்டவர்களின் தொகை அதிகரித்து வருகிறது என்று. ஆனால் அவர் கூறும் புள்ளி விபரங்களை சமூகத்தின் மொத்த ஜனத்தொகைக்குள் வைத்து கணிக்கும் போதுதான் சரியான புள்ளி விபரம் கிடைக்கும். அதைப்போலவே முதியோர் நலன்பேணும் அமைப்புகளைச் சேர்ந்தவர்களிடம் கேட்டால் கூறுவார்கள், முதியோர் கைவிடப்படுகிறார்கள் என்று. அங்கேயும் அதை முழுச் சமூகத்துக்குமான 100 விகிதமாக எடுத்துக் கொள்ள முடியாது. சமூகத்தின் மொத்த சனத் தொகைக்குள் வைத்து அதைக் கணிக்க வேண்டும்.

குடும்பங்கள் மத்தியில் முரண்பாடுகள் அதிகரிப்பதாகவும், பிள்ளைகளுக்கு வழிகாட்ட முடியாத நிலையில் ஒரு பகுதி பெற்றோர்கள் காணப்படுகிறார்கள் என்பது தொடர்பாகவும் சரியான புள்ளி விபரங்கள் வேண்டும். ஒரு மையத்திலிருந்து தொகுக்கப்பட்ட புள்ளி விபரங்களை, மொத்த சனத் தொகைக்குள் வைத்துக் கணிக்க வேண்டும். இதற்கு ஒரு மையமான செயற்பாடு தேவை. குறைந்தபட்சம் மாகாண மட்டத்திலாவது அதைக் கணிக்கலாம். அங்கிருந்து சரியான கணித பூர்வமான புள்ளி விபரங்கள் கிடைத்தபின், அவற்றை வைத்துக் கொண்டுதான் இதுதொடர்பாக தொகுக்கப்பட்ட பார்வையை முன்வைக்கலாம். அதுவரை கேட்கப்படுகின்றவை, எழுதப்படுகின்றவை எல்லாமும் அபிப்பிராயங்களே.

இளைய தலைமுறை தொடர்பாக முதிய தலைமுறை நம்பும் பல விடயங்களும் அபிப்பிராயங்கள்தான். மூத்தவர்கள் தொடர்பாக இளம் தலைமுறையிடம் உள்ளவைகளும் அபிப்பிராயங்கள்தான். இந்த அபிப்பிராயங்களில் எத்தனை உண்மை?

யாரை மூத்தவர்கள் குறை சொல்கிறார்களோ, அல்லது யாரைத் திருத்த வேண்டும் என்று ஒன்று கூடிச் சிந்திக்கிறார்களோ, அவர்களை இணைத்துக் கொள்ளாமல் மூத்தோர் மட்டும் தனியே முடிவெடுப்பது சரியா? அவர்கள் தங்களைப்பற்றி என்ன கருதுகிறார்கள்? மூத்தோரைப்பற்றி என்ன கருதுகிறார்கள்? நடப்பு அரசியல் மற்றும் சமூகப் பொருளாதார நிலவரங்கள் தொடர்பாக என்ன கருதுகிறார்கள்? போன்றவற்றைச் செவிமடுக்க எத்தனை மூத்தவர்கள் தயாராக இருக்கிறார்கள்?

தமிழகத்தில் விஜய் வெற்றிபெற்ற பின், திமுக இளம் வயதினரை கவர்வதற்கான புதிய உபாயங்களைப்பற்றிச் சிந்தித்துச் செயல்பட்டு வருகிறது. ஆனால் அதற்காக அவர்கள் ஒருங்கிணைக்கும் சந்திப்புகளில் இளம் தலைமுறையின் மொழிநடையில் அவர்களுடைய அலைவரிசையில் சென்று அவர்களோடு உரையாடுவதற்குப் பதிலாக, மூத்த தலைமுறை தங்களுடைய அலை வரிசையில் நின்றுகொண்டு அவர்களை அணுகுகின்றது என்ற குற்றச்சாட்டு அதிகமாக உண்டு.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ராஜேஸ்வரி மண்டபத்தில் நடந்த மூத்தோர் சந்திப்பிலும் இது உணரப்பட்டது. இரண்டு தலைமுறையும் அதனதன் அலைவரிசையில் நின்று கொண்டு, அதை நியாயப்படுத்திக் கொண்டு உரையாடலாமா? "ஒவ்வொரு தலைமுறையும் தனக்கு முந்திய தலைமுறையை விடத் தானே அதிகம் புத்திசாலி என்றும் தனக்குப் பின்வரும் தலைமுறையைவிடத் தானே ஞானமானது என்றும் தனக்குள்தானே கற்பனை செய்துகொள்கிறது" என்று ஆங்கில எழுத்தாளரான ஜோர்ச் ஓவல் கூறியது சரியா?



# "குற்றங்களை அடியோடு ஒழிக்கப் பொலிஸாரும் மக்களும் ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும்!"

இலங்கை செய்திகள் Sri Lanka News

## கோப்பாய் புதிய பொலிஸ் நிலையக் கட்டடத் திறப்பு விழாவில் வடக்கு ஆளுநர் வலியுறுத்து

- ந.லோகதயாளன்

பொலிஸார் மக்களின் நம்பிக்கையை வெல்லும் வகையில் செயலாற்ற வேண்டும் எனவும், பொலிஸ் திணைக்களத்துடன் மக்களும் இணைந்து பயணிக்கும்போதே குற்றங்களை முழுமையாகக் கட்டுப்படுத்த முடியும் எனவும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார். குற்றச் செயல்களைப் பொலிஸ் திணைக்களத்தால் மாத்திரம் தனித்துக் கட்டுப்படுத்திவிட முடியாது எனவும் அவர் வலியுறுத்தினார்.

1966 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு, கடந்த 60 ஆண்டுகளாகத் தற்காலிக இடங்களில் இயங்கி வந்த கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்கான புதிய நிரந்தரக் கட்டடம் 14-06-2026 ஞாயிற்றுக்கிழமை உத்தியோகபூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது. பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபாலவுடன் இணைந்து இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் தொடர்ந்தும் உரையாற்றிய ஆளுநர், "நான் மாவட்ட செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் பொலிஸார் தொடர்பில் பொதுமக்களிடமிருந்து அதிகளவான முறைப்பாடுகளைப் பெற்றிருக்கின்றேன். குறிப்பாக, பொலிஸ் நிலையங்களில் தமது முறைப்பாடுகள் ஏற்கப்படுவதில்லை எனவும், தமக்குத் தீங்கிழைத்த குற்றவாளிகளுடன் பொலிஸார் நட்பாகப் பழகுவதாகவும் மக்கள் முறையிட்டிருந்தனர். ஆனால், இன்று அந்த நிலைமையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. மாண்புமிகு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசு வழங்கிவரும் உறுதியான தலைமைத்துவமே இந்த மாற்றத்துக்குக் காரணமாகும். இருப்பினும், இத்துறையில் இன்னமும் பல மாற்றங்கள் ஏற்பட வேண்டியுள்ளது.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தலைமையிலான பொலிஸ் அதிகாரிகளை நான் பாராட்டுகின்றேன். அவர்கள் தங்களால் முடியுமா-னளவு சிறப்பான சேவைகளைத் தற்போது வழங்கி வருகின்றார்கள். எமது வடக்கு மாகாணத்தில், குறிப்பாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகரித்திருந்த வாள்வெட்டு உள்ளிட்ட வன்முறைக் கலாசாரம் இன்று ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

பொலிஸார் தமது சேவைகளைத் திறம்பட முன்னெடுப்பதற்குப் பௌதீக வளங்கள் மிகவும் அவசியமானவை. அந்தவகையில், நீண்டகாலத்தின் பின் இன்று அவர்களுக்குத் தேவையான நிரந்தரக் கட்டடம் கிடைத்துள்ளது. இதன்மூலம் அவர்கள் மேலும் சிறப்பான சேவைகளை வழங்குவார்கள் என நாம் எதிர்பார்க்கலாம்.

கிளிநொச்சியில் இடம்பெற்று வந்த சட்டவிரோத மணல் அகழ்வு மற்றும் கடத்தல்களால் பெரும் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தன. இது தொடர்பில் விரைந்து நடவடிக்கை எடுப்பதற்காக நானும், அமைச்சரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சந்திரசேகரும் பிரதிப் பொலிஸ்மா அதிபரைச் சந்தித்திருந்தோம். அதன்போது, "கடந்த காலங்களில் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுபவர்களைக் காப்பாற்றுவதற்காகவே அரசியல்வாதிகள் எம்மைத் தேடி வருவார்கள், ஆனால், நீங்களோ அவர்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கை எடுக்கக் கோரி வந்துள்ளீர்கள்" என அவர் ஆச்சரியத்துடன் குறிப்பிட்டார். அதுதான் உண்மை. சட்டவிரோதச் செயற்பாடுகளின் பின்னால் இன்றைய அரசு ஒருபோதும் நிற்காது. இத்தகைய குற்றங்களை ஒழிப்பதற்குப் பொதுமக்களாகிய நீங்களும் பொலிஸாருக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்." - என்றார்.

இந்நிகழ்வின் ஆரம்பத்தில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதைத் தொடர்ந்து, பொலிஸாரின் அணிவகுப்பு மரியாதை இடம்பெற்றது. அதன்பின்னர், புதிய பொலிஸ் நிலையக் கட்டடம் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டு அதிதிகளால் பார்வையிடப்பட்டது. தொடர்ந்து மேடை நிகழ்வுகளும், பொலிஸ் நிலைய வளாகத்தில் மரம் நடுகை நிகழ்வும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், எஸ்.சிறிபவானந்தராஜா, ஜெ.றஜீவன், பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்டச் செயலாளர், வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர், யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி, யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரின் இணைப்பாளர் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர்.



# "3 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள எம் மக்களின் நிலங்களிலிருந்து இராணுவம் வருமானம் ஈட்டுகின்றது ஆனால் மக்கள் வாழ்விடமின்றி அலைகின்றனர்."

இலங்கை செய்திகள் Sri Lanka News

## 36 ஆண்டுகளாக சொந்த நிலத்தை இழந்து போராடும் மக்களின் உரிமைக்காக அனைவரும் திரளவேண்டும் என்கிறார் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்



பல தசாப்தங்களாக 36 ஆண்டுகளாக மக்கள் இராணுவத்திடம் நிலத்தினை பறிகொடுத்துவிட்டு உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாகவும் வெளிநாட்டில் அகதிகளாகவும் வாழமுடியாத நிர்ப்பந்தங்களுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களுக்கு போர் முடிவடைந்து 17 ஆண்டுகள் ஆனபோதும் மீள்குடியேற்ற உரிமை உறுதிப்படுத்தப்படவில்லை எனில் எப்படி ஏற்றுக்கொள்வது வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கேள்வி எழுப்பியுள்ளார்.

வலிகாமம் வடக்கு மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தி யாழ். மாவட்ட செயலகம் முன்பாக (15.06.2026) நாளை 36 ஆவது ஆண்டு நிறைவை மக்களால் நடாத்தப்படுபடுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள போராட்டத்திற்கு நாம் முழுமையான ஆதரவை வழங்குகின்றோம். அடிப்படையில் போராட்டம் நடாத்தும் மக்கள் அடிப்படை உரிமைகளை இழந்தவர்களாக சொல்லெணாத் துன்பங்களை அனுபவித்து முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் அவல வாழ்வு வாழ்கின்றனர். மக்களின் வளமான நிழங்கள் வலோத்காரமாக இராணுவத்தினரின் உல்லாச விடுதிகளாகவும் முகாம்களாகவும் உள்ளன. அவை கடந்த கால அரசாங்களின் காலத்தில் இடம்பெற்றது என இன்றைய அரசாங்கம் கூறித்தப்பித்துவிட முடியாது.



மக்களின் நிலங்கள் மக்களுக்கே சொந்தமானது என ஆட்சிக்கு வந்த அரசாங்கம் கட்டாயமாக தமது நிலங்களை தமக்கு விடுவிக்கும் எனக் காத்திருந்த மக்கள் இப்போது வாராவாரம் வெள்ளிக்கிழமைகளில் வீதியில் போராடுகின்றனர். அரசாங்கம் பதவியேற்று ஒன்றரை ஆண்டுகள் கடந்த நிலையில் மக்கள் நம்பிக்கையிழந்து போராடுகின்றனர். தமிழ் மக்களின் வளமான நிலங்கள் இராணுவ அதிகாரத்தின் வாயிலாக ஆட்சிப்படுத்தப்பட்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாது.

இப்போதும் 3 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட பல கிராமசேவையாளர் பிரிவுகள் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ளன. இவற்றில் இராணுவம் வருமானம் ஈட்டுகின்றது. பொதுமக்கள் வாழ்விடமின்றி அலைகின்றனர். இந் நிலையில் மக்களின் போராட்டத்தில் முழுமையான நியாயம் உள்ளது. நாம் இவ் நியாயபூர்வமான போராட்டத்திற்கு எமது முழுமையான ஆதரவை வழங்குகின்றோம். இவ்வாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத்தவிசாளர் தியாகராஜா நிரோஷ் தெரிவித்துள்ளார்.

# வடக்கின் "கரம்" ஆட்டத்தின் சம்பியன் ஆனார் வேலணை மத்தியின் மாணவி விதுர்ஷினி!



வடமாகாண மட்ட திறந்த கரம் போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட அணி சார்பில் ஒற்றையர் ஆட்டத்திலும் குழு போட்டியிலும் கலந்து கொண்ட ஜெ.விதுர்ஷினி இவ் வருடத்திற்கான (2026) வடமாகாண சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அதே போன்று குழு போட்டியிலும் கலந்துகொண்டு வடமாகாண அணிக்கு தனது திறமையை வெளிப்படுத்தி அணி சம்பியன்னாவதற்கும் பங்காற்றியுள்ளார்.

முன்பதாக கடந்த 18.04.2026 நடைபெற மாவட்ட மட்ட கரம் போட்டியில் வேலணை பிரதேச செயலகம் சார்பில் கலந்து கொண்டு மாவட்டமட்ட போட்டியில் வெற்றி பெற்று யாழ் மாவட்ட அணியில் இடம் பிடித்திருந்த ஜெ.விதுர்ஷினி, 13ம் திகதி சனிக்கிழமை அன்றையதினம் (13.06.2026) யாழ் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்ற மாகாணமட்ட போட்டியிலும் வெற்றி பெற்றிருந்த நிலையில் நடைபெறவிருக்கும் தேசிய மட்ட போட்டியில் வடமாகாணம் சார்பாக கலந்து கொள்ளவுள்ளார்.

இவ் வெற்றியானது யா/ வேலணை மத்திய கல்லூரிக்கும், வேலணை பிரதேசத்திற்கும், தீவக மண்ணிற்கும் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமாகும்.

இதேவேளை கரம் போட்டியில் தீவகமண்ணை சார்ந்த வீரரொருவர் வடமாகாண அணியில் பங்கோற்று தேசியமட்ட போட்டியில் கலந்து கொள்வது இதுவே முதற்தடவையாகும்.

பாடசாலையின் முதல்வர் இ.ஹஸ்ரன் றோய் மற்றும் உடற்கல்வி ஆசிரியர் அ. றொ. அனோஜன் ஆகியோர் குறித்த மாணவியின் வெற்றிக்கு மிக உறுதுணையாக இருந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



# சொல்லிசைப் பாடகரும் கற்றுக்கொண்ட பாடமும்

***"தனக்கு எதிராக கிளம்பிய விமர்சனங்களையடுத்து சங்கீத்ஷன் கூறிய "நான் சிறைக்குள் இருந்தபோது வெளியில் நடந்த எதுவுமே எனக்குத் தெரியாது. என்னை விடுவிக்க யார் எல்லாம் உதவினார்கள் என்று கூடத்தெரியாது.எனக்காக வாதாடிய சட்டத்தரணிகள் யார் என்று கூடத்தெரியவில்லை. இப்போது வெளியில் வந்ததுதான் கொஞ்சம் கொஞ்சமாக அறிகின்றேன். முழுவதும் அறிந்த பின்னர் எனது கருத்தைக்கூறுகின்றேன். எனக்காக போராடிய மக்களுக்கு நன்றி" என்ற "புருடா" தைதான் இன்னும் கேவலமானது. ஆகவே இந்த விடயத்தில் சங்கீத்ஷன் நேர்மையாக நடக்கவில்லை. அவர் தனக்காக போராடியவர்களை இந்தக் கருத்தின் மூலம் இன்னும் இழிவு படுத்தியுள்ளார்."***

**கே.பாலா -**

வடக்கின் கிளிநொச்சியை சேர்ந்த சொல்லிசைப் பாடகர் சங்கீத்ஷனின் கைதும் அநுரகுமார அரசாங்கத்தின் பயங்கரவாத தடைச் சட்டமும் கடந்த இரு வாரங்களாக தமிழர் தாயகத்தில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், அரசாங்கத்திற்கு எதிரான விமர்சனங்கள், கண்டனங்கள் எனக் கொதி நிலையை ஏற்படுத்தியிருந்த நிலையில் தற்போது பாடகர் சங்கீத்ஷன் சாதாரண சட்டத்தின் கீழ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த விடுவிப்பு பாடகர் சங்கீத்ஷனுக்கு விடுதலை, அவரின் தாயாருக்கு நிம்மதி, அவரின் ரசிகர்களுக்கு மகிழ்ச்சி. ஆனால் சங்கீத்ஷனின் விடுதலைக்காக போராடிய, குரல்கொடுத்த, அழுத்தங்கள் பிரயோகித்த, ஆர்ப்பாட்டங்கள் செய்த தமிழ் தேசிய அரசியல் கட்சிகள், தமிழ் சட்டத் தரணிகள், தமிழ் மக்கள். சமூக அமைப்புக்களுக்கு அவரின் இந்த விடுதலை "வெற்றியா" என்று கேட்டால் இல்லை "தோல்வி, அவமானம், தலைக்குனிவு" என்றே நடந்தேறிய சம்பவங்கள் கூறுகின்றன.

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சொல்லிசைப் பாடகர் சங்கீத்ஷன் கைது செய்யப்பட முன்னர் தமிழர் தேசமோ பெருமளவிலான தமிழ் மக்களோ அவரை அறிந்திருக்கவில்லை. அந்தளவுக்கு அவர் பிரபலமானவர் அல்ல. ஆனால் விடுதலைப்புலிகளை ஊக்குவிக்கும் வகையில் பாடினார் என்ற குற்றச்சாட்டில் அவர் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட பின்னரே தமிழர் தேசம் "யார் இந்த சங்கீத்ஷன்" என்று தேடத்தொடங்கியது. அவரின் யூரியூப். பேஸ்புக் எல்லாம் பார்வையாளர் எண்ணிக்கையில் அதிரடி காட்டின. அவர் தமிழர் தேசத்தின் அடையாளமானார்.

தென்னிலங்கையிலுள்ள சில சமூக ஊடகங்கள் சங்கீத்ஷனின் பாடல்களை "மனதில் விஷத்தை வாரி இறைக்கும் இசை நிகழ்ச்சி" என்று தலைப்பிட்டு புலனாய்வுப் பிரிவினரதும் பொலிஸாரினதும் கவனத்திற்கு என்று வெளியிட்ட பதிவுகளையடுத்தே சங்கீத்ஷன் பொலிஸாரால் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டதாக செய்திகள் வெளிவந்தன. இதனால் அநுரகுமார அரசாங்கம் கடும் விமர்சனங்களை எதிர்கொண்டதுடன் சங்கீத்ஷனை விடுதலை செய்யக்கோரி வடக்கில் மக்கள் போராட்டங்களும் வெடித்தன.

ஆனால் "தவளையும் தன்வாயால் கெடும்" என்பதுபோல் ஒரு வடக்கு எம்.பி. தனது சமூக ஊடகத்தில் வெளியிட்ட சங்கீத்ஷனுக்கு எதிரான இழிவான கருத்துக்கள், வீடியோக்கள் மூலம் சங்கீத்ஷனை பொலிஸாருக்கு காட்டிக்கொடுத்தது "தான்" என்பதை அவரையறியாமலேயே வெளிப்படுத்தினார். அதாவது சங்கீத்ஷன் மீது பயங்கரவாத தடைச்சட்டம் என்னும் "அம்பு"பாய அந்த வில்லாளனே காரணமாக இருந்தார் அதன் முழு விபரங்களை இன்னொரு கட்டுரையில் பார்ப்போம்.

சங்கீத்ஷனை யார் காட்டிக்கொடுத்தது என்பதற்கு அப்பால் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழான அவரின் கைதை மிகக் குறுகிய காலத்தில் சர்வதேச மட்டம் வரை பெரிய விவகாரமாக்கி அது தொடர்பில் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுத்து, தமிழர் தேசத்தில் அக் கைதை ஒரு கொதி நிலையாக்கி சங்கீத்ஷனின் விடுதலைக்கு அரசுக்கு அழுத்தங்களை கொடுத்து நீதிமன்றத்திற்கும், சிறைச்சாலைக்கும் அலைந்து திரிந்து ஒரு பெரும்பணியை தமிழரசுக்கட்சியும் அதன் பிரபல சட்டத்தரணிகளான சுமந்திரனும் சயந்தனுமே முன்னெடுத்திருந்தனர். அதேநேரம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் அதன் சட்டத்தரணியும் கூட சங்கீத்ஷனின் விடுதலைக்காக செயற்பட்டனர்.

சங்கீத்ஷனின் கைதால் வடக்கு மாகாணமே கொந்தளித்துப் போயிருந்த நிலையில் மாவட்டங்கள் தோறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் வெடித்த நிலையில் அநுரகுமார அரசாங்கத்தின் வடக்கு மாகாண எம்.பி.க்கள் மௌனம் காத்தனர். நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் இந்த எம்.பி.க்கள் தமது வெற்றிக்காக யாழ்ப்பாணத்தில் புலிகளின் பாடல்களை மேடைகளில் ஒலிபரப்பினார்கள். அப்போது ஏன் கைது செய்யப்படவில்லை என்ற விமர்சனங்கள், கேள்விகள் எழுந்தபோது தாம் அவ்வாறு புலிகளின் பாடல்களை ஒருபோதும் ஒலிபரப்பவில்லை என மறுத்தார்கள்.

அநுரகுமார அரசாங்கத்தின் யாழ் மாவட்ட 3 எம்.பி.க்களில் ஒருவரும் அடிக்கடி கோமாளித்தன கருத்துக்களை வெளியிட்டு சர்ச்சையில் சிக்குபவருமான இளங்குமரன் எம்.பி. ஒரு படி மேலே சென்று "பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் பாடகர் சங்கீத்ஷன் கைது செய்யப்பட்டுள்ளதால் தான் அவர் தற்போது பிரபலமடைந்துள்ளார். இல்லாதுவிட்டால் அவரை யாருக்குமே தெரிந்திருக்காது" என கிண்டலாக கருத்து வெளியிட்டிருந்தார். இவ்வாறான நிலையில்தான் இதே இளங்குமரன் எம்.பி.யுடன் இணைந்து சங்கீத்ஷனும் அவரது தாயாரும் சங்கீத்ஷனின் விடுதலைக்காக போராடிய தமிழர் தேசத்தினது முதுகில் குத்தியுள்ளனர்.

சங்கீத்ஷனின் கைது தொடர்பாக பொலிஸார் சமர்ப்பித்த "பி" அறிக்கையில் அவரது கைதுக்கும் தடுப்புக்கும் பொலிஸார் குறிப்பிட்ட பயங்கரவாதத் தடைச்சட்டப் பிரிவு என்ற பெயரில் ஒரு பிரிவுசட்டத்தில் இல்லை. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தில் மூன்றாவது பிரிவில் பொலிஸார் குறிப்பிட்டபடி ஒரு பிரிவேஇல்லை. அப்படி இருக்க, அத்தகைய இல்லாத ஒரு பிரிவின் கீழ் குற்றம் சுமத்தப்பட்டு அவருக்கு விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்டது தவறு என்று சுட்டிக்காட்டி அதனைமேல் நீதிமன்றத்தில் மீளாய்வுமனு சமர்ப்பித்து விளக்கமறியல் உத்தரவை செல்லுபடி அற்றதாக அறிவிக்கும் நடவடிக்கையை சங்கீத்ஷன் விடுவிக்கப்படுவதற்கு ஒரு சில மணி நேரத்திற்கு முன்னர் கூட அவரின் சட்டத்தரணியாக இருந்த தமிழரசுக்கட்சியின் சிரேஷ்ட சட்டத் தரணியான சயந்தன் முன்னெடுத்திருந்தார்.

தமிழரசுக் கட்சியின் சட்ட நடவடிக்கைகளினாலும் தமிழ் மக்களின் போராட்டங்களினாலும் ஜனாதிபதியுடனான தொலைபேசிக் கலந்துரையாடலினாலும் சாதாரண சட்டத்தின் கீழ் சங்கீத்ஷன் விடுதலை செய்யக்கூடிய சூழல் ஏற்பட்டு சட்டமாஅதிபர் அதற்கான முடிவை எடுத்துவிட்ட நிலையில் "கறையான் புற்றெடுக்க பாம்பு குடிகொண்ட" கதையாக இளங்குமரன் எம்.பி உள்ளே நுழைந்த நிலையில் அதுவரையில் சங்கீத்ஷனின் சட்டத்தரணியாகவிருந்த சயந்தனுடன் பின்னால் திரிந்த சங்கீத்ஷனின் தாயார் சயந்தனை அவருக்கு அறிவித்தலே கொடுக்காமல் மாற்றி வேறு ஒரு சட்டத்தரணியுடன் இணைந்து விளக்கமறியலில் இருந்து சங்கீத்ஷனை பிணையில் எடுத்துள்ளார்.

தாயார் தான் மகன் மேல் உள்ள பாசத்தில் அப்படி செய்துவிட்டார் என்று வைத்துக்கொண்டாலும் இளங்குமரன் எம்.பி.யினாலேயே வெளியே வந்தவராகத் தம்மைக் காட்டி வெளியே வந்த கையோடு பாடகர் சங்கீத்ஷன் இளங்குமரன் எம்.பியின் கைகளை பிடித்தவாறு "இந்த அண்ணனால்தான் தான் நான் வெளியில் வந்து நிற்கிறேன். எனக்கு சப்போர்ட் பண்ணிய எல்லோருக்கும் நன்றி" என்று தெரிவித்து சமூக ஊடகங்களுக்குப் பேட்டி அளித்தமை "புரூட்டஸ் நீயுமா?" என்ற கேள்வியையும் அதிர்ச்சியையுமே தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தி விட்டுள்ளது.

ஆனால் அதன் பின்னர் தனக்கு எதிராக கிளம்பிய விமர்சனங்களையடுத்து சங்கீத்ஷன் கூறிய "நான் சிறைக்குள் இருந்தபோது வெளியில் நடந்த எதுவுமே எனக்குத்தெரியாது. என்னை விடுவிக்க யார் எல்லாம் உதவினார்கள் என்று கூடத்தெரியாது. எனக்காக வாதாடிய சட்டத்தரணிகள் யார் என்று கூடத்தெரியவில்லை. இப்போது வெளியில் வந்ததுதான் கொஞ்சம் கொஞ்சமாக அறிகின்றேன். முழுவதும் அறிந்த பின்னர் எனது கருத்தைக்கூறுகின்றேன். எனக்காக போராடிய மக்களுக்கு நன்றி" என்ற "புருடா" கதைதான் இன்னும் கேவலமானது.

இவர் சிறைக்குள் இருந்தபோது தமிழரசுக்கட்சியின் பொதுச் செயலாளரும் பிரபல ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், சிரேஸ்ட சட்டத்தரணியான சயந்தன். தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சிரேஸ்ட சட்டத்தரணி காண்டீபன், ஸ்ரீதரன் எம்.பி, சங்கீத்ஷனின் தாயார் சிறையில் சங்கீத்ஷனை சந்தித்துள்ளனர். இவர்கள் கூடவா உனது கைதுக்கு எதிராக வெளியே பெரும் போராட்டங்கள் நடக்கின்றன என்று கூறவில்லை. அல்லது சங்கீத்ஷனுக்கு சுமந்திரன், ஸ்ரீதரனைக் கூடவா தெரியவில்லை? ஆகவே இந்த விடயத்தில் சங்கீத்ஷன் நேர்மையாக நடக்கவில்லை. அவர் தனக்காக போராடியவர்களை இந்தக் கருத்தின் மூலம் இன்னும் இழிவு படுத்தியுள்ளார்.

சங்கீத்ஷன் இவ்வாறு கூறியதை, இத்தகைய சர்ச்சைக்குரிய அல்லது அரசியல் பின்னணி கொண்ட கைதுகளில், விடுதலை கிடைக்கும்போது சில மறைமுக நிபந்தனைகள் விதிக்கப்படலாம். வெளியே வந்ததும் இந்தத் தரப்புக்கு நன்றி கூற வேண்டும் அல்லது "அரசாங்கத்தையோ, பொலிஸையோ விமர்சிக்கக் கூடாது" போன்ற அழுத்தங்கள் அல்லது சமரசங்கள் பின்னணியில் இருந்திருக்கலாம். மீண்டும் தான் கைது செய்யப்படாமல் இருப்பதற்கோ அல்லது தனது கலைத் துறையை எவ்விதத் தடையுமின்றித் தொடர்வதற்கான சுய பாதுகாப்புச் சிந்தனை காரணமாக இருக்கலாம் எனவும் நியாயப்படுத்துபவர்களும் உண்டு.

ஆனால் ஒரு மனிதனின் உண்மையான முகம் இக்கட்டான காலகட்டங்களில்தான் வெளிப்படும் என்பார்கள். அந்த வகையில், சங்கீத்ஷனின் செயல்பாடே அவரைப் பற்றிய உண்மையை மக்களுக்குத் தெளிவுபடுத்தி விட்டது. பொதுவெளியில் தங்களின் சுயநலத்திற்காகவோ அல்லது பாதுகாப்பு என்ற பெயரிலோ கொள்கைகளையும், தங்களை வாழ வைத்த மக்களையும் அடகு வைக்கும் நபர்களை வரலாறு என்றும் "நம்பிக்கைத்துரோகி" என்றே அடையாளப்படுத்தும். மக்கள் தங்களின் உரிமைகளுக்காகவும், சக மனிதனுக்காகவும் காட்டிய அஹிம்சைப் போராட்ட வடிவத்தை, இந்த சொல்லிசைப்பாடகர் தனது சுயலாபத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டார்.

பாடகர் சங்கீத்ஷன் கைதுக்கு எதிராகவும் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு எதிராகவும் தமிழ் தேசம் ஒன்றுதிரண்ட நிலையில், பயங்கரவாத தடைச்சட்டத்தை முற்றாக ஒழிக்க வேண்டுமென்ற அழுத்தங்கள் மீண்டும் சர்வதேச மட்டத்தில் வெளிவந்த நிலையில் அநுரகுமார அரசாங்கம் சங்கீத்ஷனை விடுவிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அப்படி விடுவித்தால் தமிழர் தேசத்தின் எதிர்ப்புக்கு அநுரகுமார அரசாங்கம் அடிபணிந்து விட்டது" என்று தமிழர்களும் தமிழ் தேசிய கட்சிகளும் வீராப்பு பேசுவார்கள் என்பதாலேயே சங்கீத்ஷனின் தாயாருடன் இளங்குமரன் எம்.பி. மூலம் சில "டீல்"களை செய்து தமிழரசு சட்டத்தரணியை மாற்றி சங்கீத்ஷனை பிணையில் விடுவித்ததுடன் அவர் விடுதலைப் புலிகளையும் தமிழர் போராட்டத்தையும் புகழ்ந்து பாடிய வாயினாலேயே அரசாங்கத்தையும் இளங்குமரன் எம்.பி.யையும் புகழ வைத்துள்ளது அநுரகுமார அரசாங்கம்.

ஆக, சங்கீத்ஷனின் விடுதலைக்கு போராடி அதனை சாத்தியமாக்கிய தமிழர் தேசமும் தமிழ் சட்டத்தரணிகளும் தலைநிமிர்ந்து நிற்கவேண்டிய நிலையில் ஏமாற்றத்தால், வேதனையால், வெறுப்பால் தலைகுனிந்து நிற்க, பயங்கரவாத தடைச்சட்டத்தை ஒழிப்போம் என வாக்குறுதியளித்து ஆட்சி பீடம் ஏறிய பின்னர் அதனைப் பயன்படுத்தி தமிழர்களை கைது செய்யும் அநுரகுமார அரசாங்கம் வெட்கித் தலைகுனிவதற்கு பதிலாக தலைநிமிர்ந்து நிற்கின்றது. தமிழர்தேசம் தலைகுனிவதற்கும் பேரினவாதம் தலைநிமிர்வதற்கும் வழக்கம் போலவே சில தமிழர்களின் காட்டிக்கொடுப்பும் கழுத்தறுப்பும் முதுகில் குத்துவதுமே காரணமாகவிருக்கும். பாடகர் சங்கீத்ஷன் விடயத்திலும் இவைதான் காரணமாகவுள்ளன. இதுதான் தமிழர் தேசத்தினதும் தமிழர்களினதும் சாபக்கேடு.

அதுமட்டுமல்ல பாடகர் சங்கீத்ஷனும் அவரது தாயாரும் தமிழர் தேசத்தின் முதுகில் குத்தியதால் தமிழ் உணர்வாளர்களுக்கு பேரினவாதத்தால் பிரச்சினைகள் எழும்போதெல்லாம், கைதுகள் நடக்கும் போதெல்லாம் தாமாக முன்வந்து அஹிம்சை ரீதியாக போராடும். சட்டரீதியாக போராடும் தரப்புகள் எல்லாம் இனிவரும் நாட்களில் ஒரு தடவைக்கு பல தடவைகள் சிந்தித்துத்தான் களம் இறங்குவார்கள். இதனைத்தான் பேரினவாதமும் எதிர்பார்க்கின்றது.


SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
MULTICULTURAL
CANADA DAY
FREE DOSA FEAST!
FOR CANADIAN SENIORS
HAPPY CANADA DAY
CELEBRATING
CANADA.
TOGETHER.
WEDNESDAY, JULY 01, 2026
REGISTRATION STARTS
2:00 PM
SERVICE
2:00 PM TO 5:00 PM
VENUE:
WOODSIDE SQUARE MALL
PARKING LOT - IN FRONT OF
SARAVANAA BHAVAN
1571 SANDHURST CIRCLE
SCARBOROUGH
PACKED DOSA MEALS
FREE COFFEE & TEA
SPECIAL COMMUNITY PRESENTATION
$500,000
CHEQUE PRESENTATION TO
Scarborough Health Network Foundation
IN SUPPORT OF OUR COMMUNITY, BUILDING A HEALTHIER TOMORROW.
SARAVANAA BHAVAN®
WORLD'S NO.1 INDIAN VEGETARIAN RESTAURANT CHAIN
DATE 2026
PAY TO THE ORDER OF
Scarborough and Rouge Hospital
Five Hundred Thousand Only
$500,000
Authorized Signature
Proudly supporting our community healthcare
FOR CANADIAN SENIORS ONLY
PROOF OF CANADIAN CITIZENSHIP REQUIRED
NO RESERVATIONS
FIRST COME, FIRST SERVED
WHILE QUANTITIES LAST
FOR FURTHER DETAILS CONTACT
info@sugshe.com




# ஐரோப்பாவின் விளிம்பில்: ரஷ்யா — உக்ரைன் போரின் புதிய கட்டம்

## நீண்ட தூர ஏவுகணைகள், ஐரோப்பிய பிளவுகள், ரஷ்யா-பெலாரஸ் அச்சு மற்றும் உலக அதிகாரப் போட்டியின் புதிய பரிமாணம்




**எழுதியவர் - ஈழத்து நிலவன்**
**தமிழ்த் தேசிய வரலாற்றாசிரியர் | உலக அரசியல், பொருளாதாரம், உளவுத்துறை மற்றும் இராணுவ விவகார ஆய்வாளர்**
**15/06/2026**

---

### ரஷ்யா-உக்ரைன் போர் புதிய நிலைக்குள் நுழைகிறது

ரஷ்யா-உக்ரைன் போர் தற்போது அதன் நான்காவது ஆண்டை நோக்கி நகர்கின்ற நிலையில், இந்த மோதல் வெறும் இரு நாடுகளுக்கிடையிலான பிராந்தியப் போராக இல்லாமல், மேற்கத்திய சக்திகளுக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நீண்டகால அதிகாரப் போட்டியின் முக்கிய அரங்காக மாறியுள்ளது. கடந்த சில வாரங்களில் நடைபெற்ற சம்பவங்கள் இந்தப் போரின் திசையை மேலும் மாற்றக்கூடியவையாகக் கருதப்படுகின்றன.

உக்ரைனின் புதிய எப்.பி.-5 "ஃபிளாமிங்கோ" (FP-5 Flamingo) நீண்ட தூர குரூஸ் ஏவுகணையின் அறிமுகம், அதனைத் தொடர்ந்து ரஷ்யாவின் மிகப்பெரிய பதிலடி தாக்குதல்கள், ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் உருவாகும் கருத்து வேறுபாடுகள், ரஷ்யா-பெலாரஸ் உறவின் ஆழப்படுத்தல் மற்றும் ஜி-7 மாநாட்டைச் சுற்றியுள்ள கலவரங்கள் ஆகியவை அனைத்தும் உலக அரசியல் ஒரு புதிய திருப்புமுனையை நோக்கிச் செல்கின்றதை காட்டுகின்றன.

### லாவ்ரோவின் எச்சரிக்கை: "ரஷ்யா பலவீனமடைகிறது" என்பது மாயை

ரஷ்ய வெளியுறவு அமைச்சர் Sergey Lavrov சமீபத்தில் பெலாரஸ் அதிபர் Alexander Lukashenko உடனான சந்திப்பிற்குப் பிறகு வெளியிட்ட அறிக்கையில், மேற்கத்திய நாடுகள் உருவாக்கியுள்ள "ரஷ்யா தோற்கிறது, உக்ரைன் வெற்றி பெறுகிறது" என்ற கருத்தை முற்றாக நிராகரித்தார்.

அவரின் பார்வையில், மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவை அரசியல் மற்றும் பொருளாதார அழுத்தங்கள் மூலம் மண்டியிட வைக்க முடியும் என்று நம்புகின்றன. ஆனால் அது ஒரு "மாயையான கணக்கீடு" என்றும், ரஷ்யா எந்தவித இறுதி எச்சரிக்கைகளுக்கும் அல்லது அரசியல் மிரட்டல்களுக்கும் அடிபணியாது என்றும் அவர் வலியுறுத்தினார்.

லாவ்ரோவின் கருத்துப்படி, உக்ரைன் போர் என்பது ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையிலான மோதல் மட்டுமல்ல் மாறாக, நேட்டோ மற்றும் மேற்கத்திய சக்திகள் ரஷ்யாவுக்கு எதிராக நடத்தும் பரந்த அளவிலான பிரதிநிதிப் போராகும்.

### ரஷ்யா-பெலாரஸ் அச்சு: இராணுவ மற்றும் அரசியல் ஒருங்கிணைப்பின் ஆழப்படுத்தல்

லாவ்ரோவ் மற்றும் லுகாஷென்கோ சந்திப்பு, மாஸ்கோவும் மின்ஸ்கும் தங்கள் உறவை மேலும் வலுப்படுத்திக் கொண்டிருப்பதை வெளிப்படுத்தியது.

"யூனியன் ஸ்டேட்" எனப்படும் ரஷ்யா-பெலாரஸ் ஒருங்கிணைப்பு திட்டம் தற்போது பொருளாதாரம், பாதுகாப்பு, எல்லைப் பாதுகாப்பு, தொழில்நுட்பம் மற்றும் இராணுவத் திட்டமிடல் ஆகிய துறைகளில் வேகமாக முன்னேறி வருகிறது.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# இலங்கை வாழ் "கலாசூரி" திவ்யா சுஜேன் அவர்களுக்கு கனடா – குரும்பசிட்டி நலன்புரி சபையினரால் வழங்கப்பெற்ற "பரத லய ஞான பாரதி" என்னும் பட்டம்




கலை மலிந்த பூமியாக போர்ச்சூழலுக்கு முன்புவரை மிளிர்ந்து வந்த குரும்பசிட்டி மண்ணின் மகளான "கலாசூரி" திவ்யா சுஜேன் அவர்கள் கனடா வந்துள்ளார். பரத, மிருதங்க கலாவித்தகரான இவரை 14.06.2026 ஞாயிறு மாலை குரும்பசிட்டி நலன்புரி சபை - கனடா வரவேற்று, குறுகிய கால அறிவிப்புடனான ஒன்றுகூடல் நிகழ்வினை நடத்தியது. மன்றத்தலைவர் திருமதி. கணேஷ் குகநேசன் தலைமையில் நடந்த இவ்விழாவில் மண்டபம் நிறைந்த உறவுகளோடும் ஊர் மக்களோடும் திவ்யா அவர்களுக்கு "பரத லய ஞான பாரதி" பட்டம் சூட்டி கௌரவம் செய்யப்பட்டது. அன்றைய நிகழ்வில் நூற்றுக்கணக் கானவர்கள் மிகுந்த உற்சாகத்தோடு கலந்து கொண்டு பட்டம் பெற்ற "கலாசூரி" திவ்யா சுஜேன் அவர்களை வாழ்த்திச் சென்றார்கள்.

"கலாசூரி" திவ்யா சுஜேன் அவர்களின் கனடா விஜயம் முக்கியமாக தனது மாணவியின் அரங்கேற்றத்தை அழகுற இங்கு நடத்தி அதன் வாயிலாக இங்குள்ள நுண்கலைத்துறை விற்பன்னர்கள் மற்றும் ஆசிரிய ஆசிரியைகள் ஆகியோரின் வாழ்த்துக்கள் தனது மாணவிக்கு கிட்ட வேண்டும் என்பதே. அதனுடன் இணைத்து தனது பிறந்த ஊரான குரும்பசிட்டி பதியைச் சேர்ந்த உறவுகள் மற்றும் நண்பர்களைச் சந்தித்து செல்வதுமாக அமைந்தது.

"கலாசூரி" "விஷ்வாபிநந்தன" திவ்யா சுஜேன் அவர்களின் மாணவி நிஷ்கிதா கோகுலராஜ் அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம் இம்மாதம் 26 ஆம் திகதி அன்று மாலை 5.30 மணிக்கு கனடா ரிச்மண்ட்ஹில் நகரத்தில் அமைந்துள்ள அரங்கத்தில் நடைபெறவுள்ளது. இந்த அரங்கேற்றம் "அன்பின் வழியது உயிர்நிலை" என்ற தலைப்பின் கீழ் கருப்பொருளுடன் கூடிய மார்க்கமாக அமைகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மகாகவி சுப்ரமணிய பாரதியாரின் கொள்ளுப் பெயரன் "ஞானபாநு" கலாநிதி ராஜ்குமார் பாரதி அவர்கள் கலந்து இந்நிகழ்ச்சிக்கு முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பிப்பதுடன் இசை அமைப்பினையும் வழங்கியுள்ளார்.

அன்றைய அரங்கேற்ற நிகழ்விற்கு திரு அருண் கோபிநாத், திரு இராமநாதன் கார்த்திகேயன், திரு மயூரன் கிரிதரன், திரு விஷ்ணு கண்டன்சாதா ஆகியோர் அணிசேர் கலைஞர்களாக பங்கேற்கின்றனர். இந்நிகழ்ச்சிக்கான ஆய்வு,




ஆடலமைப்பு, நட்டுவாங்கம், ஒருங்கிணைப்பு ஆகியவற்றை இலங்கையிலிருந்து வருகை தந்துள்ள அபிநயக்ஷேத்திரா நடனப்பள்ளி இயக்குநர் "கலாசூரி" திவ்யா சுஜேன் அவர்கள் வழங்குகிறார்கள்.

பரதநாட்டிய சுவைஞர்கள் 26-06-2026 அன்று நடைபெறவுள்ள அரங்கேற்ற வைபவத்திற்கும் வருகை தந்து வாழ்த்திச் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகின்றனர். அதற்கான அழைப்பிதழ் இங்கு காணப்பெறுகின்றது.

***சத்தியன் - கனடா உதயன்***









Hari Om

# INVITATION

# SAREGA Music School of Fine Arts



## *****25th Annual Celebrations*****

## அனுமதி இலவசம் | ALL ARE WELCOME !

**Sunday June 28th 2026 3 PM-9 PM**

Michael Power St Joseph School 105 Eringate Drive EtobicokeON M9C 3Z7 (Renforth & Rathburn)

Sponsored by

THE KUDDY FOUNDATION | KG TRUCK GROUP | YAMAHA | Leela Super Market | உதயன்

டொராண்டோ தமிழ் சமூகத்தின் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. முக்கியமாக, கலை, கலாச்சாரம் மற்றும் கலைஞர்கள் மீது அவர்கள் காட்டும் மரியாதை, அன்பு மற்றும் பாசமே இதற்குக் காரணம். என்னிடம் கற்றுக் கொண்ட மற்றும் தொடர்ந்து கற்றுக் கொண்டிருக்கும் பல மாணவர்களில், என் மகள்கள் சாகித்யா மற்றும் காவ்யா டொராண்டோவின் சிறந்த இசைக்கலைஞர்களில் ஒருவராகத் திகழ்கிறார்கள். என்னிடம் கற்றுக் கொள்ளும் உங்கள் பிள்ளைகளால்தான் இது சாத்தியமானது.

இந்த நிகழ்ச்சிக்கான இந்த அழைப்பு, கடந்த 25 ஆண்டுகளில் என்னிடம் கற்றுக் கொண்ட அனைத்து மாணவர்கள் உட்பட அனைவருக்கும் உரியது. அவர்களில் பலர் மருத்துவர்கள், பொறியாளர்கள் மற்றும் சிறந்த இசைக்கலைஞர்களாகவும் உள்ளனர். உங்கள் அனைவரையும் நேரில் வந்து நிகழ்ச்சியைக் கண்டு ரசிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். **அன்புடன், நியூயார்க் ராஜா - இசையமைப்பாளர்/ஆசிரியர்**

***Students of New York-Raja performing with the Celebrity Singer Maharajapuram Ramu (a replica of Sri SPB Sir's Voice) & Popular Singers & Musicians of the GTA respectfully dedicate this show to their Parents***

**Students Orchestra Supported by 'SAHITHYA's BAND**






Prabha | Nandita | Sarika | Ajeesh | Shenaal | Shenaya



**NewYork Raja | Sahithya/Keys | Kavya/Bass | Suresh/Drums | Mahthesh/Tabla**



**Students of Srimathi | Sveta Manorathan | Ughesh Vageeasan | Deborah Swarnakumar | Medha Balathas & Maanvi Balathas**

**Kalaimathy Vaageeasan, Director of Kalai Natiyalaya Fine Arts**

**Students of Amirthalaya Academy**

cmr | tvi HD | east FM 102.7 | Bucket Biryani

***This Show is to Encourage, Appreciate & Honour the Students on their Accomplishments, and Showcase their talents on the Stage***

**This year we are giving away $5000+ worth Music Instruments & Gift Certificates & Gift Hampers to All the Students & Parents!**

**Gold Sponsors/TKF The Kuddy Foundation & KG Truck Group | Hospitality Sponsor/Leela Super Market**

**Media Sponsors: Uthayan News | Tamil Osai | CMR/TVI | East FM**

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ரெலோவின் தலைமைக்கு எதிராக மூத்த உறுப்பினர்கள் போர்க்கொடி!

## தற்போதைய தலைவர் செல்வம் அடைக்கலநாதனின் சுய ஒழுக்கப் பிரச்சினையே கட்சியின் வீழ்ச்சிக்குக் காரணம் என்றும் அவர்கள் குற்றச்சாட்டு



- ந.லோகதயாளன்

ரெலோ (தமிழீழ விடுதலை இயக்கம்) அமைப்பின் தலைமைக்கு எதிராகப் பல மூத்த போராளிகள் மற்றும் கட்சி உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்புகளை வெளியிட்டு வரும் நிலையில், கட்சியின் தேசிய மாநாட்டை இரகசியமாக நடத்தித் தங்களது பதவிகளைக் காப்பாற்றிக் கொள்ளத் தலைமைப்பீடமும் குறிப்பாக தற்போதைய தலைவர் செல்வம் அடைக்கலநாதன் உட்பட சிலர் ஜனநாயக விரோத நகர்வுகளை மேற்கொண்டுள்ளது என்று கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பகிரங்கமாகக் குற்றம் சாட்டியுள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் 13ம் திகதி சனிக்கிழமை நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டின் போதே அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

அங்கு அவர்கள் மேலும் கூறுகையில், “கட்சித் தலைமையின் தன்னிச்சையான அரசியல் தீர்மானங்கள், நிர்வாகச் சீர்கேடு, தொடர்ச்சியான தேர்தல் தோல்விகள் மற்றும் தவறான கூட்டணிகள் காரணமாகக் கட்சி கடுமையான பின்னடைவைச் சந்தித்துள்ளதுடன், மக்கள் மத்தியில் செல்வாக்கை இழந்துள்ளது. இதனால் உறுப்பினர்கள் மத்தியில் பெரும் அதிருப்தி ஏற்பட்டு பலர் கட்சியிலிருந்து வெளியேறி வருகின்றனர். கட்சியின் நீண்ட வரலாற்றில், போராளிகளும் அங்கத்தவர்களும் தலைமைக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடும் துரதிர்ஷ்டவசமான நிலை ஏற்பட்டுள்ளது.

கடந்த மார்ச் 21 அன்று வவுனியாவிலும், ஏப்ரல் 25 அன்று திருகோணமலையிலும் நடைபெற்ற தலைமைக் குழுக் கூட்டங்களில், எமது கடும் எதிர்ப்பையும் மீறித் தங்களது பதவிகள் பறிபோய்விடும் என்ற பீதியில் மாநாட்டைப் பிற்போடக் கட்சியின் தலைமைப்பீடத்தினர் தீர்மானித்தனர். அத்துடன், ஏற்கனவே எட்டு மாவட்டங்களில் முறையாக நடத்தப்பட்ட தெரிவுகளை இரத்துச் செய்து, புதிதாகப் பொதுக்குழு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க முடிவெடுத்தனர். இது கட்சி யாப்புக்கும் ஜனநாயகக் கோட்பாடுகளுக்கும் முற்றிலும் முரணானதாகும்.




அண்மையில் மன்னார், முல்லைத்தீவு தவிர்ந்த ஏனைய ஆறு மாவட்டங்களிலும் தலைவர் மற்றும் செயலாளர் ஆகிய இருவரும் தமக்கு ஆதரவானவர்களை மட்டும் இரகசியமாக அழைத்து புதிய உறுப்பினர்களைத் தெரிவு செய்துள்ளனர். தத்தம் பதவிகளைத் தக்கவைப்பதற்காக, பதவி வெறியில் செய்யும் இந்த அதிகார துஷ்பிரயோகம் மற்றும் கோழைத்தனமான செயல் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இது கட்சியையே அழிக்கும் செயற்பாடாகும்.

இதைப்போன்ற 14ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேசிய மாநாடு என்ற போர்வையில் ஒரு கூட்டத்தை நடத்தி, தமக்குச் சாதகமாக நிர்வாகத் தெரிவுகளை மேற்கொள்ளத் தலைமைப்பீடம் திட்டமிட்டுள்ளது என்று அறிகின்றோம்.

அண்மைக்காலமாகக் கட்சி பலத்த பின்னடைவுகளைச் சந்தித்தமைக்குக் தற்துபோதைய கட்சித் தலைவரான செல்வம் அடைக்கலநாதனின் சுய ஒழுக்கம் சார்ந்த பிரச்சினையே மூலகாரணமாகும். கட்சியின் முன்னாள் பெண் உறுப்பினர் ஒருவருடன் அவர் கொண்டிருந்த பாலியல் ரீதியான தகாத உறவுச் செய்திகள் சமூக வலைத்தளங்களில் வெளியாகி கட்சிக்கு அவமானத்தை ஏற்படுத்தின. இதன் வெளிப்பாடாகவே திருகோணமலை வெலிக்கடை தியாகிகள் அரங்கின் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதனைச் செயலாளர் உள்ளிட்ட சிலர் பூசி மெழுகித் தலைமையைக் காப்பாற்ற முயன்றமை கட்சிக்குள் பெரும் அதிர்வலைகளைத் தோற்றுவித்தது.

முன்னதாக, இந்த விடயம் தொடர்பில் கட்சியின் உப தலைவருடன் பேசிய தலைவர் தன் தவறை ஏற்றுக்கொண்டதுடன், தான் எதிர்காலத்தில் எந்தவொரு பதவியையும் ஏற்கப்போவதில்லை எனத் தலைமைக் குழுவிலும் உறுதியளித்திருந்தார். ஆனால், தற்போது மீண்டும் பதவியைத் தக்கவைக்கத் தலைவரும் செயலாளரும் எடுக்கும் முயற்சிகளினாலேயே கட்சிக்குள் பிளவுகள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்கு அவர்களே முழுமையாகப் பொறுப்புக்கூற வேண்டும்.” என்றனர்.

அன்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் ரெலோ கட்சியின் தலைமைக் குழு உறுப்பினரும் யாழ். மாவட்ட செயலாளருமான சபா குகதாஸ், தலைமைக் குழு உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ். வினோநோகராதலிங்கம், கட்சியின் தேசிய அமைப்பாளர் பிரசன்னா இந்திரகுமார், உப தலைவர் ஹென்றி மகேந்திரன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் புவனேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணம் – வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலையப் பகுதியில் தமது சொந்த நிலங்களை இழந்தவர்களுக்காக அவற்றை மீட்க வீதியில் இறங்கிய மக்கள்!

## யாழ். மாவட்ட செயலகம், மற்றும் பலாலி சந்தியில் மாபெரும் போராட்டங்கள்



- ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் - வலிகாமம் வடக்கு உயர்பாதுகாப்பு வலையப் பகுதியில் இருந்து தமிழ் மக்கள் இராணுவ நடவடிக்கை காரணமாகக் கட்டாயமாக வெளியேற்றப்பட்டு இன 15ம் திகதி திங்கட்கிழமையுடன் 36 வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. இந்நிலையில், தங்களை உடனடியாகச் சொந்த இடங்களில் மீள்குடியேற்ற வலியுறுத்தி யாழ். மாவட்ட செயலகம் முன்பாகவும், பலாலி சந்திக்கு அருகிலும் அன்று 15ம் திகதி காலை மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

உள்நாட்டு யுத்தம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து, கடந்த 1990ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15ஆம் திகதி வலிகாமம் வடக்கு பிரதேசத்தைச் சேர்ந்த பெருமளவு மக்கள் இராணுவ நடவடிக்கையினால் தங்களின் பூர்வீக மண்ணை விட்டு வெளியேற்றப்பட்டனர்.

இலங்கையில் கொடூர யுத்தம் முடிவடைந்து 17 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும், அகதிகளாகியுள்ள இந்தப் பகுதி மக்களை இன்னமும் அவர்களின் சொந்த நிலங்களில் மீள்குடியேற அனுமதிக்காது, மக்களின் வளமான காணிகளை இராணுவத்தினர் தொடர்ந்தும் தங்களின் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துள்ளனர்.

இந்நிலையில், மக்களின் பூர்வீகக் காணிகளில் இருந்து இராணுவத்தினரை உடனடியாக வெளியேற்றி, தங்களைச் சொந்த இடங்களில் சுதந்திரமாக வாழ அனுமதிகவேண்டும் என வலியுறுத்தியே யாழ். மாவட்ட செயலகம், மற்றும் பலாலி சந்தி ஆகிய இவ்விரு இடங்களிலும் ஒரே நேரத்தில் மக்கள் திரண்டு போராட்டங்களை நடத்தினர்.

அன்றைய போராட்டத்தின் போது, தங்களின் பூர்வீகக் காணி விடுவிப்பு மற்றும் உடனடி மீள்குடியேற்றம் தொடர்பான நியாயமான கோரிக்கைகள் அடங்கிய விசேட மகஜர் ஒன்று யாழ். மாவட்ட அரச அதிபரிடம் (மாவட்ட செயலாளர்) உத்தியோக பூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, மக்கள் பிரதிநிதிகள் மற்றும் போராட்டக் குழுவினர் வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்குச் சென்று ஆளுநரிடமும் தங்களின் கோரிக்கை மகஜரை நேரில் கையளித்தனர். அத்துடன், இந்தப் பிரச்சினையைத் தேசிய மட்டத்துக்குக் கொண்டு செல்லும் நோக்கில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மதத் தலைவர்களிடமும் இந்த மகஜரின் பிரதிகள் வழங்கப்பட்டன.





பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்களினால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தில், மதத் தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பிரதேச சபைகளின் முன்னாள் தவிசாளர்கள் மற்றும் சமூகச் செயற்பாட்டாளர்கள் எனப் பல்துறை சார்ந்த அரசியல் மற்றும் சிவில் அமைப்புகளின் பிரதிநிதிகள் பலரும் கலந்துகொண்டு மக்களுக்குத் தங்களின் ஆதரவை வெளிப்படுத்தியிருந்தனர்.

# தந்தை எனும் தெய்வம்

*இதயத்தில் நிறைந்த எம்முயிரே என்தந்தையே*
*உதயமும் வரும்போது உம்முகம்தான் முன்னெழும்*
*அன்போடு எமைக்காத்து அரவணைத்து வளர்த்தவரே*
*இன்முகம் காணவில்லை எங்கென்று தேடுகின்றோம்*

*பரிசென்று தந்தீர்கள் பகிர்ந்தீர்கள் உம்வாழ்வை*
*உரிமையுடன் காத்தவரே ஊக்கமூட்டிப் பார்த்தவரே*
*தாங்கிடும் தூணாகக் தாங்கியே நின்றீர்கள்*
*தீங்கிலா வாழ்வாலே தீமையின்றி வளர்த்தீர்கள்*

*ஈர்த்திடும் ஆடையின்றி இளமையைத் தொலைத்தீர்கள்*
*வேர்த்திட உழைத்து வெறுமையாய் உழைத்தீர்கள்*
*வார்த்தைகளால் பேசாது வசந்தமாய் வாழ்ந்தவரே*
*கார்காலக் கனவாக காத்தெம்மைத் தேற்றினீர்கள்*

*உறவுகள்தான் வாழ்வென்று உணர்வுடன் வாழ்ந்தவரே*
*அறனெறியில் உம்வாழ்வை அருமையாகக் கொண்டவரே*
*பட்டறிவுப் பாடமதில் பாண்டித்தியம் பெற்றீர்கள்*
*கிட்டநின்று எமைக்காத்தீர் கேடின்றி வாழ்கின்றோம்*



*வேதனையில் நாங்கள் வெருண்டிடும் நேரத்தில்*
*போதனை தந்தெம்மைப் போற்றியே பாதுகாத்தீர்*
*மெச்சிய எம்தந்தை மென்மையுடன் தூக்கினீர்கள்*
*உச்சம் தலைதன்னில் உயர்த்தியே காட்டினீர்கள்*

*மனத்துயரை உள்வைத்து மறைத்து வாழ்ந்தவரே*
*கனவினில் நின்றும்கூட காத்தீர்கள் குடும்பத்தை*
*சினமதனை அன்பாலே சிதறவிட்ட தந்தையே*
*நனவிலும் எம்நினைவால் நல்வாழ்வு வாழ்ந்தீரே*

*சிறப்பாக வாழ்ந்தவரே சிந்தையிலே நிறைந்தவரே*
*உறவுகளாய்த் தேடுகின்றோம் உயிரற்ற உடலங்களாய்*
*பிரிவாலே இறையெம்மைப் பிரித்தாலும் நீங்களென்றும்*
*உரிமையாய் எம்முள்ளே உடனிருக்க வேண்டுகிறோம்.*

*இறைவனின் பாதத்தில் இன்னுயிரை ஈந்தவரே*
*உறைவிடமாய் ஆண்டவனில் உறைந்துள்ளண எம்தந்தாய்*
*நிறைவோடு வாழ்கவே நீடுழி வாழ்கவே*
*குறையின்றி இறைவனும்மை கோபுரமாய்க் காத்திடுவார்.*

**- Dr. புட்பா கிறிட்டி, Canada -**

# யாழ்ப்பாணம் "செம்மணி சித்துபாத்தி இந்து மயான"மானது. தமிழன அழிப்பின் நினைவகமாக திகழவுள்ளது!

இலங்கை செய்திகள்
Sri Lanka News



செம்மணி சித்துபாத்தி இந்து மயானம் தமிழன அழிப்பின் நினைவகமாக பேணும் முன்மொழிவு நல்லூர் பிரதேச சபையின் தவிசாளர் ப.மயூரனால் இன்றைய சபை அமர்வில் முன்மொழியப்பட்டது. இந்த வகையில், யாழ்ப்பாணம் செம்மணி சித்துபாத்தி இந்து மயானமானது. தமிழன அழிப்பின் நினைவகமாக திகழவுள்ளது!

குறித்த முன்மொழிவினை சபைக்கு சமர்ப்பித்து உரையாற்றிய தவிசாளர் மயூரன் அவர்கள் தன்னுடைய உரையில் இனஅழிப்பு செய்யப்பட்டு புதைக்கப் பட்ட எமது உறவுகளின அழியாத எச்சங்கள் இன்று செம்மணி சித்துபாத்தி இந்து மயானத்திலிருந்து அகழ்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.. எம்மீது நிகழ்த்தப்பட்ட இனஅழிப்பின் சாட்சியகமாக இவ் மயானம் காணப்படுகின்றது. இந் நிலையில் இன அழிப்பின் சாட்சியங்களை பாதுகாக்க வேண்டியதும் அதனை இளைய தலைமுறைக்கு கடத்த வேண்டிய பொறுப்பும் எமக்கு இருக்கின்றது.

குறித்த இந்து மயானம் எமது சபை எல்லைக்குள் காணப்படுகின்ற நிலையில் இதனை ஒரு மயானமாக தொடர்ந்து பேணாமல் இது எம்மீதான இனஅழிப்பின் ஒரு சாட்சியகமாக நினைவகமாக பேணுவதற்குரிய நடவடிக்கைகளை நாம் அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்ற முன்மொழிவினை முன்வைப்பதோடு. குறித்த விடயம் தொடர்பில் செம்மணி சித்துபாத்தி இந்து மயான சபையினருடன் கலந்துரையாடல் செய்து அது தொடர்பான விபரங்களுடன் குறித்த முன்மொழிவினை உங்களின் ஏகமனதான ஆதரவுடன் ஒரு தீர்மானமாக நிறைவேற்றுவதற்காக அடுத்த சபை அமர்வில் சமர்ப்பிக்கின்றேன் என்றார்.




# செம்மணியில் அகழ்ந்தெடுக்கப்பட்ட எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை 380 ஆக உயர்வு

## நாட்டின் மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக பதிவானது செம்மணி



- ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்வுப் பணிகளின் போது புதிதாக மேலும் 14 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் மூலம் செம்மணி மனிதப் புதைகுழியில் இதுவரை அடையாளம் காணப்பட்ட என்புத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை 380 ஆக அதிகரித்துள்ளது.

இதற்கமைய இலங்கையில் இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழிகளிலேயே அதிக எண்ணிக்கையிலான என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்ட மிகப்பெரிய மனிதப் புதைகுழியாகச் செம்மணி மனிதப் புதைகுழி பதிவாகியுள்ளது.

யாழ்ப்பாணம் - செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அடையாளம் காணப்பட்ட இப்புதைகுழி தொடர்பான மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளின் 27ஆம் அகழ்வு 17ம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

அன்று நடைபெற்ற அகழ்வாய்வின் போது, புதிதாகச் சிறுவர்களின் மூன்று என்புத் தொகுதிகள் உட்பட 14 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டு, அவை தூய்மைப்படுத்தப்பட்டு இலக்கமிடப்பட்டுள்ளன. மேலும், குழந்தை ஒன்றினது என்புத் தொகுதி மற்றும் சிறுவர் ஒருவரினுடைய என்புத் தொகுதி உட்பட மொத்தமாக 5 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இதன்படி, செம்மணி மனிதப் புதைகுழியின் தடயவியல் அகழ்வாய்வுத் தளம் ஒன்று மற்றும் இரண்டிலிருந்தும் இதுவரை மொத்தமாக 380 மனித என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அவற்றுள் 362 மனித என்புத் தொகுதிகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் இதுவரை பல்வேறு காலகட்டங்களில் 17 மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. புதிய கண்டுபிடிப்பை அடுத்து, இலங்கையின் மனிதப் புதைகுழி வரலாற்றில் செம்மணி முதலிடத்தைப் பிடித்துள்ளது.

இதற்கு முன்னர் முதலிடத்திலிருந்த ஏனைய புதைகுழிகளின் விவரங்கள் வருமாறு:

- மன்னார் சதொச மனிதப் புதைகுழி (இரண்டாவது இடம்)

கடந்த 2018 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இப்புதைகுழியில் 28 சிறுவர்களின் என்புத் தொகுதிகள் உட்பட 376 மனித என்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டு, இதுவரை இரண்டாவது பெரிய புதைகுழியாகக் காணப்படுகின்றது.

- மாத்தளை மனிதப் புதைகுழி (மூன்றாவது இடம்)

கடந்த 2013ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட இப்புதைகுழியில் 155 மனித என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டு, மூன்றாவது பெரிய புதைகுழியாகக் கருதப்படுகின்றது.

செம்மணி மனிதப் புதைகுழியின் முதலாம் கட்ட அகழ்வுப் பணிகள் 9 நாள்களும், இரண்டாம் கட்ட அகழ்வுப் பணிகள் 45 நாள்களும், மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளில்16-06-2026 வரை 27 நாள்களும் என மொத்தமாக இதுவரை 81 நாள்கள் அகழ்வுப் பணிகள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# எங்கு சென்றாலும் ஒரு "குழப்பவாதியாகவும்" "கோமாளியாகவும்" தன்னை அடையாளப்படுத்தும் மக்களால் தேர்ந்தெடுத்த உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா

- ந.லோகதயாளன்



வலிகாமம் வடக்கு பிரதேச செயலக அபிவிருத்திக்கூட்டம் 18ம் திகதி வியாழக்கிழமை அன்று தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

அன்றைய கூட்டம் பிரதேச செயலக அபிவித்திக் குழுத்தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது தெல்லிப்பழை வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சை பிரிவு மற்றும் வைத்தியசாலை ஆகியவற்றை மத்திய அரசின் கீழ் கொண்டு வந்து அதனை மேம்படுத்தி மக்களுக்கு சேவை வழங்குவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன் தையிட்டி விகாரை, போக்குவரத்து விடயங்கள், காணிகளை விடுவித்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனா கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இருவருக்கும் இடையில் தெல்லிப்பழை புற்றுநோய் வைத்தியசாலை தொடர்பில் கட்டுமையான வாக்குவாதங்கள் இடம் பெற்றன.

அத்துடன் தையிட்டி விகாரை அமைந்துள்ள காணிகளை விடுவிக்க வேண்டும் என்ற விடயத்தில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் இராமநாதன் அர்ச்சுனா ஆகியோருக்கு இடையிலும் பலத்த வாக்குவாதங்கள் ஏற்பட்டன.

அன்றைய கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான அர்ச்சுனா இராமநாதன், கஜேந்திரகுமார் பென்னம்பலம், அபிவிருத்தி குழுத் தலைவர் ஸ்ரீ பவானந்தராஜா வலி. வடக்கு பிரதேச செயலாளர், தவிசாளர், தெல்லிப்பளை பிரதேச செயலாளர் திணைக்கிள அதிகாரிகள் பொலிசார் உள்ளிட்ட பல துறை சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# மட்டக்களப்பில் பொலிஸ் உட்பட 5 மனித கொலைகள் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிள்ளையான் உட்பட 3 பேருக்கு யூன் 30 வரை விளக்கமறியல்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சுட்டுக் கொலை, வர்த்தகர் ஒருவர் கொலை, ரி.எம்.வி.பி கட்சி உறுப்பினர் சுட்டுக் கொலை, கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் கடத்தல் உட்பட மனித கொலை தொடர்பாக கைது செய்யப்பட்ட பிள்ளையான் மற்றும் இராணுவ புலனாய்வு பிரிவின் தகவலாளிகள் இருவரையும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் திங்கட்கிழமை (15) மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் சிஐடியினர் ஆஜர்படுத்திய போது அவர்களை எதிர்வரும் 30ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

கிழக்கு பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் சுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவங்கள் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான பிள்ளையான் என அழைக்கப்படும் சி.சந்திரகாந்தனை கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவு (சிஐடியினர் மட்டக்களப்பில் உள்ள அவரது காரியாலயத்தில் வைத்து கடந்த 2025 ஏப்ரல் 7ம் திகதி சிஐடி யினர் கைது செய்தனர்.

இதனை தொடர்ந்து சிஐடி யினர் தொடர் விசாரணையில் பிள்ளையானின் வழிகாட்டுதலின் கீழ் மட்டக்களப்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் கடத்தப்பட்டதாக கூறப்படும் 5 முக்கிய மனிதக் கொலைகள் தொடர்பான இரகசிய தகவல்களை தெரிய வந்துள்ளது.

குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் விசாரணைகளின் படி, மட்டக்களப்பு பிராந்தியத்தை மையமாகக் கொண்டு திட்டமிட்டு நடத்தப்பட்டுள்ளது இதில் 2006ம் ஆண்டு கல்லடி பிரதேசத்தில் கடமையில் இருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை.

பிள்ளையான் குழுவினரால் கப்பம் கோரப்பட்ட பணத்தை வழங்க மறுத்த வர்த்தகர் ஒருவரை கொடூரமாகக் கொலை செய்யப்பட்டமை. அவருடைய கட்சிக்குள் ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக பிள்ளையானின் சொந்தக் குழுவைச் சேர்ந்த உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டமை.

கடந்த 2006ஆம் ஆண்டு டிசம்பர் 15ஆம் திகதி கொழும்பில் வைத்து கிழக்கு பல்கலைக்கழகத்தின் அப்போதைய உபவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டமை.

போன்ற கொலைகள் தொடர்பில் பிள்ளையான் மீதும் அந்த கொலைகள் மீது தொடர்புடைய இராணுவ புலனாய்வு பிரிவின் தகவலாளிகளாக செயற்பட்டு வந்த காத்தான்குடியை சேர்ந்த முகமட் சிபான், மற்றும் முகமட் சகீத், ஆகியோரை கடந்த கடந்த 2025 நவம்பர் மாதம் சிஐடி கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டு பயங்கரவாத தடுப்பில் வைத்திருந்த பிள்ளையான் மற்றும் இராணுவ புலனாய்வு பிரிவின் தகவலாளிகளான இருவர் உட்பட 3 பேர் மீது வழக்கு தாக்கல் செய்த விவரங்கள் அடங்கிய விசேட அறிக்கை 15ம் திகதி திங்கட்கிழமை அன்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் சமர்ப்பித்து பிள்ளையான் தவிர்ந்த ஏனைய இருவரையும் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் அழைத்து வந்து நீதிமன்றில் ஆஜர் படுத்தினர்.



இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதவானிடம் சிஐடி யினர் பிள்ளையானின் பாதுகாப்பு காரணமாக அவரை அழைத்து வர முடியாத காரணத்தை நீதவானுக்கு தெரிவித்ததுடன் இதனுடன் தொடர்புபட்ட ஒருவர் இறந்துள்ளதாகவும் ஒருவர் வெளிநாட்டில் இருப்பதாகவும் அறிவித்தனர் இதனையடுத்து பிள்ளையானை சூம் இணையவழி ஊடாக விசாரணை மேற்கொண்ட நீதவான் 3 வரையும் எதிர்வரும் 30ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

இதேவேளை பிள்ளையான் மற்றும் அவரது குழுவினருக்கு எதிராக இந்த வழக்கு தொடர்பான விபரங்கள் ஏற்கனவே கல்கிஸ்ஸ நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு, அவர் தற்பொழுது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை பிள்ளையானின் மிக நெருங்கிய தோழரும், கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும், ரி..ம்.வி.பி கட்சியின் அம்பாறை மாவட்ட அமைப்பாளருமான இனியபாரதி என அழைக்கப்படும் கே. புஷ்பகுமார் என்பவருக்கு எதிராக 7 மனிதக் கொலைகள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இனியபாரதியான அவர் தனக்கு எதிரான குற்றவியல் வழக்குகளின் சான்றுகளை அழிப்பதற்காக, கடந்த 2022ஆம் ஆண்டு அக்கரைப்பற்று நீதிமன்றத்தின் ஆவணக் காப்பகத்திற்கு தீ வைத்த சம்பவத்திலும் பிள்ளையான் மற்றும் அவரது குழுவினருக்கு நேரடித் தொடர்பு இருப்பதாகக் கூறி இனியபாரதி கைது செய்யப்பட்டிருந்தமை சுட்டிக்காட்டத்தக்கது.

பிள்ளையானை நீதிமன்றத்துக்கு அழைத்துவருவதாக தெரிவிக்கப்பட்டதையடுத்து நீதிமன்ற பகுதியை சுற்றி விசேட அதிரடிப்படையினர் பொலிசார் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டதுடன் நீதின்ற பகுதிக்கு செல்லும் பொதுமக்கள் பலத்த சோதனையின் பின்னர் பொலிசார் அனுமதித்ததை காணக்கூடியதாக இருந்தது.

# "சர்ச்சைகளுக்கு" உள்ளாகியுள்ள திருகோணமலை கடற்படை "கன்சைட்" சித்திரவதை முகாமிற்கு நீதவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் நேரில் சென்று பார்லையிட்டார்



திருகோணமலை கடற்படை முகாமில் அமைந்துள்ள "கன்சைட்" (Gun Site) எனப்படும் நிலத்தடி சிறைச்சாலையில், கடந்த காலத்தில் பலர் கடத்தப்பட்டு, சித்திரவதை செய்யப்பட்டு, காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பான குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளின் அடிப்படையில், திருகோணமலை நீதவான் நீதிமன்ற நீதிபதி எம். எஸ். எம். சம்சுதீன் கடந்த புதன்கிழமை 17ம் திகதி (17-06-2026) குறித்த சிறைச்சாலைக்கு நேரில் சென்று கள ஆய்வு மேற்கொண்டார்.

இந்த விசாரணையின்போது, குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தனது விசாரணைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்றும், அதன் முன்னேற்றம் குறித்த அறிக்கையை மூன்று நாட்களுக்குள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் நீதவான் உத்தரவிட்டார். மேலும், விசாரணைகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்த மேலதிக அறிக்கையில், சம்பந்தப்பட்ட இடத்தின் காணொளிப் பதிவுகளையும் புகைப்படங்களையும் இணைத்துச் சமர்ப்பிக்குமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

பதினொரு இளைஞர்களைக் கடத்திக் காணாமல் ஆக்கியமை மற்றும் பலரைக் கடத்திச் சித்திரவதை செய்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாகத் தொடரப்பட்டுள்ள வழக்கின் விசாரணையின் ஒரு பகுதியாகவே, நீதிபதி இந்த கள விசாரணையை மேற்கொண்டார்.



இதனைத் தொடர்ந்து, பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 18ம் திகதி வியாழக்கிழமை அன்று முதல் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இந்த மேலதிக விசாரணைகளில் திருகோணமலை குற்றப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் குழுவினரும் இணைந்து பணியாற்றி வருகின்றனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# "தமக்கென ஓர் இடம் – அழகான வாழ்க்கை" என்ற பெயரிலான அரசின் வீடமைப்பு வேலைத்திட்டம் மன்னாரில் ஆரம்பமானது!

மன்னார் நிருபர்

## ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 98 பயனாளர்களுக்கு காசோலைகள் வழங்கப்பெற்றன



- எஸ்.ஆர்.லெம்பேட் (18-06-2026)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் "தமக்கென ஓர் இடம் - அழகான வாழ்க்கை" தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், மன்னார் மாவட்டத்தில் மேலதிகமாக 98 வீடுகள் அமைக்க 18ம் திகதி அன்றைய தினம் வியாழக்கிழமை அடிக்கல் நாட்டப்பட்டதோடு, தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு முதற்கட்ட காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டது.

மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் (2026) ஆம் ஆண்டில் 199 வீடுகளுக்கு 199 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஏற்கனவே 101 வீடுகளின் கட்டுமான பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அடுத்த கட்டமாக 98 வீடுகளுக்கு அனுமதி வழங்க பட்டுள்ள நிலையில் முதல் கட்ட நிதிக்கான காசோலைகள் வழங்குதல் மற்றும் அடிக்கல் நாட்டும் நிகழ்வு அன்று வியாழக்கிழமை (18) மாலை இடம்பெற்றது.



மன்னார், நானாட்டான், முசலி,மாந்தை மேற்கு மற்றும் மடு பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த 98 பயனாளிகளுக்கு காசோலை வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

மடு பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மடு பிரதேச செயலகத்திலும், முசலி மற்றும் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு நானாட்டான் பிரதேசச் செயலகத்திலும், மன்னார் மற்றும் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர்கள் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு மன்னார் பிரதேசச் செயலகத்திலும் வைத்து காசோலைகள் அன்று வியாழக்கிழமை (18) மாலை வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன், மன்னார் மாவட்டச் செயலாளர் கே. கனகேஸ்வரன், திட்டமிடல் பணிப்பாளர் எம். ஹலீம் டீன், பிரதேச செயலாளர்கள், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ச.ஜெயக்குமார் மற்றும் அதிகார சபையின் உத்தியோகத்தர்கள் கலந்து சிறப்பித்தனர்.

"தமக்கென ஓர் இடம் - அழகான வாழ்க்கை" திட்டத்தின் மூலம் மன்னார் மாவட்டத்தில் வீடற்ற மற்றும் குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு நிலையான வீடமைப்பு வசதிகளை வழங்கும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# "மாகாண முதல்வராக ஆசைப்பட்ட "மாவை சேனாதி" போன்று அரசியல் பதவிக்காக கீழ்த்தரமான நடக்கும் மானிப்பாய் பிரதேச தவிசாளர்"

## குற்றஞ்சாட்டுகின்றார் பிரதேச சபை உறுப்பினர் அச்சுதபாயன்!



மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் க.ஜெகசீதன் குடும்பப் பெண்ணை அவமானப் படுத்தியதாகவும், வற்புறுத்தி அவரை அழைத்துச் சென்று ஊடகவியலாளர் சந்திப்பு நடாத்தியதாகவும், தனது அரசியல் பிழைப்புக்காக கேவலமான வேலையை செய்வதாகவும் முன்னர் மாவை சேனாதிராஜா உயிரோடு இருக்கையில் வடக்கு மாகாண சபையின் முதல்டவராக இருந்துவிட்டு போகின்றேன் என்று ஆசைப்பட்டது போன்று மானிப்பாய் பிரதேச சபையின் தற்போதைய தலைவர் ஜெகதீசன் மாகாண சபை உறுப்பினர் ஆவதற்கு ஆசைப்படுகின்றார் என சபையின் உறுப்பினர் அச்சுதபாயன் குற்றம் சாட்டியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணம் - இளவாலை பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், மானிப்பாய் பிரதேச சபைக்கு உட்பட்ட காடாப்புலம் பிரதேச சபை காணியில் உள்ள இரும்பு கதவானது திருட்டு போன நிலையில் ஊடகவியலாளர் அது குறித்து செய்தி சேகரிப்புக்கு சென்றவேளை அவருக்கு மறுப்பு தெரிவிக்கப்பட்டது.

பின்னர் அவர் அந்த காணியில் எத்தனை பேர் கடமையில் இருப்பதாக பிரதேச சபையிடம் வினவியபோது அங்கு ஒருவர் மட்டும் காவல் கடமையில் இருப்பதாக பிரதேச சபையினரால் தெரிவிக்கப்பட்டது. அதற்கு அந்த ஊடகவியலாளர் குறித்த காணியில் ஒரு பெண் உட்பட இருவர் இருப்பதாக பிரதேச சபை தரப்பினருக்கு தெரிவித்துள்ளார். அத்துடன் ஆளுநரின் செயலாளருக்கும் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

அதன்பின்னர் சுமார் ஏறக்குறைய 45 நிமிடங்கள் அந்த காணிக்கு அண்மித்த பகுதியில் நின்றுள்ளார். அவ்வளவு நேரம் நின்றும் காணியில் இருந்து யாரும் வெளியேறவில்லை. அங்கு இருந்த பெண், அங்கு இருந்த காவலாளியின் மனைவி என்றும், அவர் கணவனுக்கு சாப்பாடு கொடுப்பதற்காக வந்தவர் என்றும் தவிசாளர் கூறுகிறார்.

சாப்பாடு கொடுத்து வந்த பெண் எதற்காக ஏறக்குறைய 45 நிமிடங்கள் அங்கு நிற்க வேண்டும்? சாப்பாடு கொடுக்க வந்த பெண் காணியின் வாயிலில் வைத்து தானே சாப்பாடு வழங்க வேண்டும். எதற்காக காணியின் உள் பகுதிக்குள் சென்றார்?





குறித்த காணிக்குள் செல்வதற்கு அந்த பெண்ணுக்கு பண்டத்தரிப்பு உப பிரதேச செயலக பொறுப்பதிகாரி அனுமதி வழங்கியதாக தவிசாளர் கூறுகிறார். முதல்நாள் அந்த பெண்ணின் கணவர் கடமையில் இருந்தபோதே கதவு களவு போனது இவ்வாறு சூழ்நிலையில் எதற்காக அந்த பெண்ணை அடுத்தநாள் உள்ளே அனுமதிக்க வேண்டும்?

அந்த பெண்ணின் படத்தினை ஊடகவியலாளர் செய்தியில் பிரசுரித்ததாக கூறி அவர்களையும் அழைத்துச் சென்று மானிப்பாய் பிரதேச சபையின் தவிசாளர் யாழ். ஊடக அமையத்தில் ஒரு ஊடகவியலாளர் சந்திப்பு செய்தார். அதன்போது, அந்த பெண்ணை அந்த ஊடகவியலாளர் அவமரியாதைக்கு உட்படுத்தியதாக தவிசாளர் ஊடக சந்திப்பில் கூறுயுள்ளார்.

அந்த பெண் நீண்ட தூரத்தில் இருக்கும் போது, அதுவும் பின் பக்கமாக எடுத்த படத்தையே அந்த ஊடகவியலாளர் செய்தியில் பதிவிட்டுள்ளார். அந்த படத்தில் இருப்பவர் யார் என்று யாரும் அடையாளம் காணவே முடியாத நிலையில் அந்த படம் காணப்படுகிறது. அத்துடன் அந்த ஊடகவியலாளருக்கு அது யாருடைய மனைவி? அவர் யார் என்று கூட தெரியாது. உள்ளே மேலதிகமாக ஆட்கள் இருப்பதை உறுதிப்படுத்தவே அவர் அந்த செய்தியில் படத்தை பிரசுரித்துள்ளார். ஆனால் தவிசாளர் உள்ளிட்ட குழுவினர் அவரை அழைத்து சென்று ஊடகவியலாளர் சந்திப்பு நடாத்தி அந்த பெண்ணை உலகத்துக்கு அம்பலப்படுத்தியுள்ளார்.

யார் என்றே அடையாளம் காண முடியாதவாறு அந்த பெண்ணின் பின்புற படத்தினை பகிர்ந்து ஊடகவியலாளர் அந்த பெண்ணை அவமானப்படுத்தினார் என்றால், அவரது முகத்தினை காட்டி ஊடக சந்திப்பினை ஏற்பாடு செய்த தவிசாளரை எவ்வாறு சொல்வது? தவிசாளர்தான் அந்த பெண்ணின் முகத்தினை வெளிக்காட்டி அவமானப்படுத்திய உள்ளார்.

அந்த ஊடக சந்திப்பில் பார்க்கும்போது தவிசாளர் அவர்களை வற்புறுத்தி ஊடக சந்திப்புக்கு அழைத்து வந்தது தெளிவாக தெரிகிறது. அவர்கள் கருத்து தெரிவிக்கும்போது பயந்து பயந்து கருத்து தெரிவிக்கிறார்கள். அதில் உள்ள பணியாளரது வேலைக்கு ஏதாவது பிரச்சினை வந்தால் தவிசாளர் அவர்களை பாதுகாக்கப்போவது இல்லை.

கஷ்டப்பட்ட குடும்பப் பெண்ணின் படத்தினை செய்தியில் பிரசுரித்தாக தவிசாளர் பெரிய கரிசினையாக கூறுகின்றார். ஆனால் சிறு சிறு தவறுகளை செய்த மிகவும் வறுமைகாகோட்டுக்கு உட்பட்ட பழிவாங்கும் வகையில் பணிநீக்கம் செய்துள்ளனர். அந்த விடயத்தில் ஏன் கரிசினை காட்டவில்லை.

ஊடகங்கள் வாயிலாக சுட்டிக் காட்டப்படும் தவறுகளை திருத்தாமல் தவறுகளை சுட்டிக் காட்டுகின்ற ஊடகவியலாளர்களை பழிவாங்கும் செயற்பாட்டில் தவிசாளர் ஈடுபடுகின்றார். அந்த ஊடகவியலாளர் பிரதேச சபையின் கருத்துக்களை கேட்காமல் செய்திகளை பிரசுரிப்பதாக தவிசாளர் குற்றம் சாட்டுகிறார். ஆனால் அது உண்மை இல்லை. அந்த ஊடகவியலாளர் பிரதேச சபையினரை தொடர்புகொண்டு அவர்களது தரப்பு கருத்துக்களை கேட்கும்போது அவர்கள் அதற்கு பதிலளிப்பதில்லை. எனவே அந்த ஊடகவியலாளர் பிரதேச சபையினர் பதிலளிக்கவில்லை என்று பல இடங்களில் தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தவிசாளர் தனிப்பட்ட பழிவாங்கலை நிறுத்திவிட்டு சுட்டி காட்டுகின்ற தவறுகளை திருத்த வேண்டும் என்றும் தற்போது வகிக்கும் தனது பதவியில் மக்கள் நலன் சார்ந்து செயற்பட வேண்டும் என்றும் சபையின் உறுப்பினர் அச்சுதபாயன் குறிப்பிட்டுள்ளார்.

# யாழ்ப்பாணத்தில் தமிழரசுக் கட்சியை சீரழிக்கும் இரகசிய கூட்டங்களை நடத்தும் சி.வி. கே. சிவஞானம் – எம். ஏ. சுமந்திரன்!

## இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ் மாவட்ட வாலிப முன்னணித் தலைவரின் சீற்றம்!




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட தொகுதிக் கிளைகள், மற்றும் மாவட்ட கிளைகளுக்கு புதிய நிர்வாக உத்தியோகத்தர்கள் தெரிவு முறைகேடாக யாப்புக்கு முரணாக இடம்பெற்றுள்ளது என்பதனை சுட்டிக்காட்டியும், இதற்கான வலுவான காரணங்களையும் நிர்வாக தெரிவுக் கூட்டத்தில் இடம்பெற்ற முறைகேடான சம்பவங்களையும் சுட்டிக்காட்டி கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்களுக்கும் மத்திய குழுவின் சிறப்பு அழைப்பாளர்களுக்கும் யாழ்ப்பாண மாவட்ட வாலிப முன்னணியின் தலைவர் கந்தசாமி பிருந்தாபன் கடிதம் எழுதியுள்ளார்.

அவரால் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள்:

1. 21.10.2025 அன்று காங்கேசன் துறைத் தொகுதிக்கான நிர்வாக தெரிவு மாவட்ட தலைவர் மற்றும் செயலாளருக்கு தெரியாமல் ஏற்கனவே இயங்கு நிலையில் இருக்கும் தொகுதி நிர்வாகத்திற்கு தெரியாமல் கட்சியின் பதில் தலைவர் பதில் செயலாளரால் (சி.வி.கே. சிவஞானம் மற்றும் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர்) குறிப்பிட்ட சில உறுப்பினரை அழைத்து புதிய நிர்வாக தெரிவு நடைபெற்றது யாப்பு விதி முறைகளுக்கு முரணானது, இது தொடர்பாக தொகுதிகிளை நிர்வாகிகள் கட்சியில் முறையிட்டுள்ளனர்.

2. 23.04.2026 அன்று வட்டுக்கோட்டைத் தொகுதியில் இடம்பெற்ற வெற்றிடம் நிரப்புதல் எனும் பெயரில் புதிதாக நிர்வாக தெரிவுக்கு மாவட்ட தலைவர் செயலாளருக்கு தெரியாது கட்சியின் பதில் தலைவர் பதில் செயலாளரால் குறிப்பிட்ட சில உறுப்பினர்களை தொலைபேசி மூலம் அழைத்தும் பிரதேச சபை உறுப்பினர்களை கொண்டும், காரைநகர் பிரதேசத்தையும் இணைத்து தொகுதி நிர்வாக தெரிவு இடம்பெற்றது யாப்பு விதிகளுக்கு முரணானது, இது தொடர்பாக ஏற்கனவே ஊடகங்களில் செய்தி வெளிவந்த நிலையிலும் தொகுதியின் கட்சியின் உறுப்பினர்கள் கட்சி நிர்வாகிகளுக்கு முறையிட்டுள்ளனர்.

3. 31.05.2026 அன்று யாழ்மாவட்ட கிளை உத்தியோகத்தர் தெரிவுக் கூட்டம் மாவட்டத் தலைவர் இன்றி கட்சியின் பதில் பொதுச் செயலாளர் தலைமை தாங்கி கூட்டம் நடைபெற்ற வேளை புதிய நிர்வாக தெரிவு தொடர்பாக தெரிவு செய்ய முன் உறுப்பினராகள் கருத்துக்களை முன்வைக்க சந்தர்ப்பம் கேட்டபோதும் சந்தர்ப்பம் தரவில்லை, ஜனநாயக கட்சியில் அங்கத்தவர்களின் கருத்துக்களை கேளாது அராஜகமான முறையில் ஜனநாயக விரோதமான முறையில் கூட்டத்தில் தலைமை தாங்கிய நடாத்திய பதில் செயலாளர் நடந்து கொண்ட விதம் ஜனநாயகத்திற்கு சாவுமணி அடிதாற்போல அமைந்தது. தலைமை வயமிடாக இருந்து தெரிவு செய்தால் மறு தெரிவு இருக்க கூடாது என மிரட்டி கூட்டத்தை தலைமைதாங்கிய பதில் பொது செயலாளரால் எச்சரிக்கையாக கருத்து தெரிவிக்கப்பட்டது. இந்த விடயம் முற்றிலுமாக யாப்பு விதிமுறைகளுக்கும் ஜனநாயகத்திற்கும் விரோதமான செயலாகும்.

4. கடந்த தலைவர் தேர்வில் தொகுதி என்பதை பிரதேச ரீதியானது என கட்சியின் மத்திய செயற்குழுவில் தீர்மானம் நிறைவேற்றி விட்டு வலிகாமம் தென்மேற்கு, வலிகாமம் தெற்கு என இரு பிரதேச பிரிவுகளாக பொதுசபைக்கு 5 பேர் படி 10 பேர் தெரிவு செய்து தலைவர் தேர்வு நடைபெற்றது. இந்த நிர்வாக நடைமுறைகளுக்கு எதிராக நீதி மன்ற வழக்கு நிலுவையில் உள்ள நிலையில் பிரதேச பிரிவாக இருந்த நிர்வாக முறையை, இப்போது தொகுதி என ஒன்றாக இணைத்து தெரிவு செய்யப்பட்டது எந்த முறையிலானது, யாருடைய தீர்மானம் என்ற விடயங்களை சுட்டிக்காட்டப்பட்டு, கூட்டத்தில் இடம் பெற்ற விடயங்களையும் சுட்டிக்காட்டி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்மாவட்ட இளைஞர் அணித் தலைவர் கந்தசாமி பிருந்தாபனால் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மத்திய செயற்குழு சிறப்பு அழைப்பாளர்களுக்கும் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

கனடிய செய்திகள்
Canadian News

# உலகத் தமிழறிஞர்களின் கவனத்தை ஈர்த்துள்ள "செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும்" என்னும் அனைத்துலகத் தமிழர் மாநாடு – 2026



## கனடாவில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டிற்காக இதுவரை 497 ஆய்வுச் சுருக்கங்கள் கிடைக்கப்பெற்றுள்ளமை நம்பிக்கை தரும் தகவல் அல்லவா?!

கனடா வாழ் செயற்பாட்டாளர் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் தலைமையில் இயங்கிவரும் அனைத்துலகத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் “செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும்” என்ற தலைப்பின் கீழ் அனைத்துலகத் தமிழர் மாநாடு எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை கனடாவின் ரொறன்ரோ மாநகரில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டை முன்னிட்டு 5 தலைப்புகளின் கீழ் உலகம் முழுவதுமுள்ள தமிழறிஞர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆய்வாளர்களிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பெற்றிருந்தன. அதற்கான ஆய்வுச் சுருக்கங்களை கடந்த யூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப் பெற்றிருந்த நிலையில், உலகிலுள்ள பல நாடுகளிலிருந்தும் மொத்தமாக 497 ஆய்வுச்சுருக்கங்கள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன. அதிலும், இந்தியா மற்றும் இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து அதிகளவிலான ஆய்வுச்சுருக்கங்கள் எமக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.





இவற்றுள் “மெய்ப்பொருளியலும் பண்பாடும்” மற்றும் “தமிழர் வரலாறும் வாழ்வியலும்” ஆகிய தலைப்புகளின் கீழ் அதிக எண்ணிக்கையிலான ஆய்வுச் சுருக்கங்கள் கிடைத்துள்ளன. மேலும் “தமிழும் செய்யறிவும்”, “பொருளியல் சிந்தனையும் வாழ்வியலும்”, “இலங்கை வடகிழக்குப் பொருண்மிய மேம்பாடு” ஆகிய தலைப்புகளின் கீழும் குறிப்பிடத்தக்க அளவில் ஆய்வுச்சுருக்கங்கள் கிடைத்துள்ளன.

மாநாட்டில் பங்கேற்கும் ஆய்வாளர்களை தேர்வு செய்வதற்காக உலகின் பல நாடுகளைச் சேர்ந்த அறிஞர்களை உள்ளடக்கி ஐந்து தலைப்புகளுக்குமான வல்லுநர் குழுக்கள் அமைக்கப்பெற்றுள்ளன.

இக்குழுக்களின் பரிந்துரைகளுக்கேற்ப தேர்வுசெய்யப்பெறவுள்ள ஆய்வாளர்களுக்கு ஆய்வுச்சுருக்கத் தேர்வு பற்றி எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு ஜூலை மாதத் தொடக்கத்தில் அதிகாரப்பூர்வ அறிவிப்புகள் அனுப்பி வைக்கப்படும்.

இந்த மாநாட்டில் ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பிப்பதற்கு பல நாடுகளில் இருந்தும் ஆய்வாளர்கள் தேர்வு செய்யப்பெற்றுள்ளனர்.

மாநாட்டிற்காக தங்களது ஆய்வுச் சுருக்கங்களை அனுப்பியுள்ள உலகத் தமிழறிஞர்கள் மற்றும் ஆய்வாளர்கள் அனைவருக்கும் அனைத்துலகத் தமிழர் பேரவை தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அனைத்துலகத் தமிழர் மாநாடு - 2026 இனது ஆய்வரங்கக் குழுத் தலைவரும் சென்னைப் பல்கலைக்கழகச் சைவ சித்தாந்தத் துறைப் பேராசிரியருமான. நல்லூர் சா. சரவணன் அவர்கள் பத்திரிகைகளுக்கு அனுப்பிவைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

(12ம் பக்கத் தொடர்ச்சி)

லுகாஷென்கோ தனது உரையில், “போரைக் தவிர்க்க நாம் போருக்குத் தயாராக வேண்டும்”, என்று கூறியிருப்பது, பெலாரஸ் எதிர்கால பாதுகாப்பு சூழலை மிகவும் தீவிரமாகக் கருதுகிறது என்பதை காட்டுகிறது.

இதன் மூலம் ரஷ்யா தனது மேற்குப் பாதுகாப்பு வளையத்தை மேலும் உறுதிப்படுத்திக் கொண்டிருக்கிறது.

### உக்ரைனின் புதிய ஆயுதம்: எப்.பி.-5 “:. பிளாமிங்கோ” ஏவுகணை

போரின் சமீபத்திய முக்கிய மாற்றமாக உக்ரைன் அறிமுகப்படுத்தியுள்ள FP-5 Flamingo குரூஸ் ஏவுகணை பார்க்கப்படுகிறது.

இந்த ஏவுகணை குறித்து வெளியான தகவல்களின்படி:
- சுமார் 3,000 கிலோமீட்டர் தூரம் பாயக்கூடியது.
- 1,150 கிலோ எடை கொண்ட வெடிகுண்டை சுமக்க முடியும்.
- மிகக் குறைந்த உயரத்தில் பறந்து ரேடார் கண்காணிப்பிலிருந்து தப்பிக்கக்கூடியது.
- செயற்கைக்கோள் வழிநடத்தல் அமைப்பைக் கொண்டுள்ளது.

உக்ரைன் இந்த ஏவுகணைகளை நீண்ட தூர தற்கொலை ட்ரோன்களுடன் இணைத்து பயன்படுத்துகிறது. முதலில் ட்ரோன்கள் ரஷ்ய வான் பாதுகாப்பு அமைப்புகளை ஈர்க்கின்றன் பின்னர் குரூஸ் ஏவுகணைகள் இலக்குகளைத் தாக்குகின்றன.

இது எதிர்கால போர்முறைகளில் “ட்ரோன்-ஏவுகணை ஒருங்கிணைந்த தாக்குதல்” என்ற புதிய போர் கோட்பாட்டை உருவாக்குகிறது.

### ரஷ்யாவின் பதிலடி: உக்ரைனின் தொழில்துறை இதயத்தை குறிவைக்கும் தாக்குதல்கள்

FP-5 தாக்குதலுக்குப் பிறகு, ரஷ்யா உக்ரைனின் பாதுகாப்புத் தொழில்துறை அமைப்புகள் மீது மிகப்பெரிய அளவிலான ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை மேற்கொண்டது.

ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகத்தின் கூற்றுப்படி தாக்குதலுக்குள்ளானவை:
- ட்ரோன் உற்பத்தி ஆலைகள்
- ஏவுகணை தொகுப்பு மையங்கள்
- ரேடார் உற்பத்தி நிறுவனங்கள்
- இராணுவ விமானத் தளங்கள்
- போர் தளவாட மையங்கள்

குறிப்பாக, FP-5 ஏவுகணைகளுக்கான முக்கிய கூறுகளை உற்பத்தி செய்கிறது எனக் கூறப்படும் “MAK” தொழிற்சாலை முக்கிய இலக்காக இருந்ததாக மாஸ்கோ தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் நோக்கம், உக்ரைனின் நீண்ட தூரத் தாக்குதல் திறனை உருவாக்கும் தொழில்துறை அடித்தளத்தை பலவீனப்படுத்துவதாகத் தெரிகிறது.

### கீவ்-பெச்செர்ஸ்க் லாவ்ரா விவகாரம்: தகவல் போரின் மற்றொரு அத்தியாயம்

உலக பாரம்பரியச் சின்னமாக விளங்கும் Kyiv Pechersk Lavra மத வளாகம் சேதமடைந்ததைத் தொடர்ந்து, இரு தரப்பும் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டுகின்றனர்.

உக்ரைன், ரஷ்ய ஏவுகணை தாக்குதலே சேதத்திற்கு காரணம் எனக் கூறுகிறது.

மாறாக, ரஷ்யா தனது இலக்கு அருகிலுள்ள இராணுவ தொழிற்சாலை மட்டுமே என்றும், சேதத்தை ஏற்படுத்தியது உக்ரைன் இயக்கிய காலாவதியான Patriot ஏவுகணை என்றும் வாதிடுகிறது.

இந்த விவகாரம், போரின் இராணுவப் பரிமாணத்தைத் தாண்டி தகவல் மற்றும் பிரச்சாரப் போரின் முக்கியத்துவத்தை மீண்டும் வெளிப்படுத்துகிறது.

### ஐரோப்பாவில் உடையும் ஒற்றுமை

போரின் ஆரம்ப ஆண்டுகளில் காணப்பட்ட ஐரோப்பிய ஒற்றுமை தற்போது பல இடங்களில் சவாலுக்குள்ளாகிறது.

Robert Fico தலைமையிலான ஸ்லோவாக்கியா, உக்ரைனுக்கு வழங்கப்பட்ட ஆயுதங்களுக்கான இழப்பீட்டை ஐரோப்பிய ஒன்றியத்திடம் கோரத் தொடங்கியுள்ளது.

முன்னைய அரசு:
- MiG-29 போர் விமானங்கள்
- S-300 ஏவுகணை அமைப்புகள்
- கவச வாகனங்கள்

உள்ளிட்ட பல முக்கிய ஆயுதங்களை வழங்கியதால், நாடு “பாதுகாப்பற்ற நிலையில்” விடப்பட்டதாக பிகோ குற்றஞ்சாட்டுகிறார்.

அதே நேரத்தில், பல்கேரியாவும் தனது அரச கையிருப்பிலிருந்து ஆயுதங்களை அனுப்புவதை நிறுத்தியுள்ளது.

இந்த மாற்றங்கள், போரின் பொருளாதாரச் சுமை ஐரோப்பிய அரசியலில் புதிய எதிர்ப்புகளை உருவாக்குவதை காட்டுகின்றன.

### உக்ரைனின் ஐரோப்பிய எதிர்காலம்

மறுபுறம், Margus Tsahkna போன்ற தலைவர்கள், உக்ரைன் மற்றும் Moldova ஆகியவற்றின் ஐரோப்பிய ஒன்றிய உறுப்பினர் விண்ணப்பங்களை விரைவுபடுத்த வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

அவர்களின் பார்வையில், உக்ரைனை ஐரோப்பிய அமைப்புகளுக்குள் ஒருங்கிணைப்பது, ரஷ்யாவின் நீண்டகால செல்வாக்கை கட்டுப்படுத்தும் முக்கிய மூலோபாயமாகும்.

இதனால் ஐரோப்பிய ஒன்றியத்திற்குள் “ஆதரவை அதிகரிக்க வேண்டும்” என்ற அணியும், “போரின் செலவை குறைக்க வேண்டும்” என்ற அணியும் உருவாகி வருகின்றன.

### ஜி-7 மாநாட்டைச் சுற்றியுள்ள கலவரங்கள்

ஜெனீவாவில் நடைபெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், உலக அரசியல் மற்றும் பொருளாதார அமைப்புகளின் மீதான பொதுமக்கள் அதிருப்தி அதிகரித்து வருவதை காட்டுகின்றன.

வாகனங்கள் எரிக்கப்பட்டன, தடுப்புகள் அமைக்கப்பட்டன, காவல்துறையுடன் மோதல்கள் ஏற்பட்டன. போரின் செலவுகள், பணவீக்கம், ஆற்றல் நெருக்கடி மற்றும் உலக அதிகார அரசியல் ஆகியவற்றுக்கு எதிரான எதிர்ப்புகள் இந்த ஆர்ப்பாட்டங்களில் வெளிப்பட்டன.

இவை, உக்ரைன் போர் ஐரோப்பிய சமூகங்களின் உள்நாட்டு அரசியலையும் பாதிக்கத் தொடங்கியிருப்பதை உணர்த்துகின்றன.

### புதிய உலக ஒழுங்கைக் குழப்பும் போர்க்களமாக மாறியுள்ள ரஷ்யா-உக்ரைன் கடும் மோதல்கள்

ரஷ்யா-உக்ரைன் போர் தற்போது ஒரு திருப்புமுனையில் உள்ளது. புதிய நீண்ட தூர ஏவுகணைகள், ட்ரோன் தொழில்நுட்பம், தொழில்துறை அடித்தளங்களை குறிவைக்கும் தாக்குதல்கள், தகவல் போர், பொருளாதார அழுத்தங்கள் மற்றும் அரசியல் பிளவுகள் ஆகிய அனைத்தும் இந்த மோதலை புதிய கட்டத்திற்குக் கொண்டு செல்கின்றன.

ரஷ்யா தனது நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. உக்ரைன் புதிய தொழில்நுட்பங்களின் மூலம் தூரத் தாக்குதல் திறனை விரிவுபடுத்துகிறது. ஐரோப்பா ஆதரவு மற்றும் சோர்வு என்ற இரு எதிர்மறை அழுத்தங்களுக்கு இடையில் சிக்கியுள்ளது. அமெரிக்கா மற்றும் நேட்டோ தங்களின் நீண்டகால மூலோபாயத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டிய சூழல் உருவாகியுள்ளது.

எனவே, இந்தப் போர் வெறும் உக்ரைனின் எதிர்காலத்தை மட்டுமல்ல ஐரோப்பாவின் பாதுகாப்பு அமைப்பு, உலக அதிகார சமநிலை மற்றும் 21ஆம் நூற்றாண்டின் புதிய புவிசார் அரசியல் ஒழுங்கையும் தீர்மானிக்கக்கூடிய மோதலாக மாறியுள்ளது.

***“உக்ரைனின் போர்க்களத்தில் வெடிப்பவை ஏவுகணைகள் மட்டுமல்ல; எதிர்கால உலக ஒழுங்கின் வடிவமைப்பை தீர்மானிக்கும் ஆய்வுகூடமாகவும் மாறலாம்.”***



# இவ்வார ராசிபலன்

## 19-06-2026 வெள்ளி தொடக்கம் 25-06-2026 வியாழன் வரையும்




**மேஷம்:** சந்தோஷமான சூழ்நிலை அமையும் வாரம். பணியில் பாராட்டு கிட்டும். தொழில் திருப்பம் தரும். அனுகூலமான போக்கு நிலவும். தந்தை நலம் கூடும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். மனக்கலக்கம் உருவாகும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். காரிய தாமதம் ஏற்படும். கடன் பிரச்சனை குறையும். கற்பனை ஆற்றல் பெருகும். எதிர்பாராத செலவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டு கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். இடமாற்றம் நன்மை தரும். பயணம் தடைப்படும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மேன்மை உண்டு. பூமியால் லாபம் உண்டு. கலை ஆர்வம் கூடும். எண்ணங்கள் ஈடேறும். எதிர்பார்ப்புகள் கூடும். அலுவலக பணியில் கவனம் தேவை. உடல் சோர்வு உண்டாகும். விபரீத போக்கு மறையும். பூர்வீக சொத்து சேரும். சொல்லில் கவனம் தேவை. வீண் வம்பு அதிகரிக்கும். புதிய நட்பில் கவனம் தேவை. இயந்திரத் தொழில் லாபம் தரும். குழந்தைகள் நலத்தில் அதிகம் அக்கறை தேவை. விளையாட்டுத் துறையில் வெகுமானம் உண்டு. பொறாமைகள் விலகும். உறவினர் பகை மாறும். அந்நியர் ஆதரவு கிட்டும். காதல் கசக்கும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. வழக்கு முடிவுக்கு வரும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க வேண்டும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: 3,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,K




**ரிஷபம்:** விவசாயிகள் பயன்பெறும் வாரம். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பெண்களின் கௌரவம் உயரும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பணவரவு திருப்தி தரும். பல் வலி வந்து போகும். எதிர்பார்ப்புகள் உருவாகும். தொழில் வளர்ச்சி கூடும். சகோதரியினால் லாபம் உண்டு. உறவினரால் உற்சாகம் கூடும். கைப்பொருள் களவுப்போகும். சுபச்செய்தி கூடி வரும். வீடு, மனை யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. பெருமைகள் சேரும். விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். குடும்ப ஒற்றுமை கூடும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். திடீர் பயணம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். பிணிகள் நீங்கும். பணியில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய நண்பரை சந்திப்பீர்கள். காதல் எண்ணம் ஈடேறும். கனவுத்தொல்லை உண்டு. கலைத்தொழிலில் திருப்பம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. விருந்தினர் வருகை உண்டு. மருத்துவச் செலவு ஏற்படும். மனோ பயம் நீங்கும். குதூகலம் அதிகமாகும். உடல் உபாதை அதிகமாகும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். மனக்கசப்பு நீங்கும். புதிய தொழில் வாய்ப்புகள் உருவாகும். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பங்குச்சந்தையில் லாபம் பெருகும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். ஜீவராசிகளுக்கு உணவு அளித்தால் யோகப் பலன் கூடும். பணப்புழக்கம் சரளமாகும். பகை மறையும். கணவன், மனைவி உறவு தித்திக்கும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. மனதில் மகிழ்ச்சி கூடும். புத்தி சாதுர்யம் கூடும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். சிக்கனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: குல தெய்வம், அதிர்ஷ்ட எண்: 2,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,N




**மிதுனம்:** நினைத்தது நிறைவேறும் வாரம். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய கடன் அடையும். சேமிப்பு பெருகும். திறமைகள் வெளிப்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். செயல்களில் பொறுமை தேவை. வீண் செலவுகள் அதிகரிக்கும். உழைப்பில் கவனம் தேவை. பங்குச்சந்தை லாபம் தரும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். சுபச் செலவுகள் அதிகரிக்கும். சகோதர வழியில் கவனம் தேவை. தர்ம சிந்தனை மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். வாழ்த்துச் செய்திகள் வரும். மறைமுக எதிர்ப்புகள் விலகும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். முதலீடு கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். புதிய கடன் வாங்க நேரிடும். மனக்குழப்பம் தீரும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வாழ்வில் புகழ் கூடும். திருமண முயற்சி பலன் தரும். ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். அதிர்ஷ்ட வாய்ப்புகள் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். எதிரிகள் விலகி செல்வார்கள். கால்நடைகளால் லாபம் கிட்டும். புதிய நண்பர்களை சந்திப்பீர்கள். அரசு வழியில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல்தெய்வம், அதிர்ஷ்ட எண்: 4,3,5,7
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,V




**கடகம்:** சுபகாரியம் கைகூடும் வாரம். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் அமைதி உண்டு. நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கைகூடும். தொழில் முயற்சி வெற்றி தரும். சொந்தபந்தங்களால் உதவி உண்டு. தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. தந்திரமாக செயல்படுவீர்கள். வியாபாரம் வெற்றி தரும். பணவரவு சுமாராக இருக்கும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். எதிர்பார்த்த உதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். இனிப்பான செய்திகள் வரும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். சச்சரவுகள் அகலும். பேச்சில் நிதானம் தேவை. வங்கி சேமிப்பு உயரும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியம் நடந்தேறும். எதிரிகளால் தொல்லை குறையும். வாக்குவாதங்கள் உருவாகும். பணியில் கண்டிப்பு தேவை. பெற்றோர் நலனில் அக்கறை கூடும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். ஆறுதலான சூழ்நிலைகள் அமையும். பூமி வாங்கும் யோகம் உண்டு. அலைபேசி தகவல் ஆதாயம் தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். கோதுமை தானம் குல விருத்தி சேரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதிகள் மேம்படும். பெரியவர்களை அனுசரித்து செல்வது நல்லது. சாதனையான காலம். எதார்த்தமாக செயல்படவும். பக்குவமான பேச்சு பயன் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பெருமாள், அதிர்ஷ்ட எண்: 4,1,9,3
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர்



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 9940431377




**சிம்மம்:** யோகமான வாரம். திருப்புமுனை ஏற்படும். உத்தியோக உயர்வு கிட்டும். இடமாற்றம் நன்மை தரும். குடும்ப அன்யோன்யம் பலப்படும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். கடல் கடந்த பயணம் உண்டாகும். ஆனந்தம் குடிக்கொள்ளும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆலோசனை பூர்த்தியாகும். தொழிலில் வளர்ச்சி மேன்மை தரும். தொல்லை தந்தவர் விலகி விடுவர். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். பயணத்தில் கவனம் தேவை. புது முயற்சிகள் தள்ளி வைக்கவும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். பொறாமைகள் அதிகரிக்கும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். பயணம் தடைப்படும். வீடு வாங்கும் யோகம் உண்டு. பணப்பற்றாக்குறை நீங்கும். ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். தொலைபேசித் தகவல் ஆதாயம் தரும். உதவும் குணம் அதிகரிக்கும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். உடன்பிறப்பால் உதவி உண்டு. படிப்பில் கவனம் வேண்டும். முதுகில் வலி வந்து நீங்கும். சம்பள உயர்வு கிட்டும். சக ஊழியர்கள் உதவி உண்டு. உடல் ஆரோக்கியம் கூடும். வியாபாரம் லாபம் தரும். பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். ஆண்கள் அதிகாரம் உயரும். பெரியோர்களின் ஆதரவு பெருகும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். விளையாட்டுத் துறையில் கவனம் தேவை. வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். மற்றவர்களிடத்தில் கவனம் தேவை. குடும்பத்தில் குதூகலம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அங்காரகன், அதிர்ஷ்ட எண்: 4,8,9,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,Y




**கன்னி:** வேண்டாத விஷயங்கள் விலகும் வாரம். நிர்வாகத்தில் நிதானம் தேவை. விவாக முயற்சி வெற்றி தரும். காதல் கைகூடும். வியாபாரத் தடை ஏற்படும். ஆரோக்கியம் கவனம் தேவை. உடல் உபாதை நீங்கும். உறவினரால் பணவிரயம் உண்டு. குடும்ப வளர்ச்சி கூடும். ஸ்திர சொத்து சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களால் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். ஆபரணச் சேர்க்கை உண்டு. பெற்றோர்களின் ஆசி கிட்டும். எதிர்ப்புகள் விலகும். திடீர் பயணம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். இடமாற்றம் உண்டு. கல்வியில் கவனம் வேண்டும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பயணத் தடை ஏற்படும். விரும்பிய பொருள் கிடைக்கும். கல்வி ஆர்வம் கூடும். தொழில் லாபம் தரும். பங்குச்சந்தையில் லாபம் தரும். பாதகம் விலகும். பதவி உயர்வு கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. பூமி லாபம் உண்டு. பெற்றோர் ஆசி கிடைக்கும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். போதாத காலம் விலகும். தோதான எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். வெற்றிச்செய்தி வரும். கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். விறுவிறுப்பான காலம். உடல்பொலிவு கூடும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக கணபதி, அதிர்ஷ்ட எண்: 2,4,2,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,L




**துலாம்:** பாராட்டுக்கள் கிடைக்கும் வாரம். பரபரப்பான சூழ்நிலை மாறும். புதிய முயற்சி வெற்றிதரும். பெரிய திருப்பம் ஏற்படும். கடன் கொடுப்பதை தவிர்க்கவும். சகோதரியால் நன்மை உண்டு. படிப்பில் கவனம் தேவை. போட்டிகள் வெற்றி தரும். இறுகிய நிலை மாறும். பணிமாற்றம் நன்மை தரும். தனவரவு உற்சாகம் தரும். செயலில் வேகம் கூடும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப கௌரவம் ஓங்கும். வெற்றி நிலை தொடரும். ஏற்றமான தருணம் அமையும். ஆபரணப் பொருட்கள் சேரும். மாணவர்களுக்கு மதிப்பெண் சேரும். எண்ணிய காரியம் கைகூடும். எதிர்பாரா லாபம் சேரும். நடவடிக்கையில் மாற்றம் வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். பதவியில் உயர்வு வரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். பயணம் நன்மை தரும். அளவான பேச்சு நன்மை தரும். கடன் உபத்திரவம் குறையும். உறவினர் பாராட்டும் கிட்டும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். பெண்களின் திறமை பெருமை தரும். கற்பனை ஆற்றல் பெருகும். தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். மாற்று எண்ணம் உதயமாகும். இல்லத்தில் நல்லவை நடக்கும். இனிய வாய்ப்பு கூடி வரும். புதிய உத்தியோகம் அமையும். விவசாயம் கை கொடுக்கும். பிரச்சனைகள் முடிவிற்கு வரும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல்நலம் சீராகும். வியாபாரம் சுமாராக இருக்கும். ஊதிய உயர்வு கிட்டும். அலைச்சல்கள் அதிகரிக்கும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். திருப்தி பெருகும். நிர்வாகச் செலவுகள் கூடும். உடல் உஷ்ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். தேக ஆரோக்கியம் மிளிரும். தொழில் அபிவிருத்தி ஏற்படும். மாணவர்கள் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சமுக ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 6,3,1,2
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,M

(தொடர்ச்சி 22 பக்கம்)

# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும்
1201



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கண்ணகி அம்மன் ஆலயம்
## வற்றாப்பளை

கோவிலிலே கடமை யாற்றும் பூசாரியாருடன், இக்கிராமத்திலுள்ள இரு சமூகப்பிரிவிலிருந்து ஒவ்வொருவராக வந்து, மூவருமாக வற்றாப்பளை, முள்ளியவளை, தண்ணீரூற்று, சிலாவத்தை, புதுக்குடி யிருப்பு, குமுழமுனை, வட்டுவாகல் ஆகிய ஏழு கிராமங்களுக்குச் செல்வர். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு வீடாக ஏழுவீடுகளுக்குச் சென்று, தெட்சணைப்பொருட்களாக வெற்றிலை, பாக்கு, மஞ்சள் போன்றவற்றைப் பெற்று, இப்பொருட்களைக் காட்டாவிநாயகர் என அழைக்கப்படும் கோவிலுக்கு எடுத்துச் செல்வர். இவ்வாறு பொங்கல் நடைபெறுவது பற்றிய விபரங்களை அறிவிப்பதையே, வைகாசி முதல் திங்களில் நடைபெறும், பாக்குத் தெண்டல் எனப்படும் நிகழ்வு புலப்படுத்துகின்றது. வைகாசி மாதத்து இரண்டாவது திங்கட்கிழமை, தீர்த்தம் எடுத்தல் என்னும் புனிதமான நிகழ்வு இடம்பெறும். பாக்குத் தெண்டு செய்பவர்களே தீர்த்தம் எடுக்கும் கடமையையும் செய்வர். கண்ணகை அம்மன் சிறுவர்களுக்குக் காட்சி கொடுத்தபொழுது, நந்திக்கடல் நீரேரியில் தீர்த்தம் எடுத்து விளக்கேற்றிய சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டு இச் செயல் நடைபெறுகின.

பாக்குத் தெண்டியத்திலிருந்து விரதமிருந்து, தீர்த்தமெடுக்குந் தினத்தன்று முழுநாளும் உபவாசமிருந்தே தீர்த்தமெடுப்பர். தீர்த்தமெடுத்தலைக் காட்டா விநாயகர் ஆலயத்தினரே செய்து வருகின்றனர். சிலம்புகூறல் பாட்டிலே வற்றாப்பளைக் கணணகிக்கும், காட்டாவிநாயகர் ஆலயத்திற்குமுள்ள தொடர்பு கூறப்பட்டுள்ளது. சிலம்புகூறல் பாட்டிலே கூறப்பட்டவாறு, "வைகாசித் திங்களில் வருவேன் ஒரு கிழமை காட்டாவிநாயகர் கோவிலுக்கே" என்ற வாக்கிற்கமைய காட்டாவிநாயகர் ஆலயத்தினரே தீர்த்தமெடுக்கும் புனிதப்பணியைச் செய்து வருகின்றனர்.

ஆரம்பகாலங்களில், கண்ணகி அம்மன் சிறுவர்களிடம் கூறியதற்கிணங்க, நந்திக்கடல் நீரேரியிலேயே தீர்த்தமெடுத்துள்ளனர். பிற்காலத்தில் இக்கடலேரி தண்ணீர் குறைந்து காணப்பட்டமையினால், தற்காலத்தில் சிலாவத்தைக் கடலிலே தீர்த்தமெடுக்கும் வழக்கம் காணப்படுகின்றது. தீர்த்தமெடுப்பவர் கடல்நீருள் அழிழ்ந்து தீர்த்தம் எடுக்கவேண்டும். இவ்வாறு மூழ்கி எடுப்பதற்குரிய ஆழம் நந்திக்கடல் நீரேரியில் இல்லாமையாலேயே, சிலாவத்தைக் கடலில் தீர்த்தம் எடுக்கப்படுகின்றது. பரம்பரையாகத் தீர்த்தமெடுப்பவர், தீர்த்தமெடுக்கச் செல்லுமுன், பல கிரியைகளைச் செய்ய வேண்டும். முதலில் தீர்த்தமெடுப்பவருடைய வாய் வெள்ளைத் துணியால் கட்டப்படும். இவர் மௌனமாகத் தீர்த்தக்குடத்தினைத் தோளில் வைத்தவாறு, சிலாவத்தைக் கடலை நோக்கிப் பவனியாக அழைத்துச் செல்லப்படுவார். இப்பவனி காட்டாவிநாயகர் கோவிலிலிருந்து புறப்பட்டு, முள்ளியவளை வற்றாப்பளை வீதி வழியாக, பள்ளவெளி, பொதறிகுடா என்ற இடங்களைத் தாண்டி, ஊற்றங்கரைக் கோவிலை வந்தடையும். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு, நீராவிப்பிட்டிப் பாதையூடாக, ஆலடிச் சந்திக்குச் சென்று, முல்லைத்தீவு பிரதானவீதி வழியாக, சிலாவத்தைக் கிராமத்தை அடையும். பின்னர் அங்கிருந்து புறப்பட்டுத் தீர்தம் எடுப்போர், சிலாவத்தைப் பெருங்கடலை நோக்கிப் புறப்படுவர். ஏறக்குறையக் கால்நடையாகச் செல்லும் இப்பவனி, பத்து மைல் தூரத்தை கடந்தே சிலாவத்தைக் கடலை அடையும்.

சிலாவத்தையில் தீர்த்தப் பவனி வந்தடைந்ததும், இங்கு அமைக்கப்பட்டுள்ள கோவிலில் பூசைகள் ஆரம்பமாகும். முதலில் தீர்த்தக் குடத்திற்கான பூசை நடைபெறும். தொடர்ந்து கடலிலே தீர்த்தமெடுக்கும் நிகழ்ச்சி ஆரம்பமாகும். தீர்த்தக்குடத்தைத் தோளில் தாங்கியவரை, மேளதாளத்துடன் தீர்தக்கரைக்கு அழைத்துச் செல்வர். அங்கு தீர்த்தக்குடத்திற்கும், கடல்தீர்த்தத்திற்கும் தீபாராதனை செய்யப்படும். இவை முடிவுற்றதும் தீர்த்தம் எடுப்பவரை, இருவர் இருபக்கக் கைகளிலும் பிடித்துக் கொண்டு, இடுப்பளவு ஆழமுள்ள பகுதிக்கு அழைத்துச் செல்வர். இவ்வேளையில் கடல் கொந்தளித்துப் பேரலைகள் எழும்புவது வழக்கமாகும். இவ்வாறு அலை உயர்ந்து பேரலையாக வரும் பொழுது, தீர்த்தக்குடம் வைத்திருப்பவரை, அருகிலுள்ள இருவரும் ஒரு சில கணம் நீருள் அமிழ்த்திப் பிடிப்பர். அவ்வேளையில் தீர்த்தக் குடம் நிரம்பியதும், மீண்டும் அவரைக் கரையிலுள்ள கோவிலுக்கு அழைத்து வருவர். இங்கு தீர்த்தக்குடத்திற்குப் பூசைவழிபாடுகள் இடம்பெறும். இவ்வேளையில் தீர்தக்குடம் எடுத்தவரும், ஏனையோரும் ஈர உடையை மாற்றிப் பூசை வழிபாடுகளில் கலந்துகொள்வர்.

சிலாவத்தைக் கடற்கரையிலுள்ள கோவிலில் பூசை வழிபாடுகள் நடைபெற்ற பின், மீண்டும் தீர்தக்குடத்தைத் தோளில் வைத்துத் தீர்த்தப்பவனி ஆரம்பமாகும். இப்பவனி சிலாவத்தைக் கிராமத்திற்குள் வரும் வழியெங்கும், மகர தோரணமிட்டு, அலங்கரித்து, பந்தல்கள் அமைத்து, நிறைகுடம் வைத்துத் தேங்காய் உடைத்துத் தீர்த்தக்குடத்தை வரவேற்பர். இங்கிருந்து சிலாவத்தைக் கண்ணகி கோவிலுக்குச் சென்று, இங்கும் பூசை வழிபாடுகள் நடைபெறும். மீண்டும் பவனி ஆரம்பித்துக் காட்டாவிநாயகர் கோவிலை இறுதியில் சென்றடையும். வழியெங்கும் வரவேற்புக்கள் வழங்கப்படுவதோடு, செல்லும் வழியிலுள்ள ஊற்றங்கரை ஆலயத்தில், மிகப் பெரிய வரவேற்பு அளிக்கப்படும். இவ்வாறு பவனியாகக் கொண்டு வரப்பட்ட தீர்த்தத்தில் விளக்கேற்றும் வைபவம் இடம்பெறும். தீர்த்தக்குடத்திலிருக்கும் தீர்த்தம், சிறிய புதிய மண்பானையில் வார்க்கப்பட்டு, அதன் வாய்பகுதி வெள்ளைத் துணியால் கட்டப்பட்டு, மத்தியில் துவாரம் இடப்படும். அத் துவாரத்தினூடாகத் திரியிட்டுத் தீபம் ஏற்றப்படும். தீர்த்தத்தில் விளக்கேற்றப்படும் வைபவம் அடுத்த ஞாயிறுவரை ஒரு வார காலத்திற்கு இடம்பெறும். ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து மீதித் தீர்த்தத்தை நடைபவனியாக, வற்றாப்பளைக் கண்ணகிஅம்மன் ஆலயத்திற்குக் கொண்டுவருவர். வற்றாப்பளைக் கண்ணகிஅம்மன் கோவிலில், மீதித்தீர்த்தத்தில் விளக்கேற்றும் வைபவம் நடைபெறும்.

கடல் நீரில் தீபம் ஏற்ற முடியுமா? எனக் கேள்வி எழுப்பியோர், இச்செயலை நம்ப மறுத்தனர். எனவே இச் செயலை விஞ்ஞானரீதியாகப் பரீட்சித்துப் பார்க்க முயன்றனர். இவ்வாறன ஆய்வுகள் பல தடவைகள் நடைபெற்றது. 1964 ஆம் ஆண்டு கொழும்பி லிருந்து வந்த ஆய்வாளர்கள், தீர்த்தத்தில் தீபம் எரிவதைப்பற்றி ஆய்வு செய்தனர். எனினும் எவ்வித முடிவும் கண்டறியப்படாது திரும்பினர். மீண்டும், 1970 ஆம் ஆண்டிலும் இவ்வாறான ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இவர்கள், கடல்நீரிலே காணப்படும் உப்புக் கரைசல், தீபத்தை ஏற்றும்போது நெருப்பு எரியக்கூடிய ஒரு பொருளாக மாறுகின்றது எனப் பொருந்தாத, ஆதாரமற்ற கருத்தை முன்வைத்தனர். இக்கருத்தை ஆய்வுபூர்வமான முடிவாக எவரும் ஏற்கவில்லை. இன்றுவரை தீர்த்தநீரிலே தீபமேற்றுவது பற்றிய விளக்கத்தை, எந்த விஞ்ஞானிகளாலும் கொடுக்க முடியவில்லை. அறிவுக்கும், மனித ஆற்றலுக்கும் மேற்பட்ட அற்புதமென்றே இதனைக் கொள்ளமுடியும்.

வளரும்..

# அமைதியாய் இறக்கும் எம்மவரின் இருப்பிடமான "செம்மணி" எவ்வாறு இலங்கையின் மிகப்பெரிய புதைகுழியாக மாறியது?

இலங்கை செய்திகள்
Sri Lanka News



சிறுவர்கள் மற்றும் கைக்குழந்தைகள் உட்பட 380 மனித உடல்களுக்குச் சொந்தமான எலும்புகள் மீட்கப்பட்டதை அடுத்து, போரினால் பாதிக்கப்பட்ட வட பகுதியில், ஒரு வருடத்திற்கு முன்பு தற்செயலாகக் கண்டறியப்பட்ட மனிதப் புதைகுழி, நாட்டின் மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக மாறியுள்ளது.

2025 மே 15 ஆம் திகதி முதல் 2026 ஜூன் 17 ஆம் திகதி வரை கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலான காலப்பகுதியில், மூன்று கட்டங்களின் அடிப்படையில், செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியில் 81 நாட்கள் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சியில், 380 மனித உடல்களுக்கு உரிய எலும்புக் கூடுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் 362 மனித உடல்களுக்கு உரிய முழுமையான அல்லது பகுதியளவிலான எலும்புக்கூடுகள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன. அத்தோடு அகழ்வுப் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சித்திரவதைக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் குழுவின் பிரதிநிதிகள் குழுவொன்று இலங்கைக்கு கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்த வேளையிலேயே, ஜூலை 17 ஆம் திகதியன்று மனிதப் புதைகுழியிலிருந்து மேலும் 14 பேருக்குச் சொந்தமான எலும்புகள் புதிதாக மீட்கப்பட்டுள்ளன.

செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியிலிருந்து மனித எலும்புகளுடன் இதுவரை தோண்டி எடுக்கப்பட்ட சுமார் 120 பாவனைப் பொருட்களில், குழந்தைகளுக்கான பால் போத்தல்கள், பொம்மை உட்பட விளையாட்டுப் பொருட்கள், சிறுவர் காலணிகள், பாடசாலைப் பைகள் மற்றும் சில நாணயங்களும் அடங்குகின்றன.

நீதிமன்ற உத்தரவின் பேரில், தடயவியல் தொல்பொருள் ஆய்வாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ மற்றும் யாழ்ப்பாண சட்ட மருத்துவ அதிகாரி செல்லையா பிரணவன் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ், யாழ்ப்பாணம் செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழியின் அகழ்வாராய்ச்சிப் பணிகள் முதன்முறையாக 2025 மே 15 ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டன.

செம்மணி சித்துபாத்தி மனிதப் புதைகுழி நாட்டின் மிகப் பெரிய மனிதப் புதைகுழியாக மாறியுள்ள நிலையில், 28 சிறுவர்கள் உட்பட 376 மனித உடல் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்ட இலங்கையின் மிகப் பெரிய மனிதப் புதைகுழியாகக் கருதப்பட்ட, மன்னார் சதொசா மனிதப் புதைகுழி, தற்போது இலங்கையின் இரண்டாவது மிகப் பெரிய மனிதப் புதைகுழியாக மாறியுள்ளது.

2013 ஆம் ஆண்டில் மாத்தளை வைத்தியசாலைக்கு அருகிலுள்ள காணியொன்றில் இருந்து 155 சடலங்கள் தோண்டி எடுக்கப்பட்டதுடன், அது இலங்கையில் கண்டறியப்பட்ட மூன்றாவது மிகப்பெரிய மனிதப் புதைகுழியாகக் கருதப்படுகிறது.

சுமார் 106 பேருக்குச் சொந்தமான எலும்புக்கூடுகள் மீட்கப்பட்ட, கொழும்பு துறைமுக மனிதப் புதைகுழி, இலங்கையின் நான்காவது மிகப்பெரிய மனிதப் புதைகுழியாகக் கருதப்படுகிறது.

2013 ஆம் ஆண்டிலேயே 82 மனித உடல்களின் எலும்புக்கூடுகள் தோண்டி எடுக்கப்பட்ட மன்னார், திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி தற்போது ஐந்தாவது மிகப்பெரிய மனிதப் புதைகுழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. ஆறாவது மிகப்பெரிய மனிதப் புதைகுழியான கொக்குத்தொடுவாய் புதைகுழியின் அகழ்வாராய்ச்சிப் பணிகள் நிறைவடைந்தபோது, 52 பேருக்குச் சொந்தமான எலும்புக்கூடுகள் தோண்டி எடுக்கப்பட்டிருந்தன.

இந்த அனைத்து மனிதப் புதைகுழிகளும் தற்செயலாக கண்டறியப்பட்டவையே தவிர, அரசாங்கத்தின் விசாரணைகள் மூலம் கண்டறியப்பட்டவையல்ல.

இலங்கையில் இதுவரை 17 மனிதப் புதைகுழிகள் கண்டறியப்பட்டுள்ளன என்பதனை, கடந்த வருடம் தனியார் தொலைக்காட்சியொன்றில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்ட போதே, முதன்முறையாக நீதி அமைச்சர் சட்டத்தரணி ஹர்ஷன நாணாயக்கார வெளிப்படுத்தியிருந்தார்.

# இவ்வார ராசிபலன்

( 20 பக்கம் தொடர்ச்சி)




**விருச்சிகம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். நிர்வாக வாய்ப்பு கூடும். வருமானம் சேரும். உடல் உபாதை தீரும். கொள்கையில் பிடிப்பு சேரும். கொடுக்கல், வாங்கலில் நன்மை சேரும். உறவினரால் தொல்லை நேரும். மாற்றம் ஏற்படும். தீய எண்ணங்கள் விலகும். புதிய தொழில் வாய்ப்பு கூடும். விவாதம் தவிர்ப்பது நல்லது. பெற்றோர் நலம் கவனம் தேவை. சகோதர விசுவாசம் கூடும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. பயணம் லாபம் தரும். கமிஷன் தொழில் லாபம் தரும். உத்தியோக ஏற்றம் உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். பணம் புரளும். பூமியால் லாபம் உண்டு. வருமானம் திருப்தி தரும். கூட்டுத்தொழில் நன்மை தரும். வீண் செலவுகள் தவிர்க்கவும். வேலை பளு அதிகரிக்கும். பொறாமைகள் விலகும். புதிய பொருள் சேரும். வழக்குகள் திருப்பம் தரும். புண்ணியம் சேரும். சந்தர்ப்பம் சாதகம் உண்டு. ஆரோக்கியம் கூடும். உணவு விடுதி லாபம் தரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். மனைவி உடல்நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். உஷ்ணம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். நண்பரால் செலவு உண்டு. கால்நடைகளால் பலன் உண்டு. புதிய பதவிகள் கிட்டும். தன்னம்பிக்கை கூடும். வேண்டாத நபர் விலகுவர். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கைகூடும். வாகன அபிவிருத்தி உண்டு. எந்திர தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 1,5,3,9

அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம் அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,V




**தனுசு:** தேக ஆரோக்கியம் கூடும் வாரம். வருமானத் தடை உண்டு. வாய்ச்சொல் பலன் தரும். புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். பிள்ளைகள் கல்வி மேம்படும். தொல்லைகள் குறையும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். கண்ணாடிப் பொருள் சேதம் தரும். கல்வி மேன்மை தரும். புதிய முயற்சி பலன் தரும். இனிய எண்ணம் உதயமாகும். பழைய கடன் ஒழியும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும். நினைத்தது நிறைவேறும். அரசாங்க அனுகூலம் உண்டு. நிர்வாகத் திறமை அதிகரிக்கும். தன்னம்பிக்கை கூடும். வீடு, மனை யோகம் உண்டு. இன்றைய பிரார்த்தனை நன்மையை கூட்டும். மனிதநேயம் மிகுதியாகும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர் திறமை பளிச்சிடும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். பொருள் வரவு திருப்தி தரும். வாய்ப்புக்கள் கூடி வரும். கூட்டுத்தொழில் மோசடி ஏற்படும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். புதிய பதவிகள் கிட்டும். தன்னம்பிக்கை கூடும். வேண்டாத நபர் விலகுவர். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். காரியம் கைகூடும். வாகன அபிவிருத்தி உண்டு. எந்திர தொழில் லாபம் தரும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: தர்ம சாஸ்தா, அதிர்ஷ்ட எண்: 4,2,1,3

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,C




**மகரம்:** சிறப்புக்கள் சேரும் வாரம். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. வழக்குகள் சாதகமாகும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. விரயங்கள் கூடும். பயணங்கள் பலன் தரும். மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழைய கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. உற்சாகம் அலைமோதும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். கடன் தொல்லை அகலும். குடும்ப ஒற்றுமை மேம்படும். விவேகம் வெற்றி தரும். பயணம் அனுகூலம் தரும். வாகன நன்மை உண்டு. நண்பர்களின் பேச்சு ஆறுதல் தரும். மனநிலையில் மாற்றம் ஏற்படும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். இனிக்கும் செய்திகள் வரும். நினைத்தது நடக்கும். தொட்டது துலங்கும். பந்தாவும் குறையாது. பாக்கெட்டில் காசும் கரையாது. தொலைதூர தொடர்பு லாபம் தரும். முதலீடு உண்டாகும். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை அதிகரிக்கும். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். மனக்கசப்பு வந்து நீங்கும். வீடு, மனை ஆசைகள் நிறைவேறும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். புதிய கடன் வாங்க நேரிடும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கும், மாணவர்களுக்கும் சாதகமான காலம். சகோதரியினால் நன்மை உண்டு. களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 4,5,3,7

அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,O




**கும்பம்:** கலை ஈடுபாடு அதிகரிக்கும் வாரம். புதிய தொழில் வாய்ப்புகள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். குழப்பங்கள் அகலும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். புதிய கடன் வாங்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லைகள் அகலும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உடல் ஆரோக்கியம் சீராகும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். செய்தொழில் லாபம் தரும். புதிய நட்பில் கவனம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்பு கூடி வரும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். மன ஆரோக்கியம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். செய்தொழில் லாபம் தரும். புதிய நட்பில் கவனம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்பு கூடி வரும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 3,2,7,9

அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,L



**மீனம்:** தொட்டது துலங்கும் வாரம். வழக்கு வெற்றித்தரும். புத்திர வழியில் தொல்லையுண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. வியாபார வாய்ப்பு உண்டு. கடன் பிரச்சனை தீர்வு உண்டு. கல்வியில் ஏமாற்றம் அடைவர். மேலதிகாரியின் ஆதரவு உண்டு. குடும்பத்தில் சஞ்சலம் உண்டு. தனவரவில் தாமதம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. கட்டிடத்தொழில் லாபம் தரும். விவசாயம் கவனம் தேவை. ஜீவராசிகளுக்கு உணவு அளித்தல் யோக பலன் கூடும். வீண் வம்பு தேடி வரும். வியாபாரம் திருப்தி தரும். பழைய நட்பால் பண விரயம் கூடும். புதிய சிந்தனை உருவாகும். கலை ஆர்வம் கூடும். கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். காரியத் தடை அகலும். கூட்டுத்தொழிலில் கவனம் தேவை. இரும்புத்தொழில் லாபம் உண்டு. இல்லத்தில் மகிழ்ச்சி உண்டு. புத்திரரால் பூரிப்பு உண்டு. போட்டிகள் மறையும். தொல்லைகள் ஒழியும். வில்லங்கம் விலகும். நலிந்த வாழ்வு மேன்மை தரும். நல்லவர் நட்பு கூடி வரும். பொருள் சேர்க்கையுண்டு. வரவுகள் மிகுதியுண்டு. ஆரோக்கியம் பாதிக்கும். படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். உடல் உபாதை அதிகமாகும். குடும்ப ஒற்றுமை நிறையும். குதூகலம் அதிகமாகும். மனோபயம் நீங்கும். மருத்துவச் செலவு குறையும். கனவுத்தொல்லை உண்டு. நிதி நிலைமை சீராகும். எதிர்மறை எண்ணம் உருவாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பிணிகள் நீங்கும். பல்வலி வந்து நீங்கும். பெண்களின் கௌரவம் உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குல தேவதை, அதிர்ஷ்ட எண்: 2,1,3,9

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J

# "செம்மணியில் குடும்பம் குடும்பமாகக் கொல்லப்பட்டுப் புதைக்கப்பட்ட எமது மக்கள் தொடர்பாக சர்வதேச ஆய்விற்காக காத்திருந்து ஓராண்டாகின்றதே?"

## செம்மணி விவகாரத்தில் நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என சுமந்திரன் கடும் சாடல்



**- ந.லோகதயாளன்**

யாழ்ப்பாணம் - செம்மணி மனிதப் புதைகுழியில் அகழ்ந்து எடுக்கப்படும் மனித என்புத் தொகுதிகளை, அதிகூடிய நிபுணத்துவம் வாய்ந்த சர்வதேசப் பல்கலைக்கழகங்கள் அல்லது ஆய்வகங்களுக்குப் பரிசோதனைக்காக அனுப்ப வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டு ஓராண்டு கடந்தும், இதுவரை அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என்று சட்டத்தரணியும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தற்காலிக பொதுச்செயலாளருமான எம்.ஏ.சுமந்திரன் குற்றம் சாட்டியுள்ளார்.

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பாக 18ம் திகதி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது: "செம்மணி மனிதப் புதைகுழியிலிருந்து இதுவரை 380ஆவது என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இதன் மூலம், இலங்கையிலேயே அதிக எண்ணிக்கையான என்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்ட மிகப்பெரிய புதைகுழியாகச் செம்மணி உருவெடுத்துள்ளது. இதற்கு முன்னர் மன்னார் "சதொச" புதைகுழியில் 376 என்புத் தொகுதிகள் கண்டெடுக்கப்பட்டதே அதிகப்படியாக இருந்தது. செம்மணியில் அகழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கு இன்னும் பல பகுதிகள் எஞ்சியுள்ளன.

இங்கு வெறுமனே ஆண்கள் மட்டுமல்லாது பெண்கள், குழந்தைகள், சிறுவர்கள் எனப் பலரது என்புத் தொகுதிகள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. இதன் மூலம், இங்கு மக்கள் குடும்பம் குடும்பமாகக் கொல்லப்பட்டு, திட்டமிட்டுப் புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது தெட்டத்தெளிவாக நிரூபணமாகின்றது. எனவே, இதுவொரு சாதாரண மனிதப் புதைகுழி அல்ல.

கடந்த 1998ஆம் ஆண்டு இராணுவ வீரர் ஒருவர், இந்தச் செம்மணிப் பகுதியில் 300 முதல் 400 வரையான உடல்கள் புதைக்கப்பட்டிருப்பதாக வாக்குமூலம் அளித்ததைத் தொடர்ந்து, அப்போது முதற்கட்ட அகழ்வுகள் இடம்பெற்றன. அதன்போது 15 என்புத் தொகுதிகள் மீட்கப்பட்டு, வெளிநாட்டுப் பல்கலைக்கழகத்துக்கு ஆய்வுக்காக அனுப்பப்பட்டதில் இரண்டு உடல்கள் அடையாளம் காணப்பட்டன.

அதேபோன்றே, தற்போது அகழ்ந்து எடுக்கப்படும் என்புத் தொகுதிகளையும் அதிகூடிய நிபுணத்துவம் வாய்ந்த சர்வதேசப் பல்கலைக்கழகங்களுக்கு அல்லது சர்வதேசத் தரம் வாய்ந்த ஆய்வகங்களுக்கு அனுப்பக் கோரியிருந்தோம். நீதிமன்றமும் அதற்கான உத்தரவை வழங்கியிருந்தது.

என்புத் தொகுதிகளைத் தோண்டி எடுப்பது என்பது ஆரம்பகட்ட வேலை மட்டுமே. ஆனால், அவை யாருடையவை என்பதை அடையாளம் காண்பதே மிக முக்கியமானது. துரதிர்ஷ்டவசமாக, அதற்கான பணிகள் ஓராண்டாகியும் இன்னும் முடக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் என்புத் தொகுதிகளை மரபணு சோதனை மூலம் ஆராய்வதற்கான போதிய நிபுணத்துவம் இல்லை என்றால், நாம் சர்வதேச நிபுணத்துவத்தை நாடுவோம் என்று தற்போதைய நீதி அமைச்சர் மிகத் தெளிவாகக் கூறியிருந்தார். அவர் நாளை வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து, செம்மணி அகழ்வுப் பணிகளை நேரில் பார்வையிடவுள்ளார்.



எனவே, இந்த விடயத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்பட வேண்டும். அகழ்ந்து எடுக்கப்படும் என்புத் தொகுதிகள் யாருடையவை என்பது கண்டறியப்பட்டு, இந்த கொடூரக் குற்றங்களுக்குக் காரணமானவர்களுக்கு எதிராகத் தாமதமின்றிச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." - என்றார்.

# MORTGAGE

## FINANCIAL SOLUTIONS

- COMMERCIAL
- RESIDENTIAL
- VACANT LAND
- INDUSTRIAL
- CONSTRUCTION



## OUR SERVICE



- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US

**NESAN**

**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation

NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · NATIONAL BANK · RFA · FIRST NATIONAL FINANCIAL LP · Manulife · Desjardins · MCAP · HOME TRUST · EQUITABLE BANK · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**




இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய *$30.00* மட்டுமே!
416-752-1524




29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்




உதயம் 1576 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 19, 2026

# உலகத் தமிழறிஞர்களின் கவனத்தை ஈர்த்த "செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும்" என்னும் அனைத்துலகத் தமிழர் மாநாடு 2026

## கனடாவில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டிற்காக இதுவரை 497 ஆய்வுச் சுருக்கங்கள் கிடைக்கப்பெற்றுள்ளமை நம்பிக்கை தரும் தகவல்



கனடா வாழ் செயற்பாட்டாளர் நிமால் விநாயகமூர்த்தி அவர்கள் தலைமையில் இயங்கிவரும் அனைத்துலகத் தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் "செய்யறிவு உலகில் செம்மொழித் தமிழும் தமிழரும்" என்ற தலைப்பின் கீழ் அனைத்துலகத் தமிழர் மாநாடு எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 15 ஆம் திகதி முதல் 18 ஆம் திகதி வரை கனடாவின் ரொறன்ரோ மாநகரில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாட்டை முன்னிட்டு 5 தலைப்புகளின் கீழ் உலகம் முழுவதுமுள்ள தமிழறிஞர்கள், கல்வியாளர்கள் மற்றும் ஆய்வாளர்களிடமிருந்து ஆய்வுக் கட்டுரைகள் கோரப்பெற்றிருந்தன. அதற்கான ஆய்வுச் சுருக்கங்களை கடந்த யூன் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பிவைக்குமாறு அறிவிக்கப்பெற்றிருந்த நிலையில், உலகிலுள்ள பல நாடுகளிலிருந்தும் மொத்தமாக 497 ஆய்வுச்சுருக்கங்கள் எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளன.
(தொடர்ச்சி 19ம் பக்கம்)

# இலங்கை பரதக் கலைஞர் "கலாசூரி" திவ்யா கஜேன் அவர்களுக்கு கனடா – குரும்பசிட்டி நலன்புரி சபை வழங்கிய "பரத லய ஞான பாரதி" என்னும் பட்டம்

கலை மலிந்த பூமியாக போர்ச்சூழலுக்கு முன்புவரை மிளிர்ந்து வந்த குரும்பசிட்டி மண்ணின் மகளான " கலாசூரி" திவ்யா சுஜேன் அவர்கள் கனடா வந்துள்ளார். பரதம் மற்றும் மிருதங்க கலாவித்தகரான இவரை 14.06.2026 ஞாயிறு மாலை குரும்பசிட்டி நலன்புரி சபை-கனடா வரவேற்று, ஒன்றுகூடல் நிகழ்வினை நடத்தியது. மன்றத்தலைவர் திருமதி. கணேஷ் குகநேசன் தலைமையில் நடந்த இவ்விழாவில் மண்டபம் நிறைந்த உறவு-களோடும் ஊர் மக்களோடும் திவ்யா அவர்களுக்கு " பரத லய ஞான பாரதி" பட்டம் சூட்டி கௌரவம் செய்யப்பட்டது. அன்றைய நிகழ்வில் நூற்றுக்கணக்கானவர்கள் மிகுந்த உற்சாகத்தோடு கலந்து கொண்டு பட்டம் பெற்ற " கலாசூரி" திவ்யா சுஜேன் அவர்களை வாழ்த்திச் சென்றார்கள்.
(தொடர்ச்சி 13ம் பக்கம்)




# LUCKY EXCLUSIVE FOUNDATIONS அமைப்பு நடத்திய INTRERNATIONAL CHILDREN'S EXPO வணிக மற்றும் கலாச்சார விழா




**LUCKY EXCLUSIVE FOUNDATIONS** அமைப்பு நடத்திய **IN-TRERNATIONAL CHILDREN'S EXPO** என்னும் வணிக மற்றும் கலாச்சார விழா பிக்கரிங் நகரத்தில் உள்ள **Chestnut Hill Development Recreation Complex -Pickering** அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.
அரங்கத்தின் அழகிய மேடை. அதில் கலாச்சார மற்றும் பண்பாட்டு நடனங்கள் மற்றும் பாடல் நிகழ்ச்சிகள் அத்துடன் பயனுள்ள உரைகள். அரசியல் தலைவர்களின் ஆதரவான கருத்துக்கள் மற்றும் விளம்பரங்களின் காட்சிப் படுத்தல் ஆகியவை நிறைவான முறையில் அந்த மேடை நன்கு பயன்படுத்தப்பெற்றால் என்றால் அது மிகையாகாது.
ஏனைய பகுதிகளில் பல தமிழர் வர்த்தக நிறுவனங்கள் மற்றும் பல்லின கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் ஆடை ஆபரணங்கள் மற்றும் கலாச்சார உடைகள் விற்பனை செய்யும் காட்சிக் கூடங்கள் திறந்திருந்தன.
இங்கு காணப்படும் படத்தில் மாகாண பாராளுமன்ற உறுப்பினர் லோகன் கணபதி அமைப்பாளர் ரவி அச்சுதன் தம்பதி மற்றும் அமைப்பில் அங்கம் வகிக்கும் இருபதிற்கும் மேற்பட்ட பெண்மணிகள் இணைந்து மேடையில் மகிழ்ச்சியுடன் காணப்படுகின்றனர்.

# கல்முனை – பாண்டிருப்பு நாவலர் அறநெறி பாடசாலை மாணவர்களின் தேவைக்காக "உதவும் பொற்கரங்கள் கனடா "அமைப்பினால் இசைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன

கல்முனை -பாண்டிருப்பு நாவலர் அறநெறி பாடசாலை மாணவர்களின் ஆக்கத்திறன் மற்றும் கலைத்திறனை மேம்படுத்தும் நோக்கில், இசைக்கருவிகளை கொள்வனவு செய்வதற்கான நிதி உதவி, உதவும் பொற்கரங்கள் கனடா அமைப்பினால் வழங்கப்பட்டுள்ளது.
அறநெறிப்பாடசாலை அதிபர் திரு லக்குணம் விடுத்திருந்த வேண்டுகோளின் அடிப்படையில், குறித்த நிதி 14-06-2026 அன்று பாடசாலை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வில் வழங்கி வைக்கப்பெற்றது. நிகழ்வில், உதவும் பொற்கரங்கள் அமைப்பின் நிறுவனர் விசு கணபதிப்பிள்ளையின் ஏற்பாட்டில், தாயக இணைப்பாளர் திரு என். சௌவியதாசன், ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு கன. வரதராஜன் மற்றும் ஓய்வுபெற்ற ஆசிரிய ஆலோசகர் திரு கா. சாந்தகுமார் ஆகியோர் கலந்துகொண்டு நிதியை கையளித்தனர்.
(தொடர்ச்சி 6ம் பக்கம்)

